# புத்த ஞாயிறு

2982

ப. ராமஸ்வாமி

UNIVERSITY EXTENSION LIBRARY
30 APR 1961
MADURAI

விற்பனையாளர் :
பாரதி புத்தக நிலையம்
மதுரை

முதற் பதிப்பு : 1956

வெளியிடுவோர் :

கன்னித் தமிழ்ப் பதிப்பகம்

மதுரை

14680

விலை ரூ. 3

பரிசு ரூ. 4

துன்முகி, வைகாசி - 11. புத்த ஜயந்தி வெளியீடு.

அசோகா பிரிண்டர்ஸ், மதுரை - 56,

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# உள்ளுறை

1. புத்த ஞாயிறு ... ... ... 7

2. வேதங்களும் வைதிக சமயங்களும் 75

3. நான்கு தீர்க்கதரிசிகள் ... 100

4. தேவகுமாரரும் திருநபியும் ... 175

## வணக்கம்

இன்று புத்த பகவானுடைய பிறந்த நாள். அவர் தோன்றி ஆண்டுகள் 2,500 ஆகின்றன. அவருடைய உயர்ந்த நீதி போதனைகள் உலக மக்கள் நன்கு புரிந்து கொள்ளும் அளவில் நிலைபெற்று விட்டன. புத்தருடைய போதனைகளைப் படிப்பதற்கு முன் அவருடைய உருவமே மனித உள்ளத்தைக் கவர்ந்து ஆகர்சித்துக் கொள்கின்றது. சில அறிஞர்களுடைய போதனைகளைப் படித்த பிறகே அவர்களுடைய உருவம் நம் மனக்கண்முன் தோன்றும். ஆனால் புத்த பகவானுடைய உருவமோ, அதைக் கண்ட மாத்திரத்தில் அவருடைய போதனைகளுக்கு நம்மை இழுத்துச் செல்கிறது. அகத்தின் அழகு புறத்தில் தோன்றுகிறது.

வதனத்தில் பொலிவுடன் விளங்கும் புத்த பகவானுடைய வரலாற்றை உங்களுக்கு நல்ல தமிழில் தந்திருக்கின்றார் மேதை ப. ரா. ப. ரா. அவர்களை நாங்கள் உங்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. காரணம் "புத்த ஞாயிறு" மூலம் அவர் எங்களை உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டார்.

இந்த "புத்த ஞாயிறு" எங்கள் வரலாற்று வரிசையில் முதல் வெளியீடு, அடுத்து பல அறிஞர்களின் வரலாறுகள் வெளிவரும். எங்களுடைய மற்ற வெளியீடுகளுக்குத் தந்து வந்த ஆதரவை இந்த வெளியீட்டுக்கும் தமிழ் மக்கள் தருவார்கள் என்பது நிச்சயம்.

வணக்கம்,

ரகுபதி சாமிநாதன்

24—5—'56.

# புத்தரைப் பற்றி காந்திஜி

புத்தர் பெருமான் போதனைகள் எனக்குப் பெரு மளவில் அறிவுரை ஊட்டியுள்ளன என்று நான் தயங் காமல் சொல்லுவேன்.

ஹிந்து கலாசாரத்தில் பௌத்தக் கலாசாரமும் அடங்கியே இருக்கிறது என்று நான் பணிவுடன் கூறிக் கொள்கிறேன். ஏனென்றால் புத்தர் ஓர் இந்தியனாக இருந்தார் என்பது மாத்திரமில்லாமல் அவர் சிறந்த ஹிந்துவாகவும் இருந்தார். கௌதமர் ஹிந்து மதத்தைக் கைவிட்டுச் சென்றார் என்றோ புது மதத்தை மேற் கொண்டார் என்றோ கூறுவதற்கான ஆதாரம் எதையும் நான் அவர் வாழ்க்கை வரலாற்றில் காணவில்லை.

புத்தர் போதனைகளில் உள்ள சத்தான பகுதி முழு வதும் இப்போது ஹிந்து மதத்தின் உள்ளுறுப்பாக அமைந்துவிட்டது என்பது என் உறுதியான அபிப்பிரா யம். இனி ஹிந்து இந்தியா கௌதமரின் போதனைகளைக் கைவிட்டு அவர் சீர்திருத்தம் செய்த நிலைக்கு முன்னிருந்த கட்டத்துக்குத் திருப்புவதென்பது சாத்தியமேயில்லை. அவர் செய்த பெருந் தியாகம் அவரது மகத்தான துறவு, அவர் வாழ்ந்த அப்பழுக்கற்ற தூய வாழ்க்கை ஆகியவை மூலம் அவர் ஹிந்து மதத்தில் அழியாத அடையாளத் தைப் பொறித்துச் சென்றுவிட்டார். அந்தப் பரம

ஆச்சாரியனுக்கு ஹிந்து மதம் நிரந்தரமாய் நன்றிக் கடன் பட்டிருக்கிறது, இப்போது பௌத்தம் என்று கூறப்படுகிற மதத்தில் உள்ளவைகளில் எதை எல்லாம் ஹிந்து மதம் ஸ்வீகரித்துக்கொள்ளவில்லையோ அதெல்லாம் புத்தர் வாழ்க்கையிலும் அவர் போதனையிலும் முக்கியமான அம்சமேயல்ல என்றுகூட நான் சொல்லுவேன்.

## ஹிந்து தத்துவங்கள் புத்துயிர் பெற்றன

ஹிந்து மதத்திலுள்ள சிறந்த அம்சங்களில் அவர் ஊறித் திளைத்திருந்தார். வேதங்களில் புதைபொருளாகக் களைமூடிக் கிடந்த சில அரிய போதனைகளுக்கு அவர் புத்துயிரளித்தார். அவரது மகத்தான ஹிந்து தர்ம ஆத்மீக அறிவால் அவர் அர்த்தமற்ற வார்த்தைக் குவியல்களை அப்புறப்படுத்தி வேதங்களில் புதைந்து கிடந்த பொக்கிஷங்களை வெளிப்படுத்தினார். சில வேத வாக்கியங்களுக்கு அவர் கொடுத்த அர்த்தம் அவர் காலத்திய மக்களில் பலருக்கு விளங்காத புதுமையாக இருந்தது; அந்த அரிய விஷயங்களை விதையூன்றி வளரச் செய்வதற்கு இந்திய பூமி ஏற்ற விளைநிலமாக இருப்பதை அவர் கண்டார்.

புத்தர் போதனையானது அவரது உள்ளத்தைப் போலவே விசாலமானதாகவும் சர்வவியாபகமுள்ளதாகவும் இருந்தது; அதனால் அவரது பூதவுடல் மறைந்த பின்னுங்கூட அது எஞ்சிநின்று உலக எல்லைகளில் எல்லாம் பரந்து வியாபித்திருக்கிறது. என்னை ஒரு பௌத்தன் என்று சொன்னாலும்கூட கவலையில்லை. அவரது

சாதனை ஹிந்து மதத்தின் வெற்றி என்று நான் கூறத் தயங்க மாட்டேன். புத்தர் ஹிந்து மதத்தை நிராகரிக்கவே இல்லை; ஆனால் அவர் அதன் அடிப்படையை விஸ்தரித்தார். அவர் அதற்கு ஒரு புத்துயிர் அளித்தார். ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்தார்.

## புத்தர் கடவுள் உண்டென்பவர்

முதலாவதாக சர்வவியாபகமாயுள்ள தெய்வம் அல்லது கடவுள் என்பதை எடுத்துக்கொள்ளுவோம். புத்தர் கடவுள் என்று ஒன்று உண்டென்பதை நம்ப வில்லை என்பதாக எத்தனையோ தடவை பலர் தர்க்கிக்கக் கேட்டிருக்கிறேன். பௌத்த தர்மத்தை விளக்கிக் கூறுவதாகச் சொல்லப்படுகிற நூல்களில் அவ்வாறு எழுதப் பட்டிருப்பதை நான் படித்துமிருக்கிறேன். ஆனால் என் அபிப்பிராயத்தில் அவ்வாறு அவர் நம்பவில்லை என்று கூறுவது புத்தரின் பிரதான போதனைக்கே முரணானதாகும். புத்தர் காலத்தில் கடவுள் என்ற பெயரால் குறிப் பிடப்பட்டுவந்த கீழ்த்தரமான ஒரு விஷயத்தை அவர் நிராகரித்தது காரணமாய்-அவர் அப்படி நிராகரித்தது சரிதான், இந்த அபிப்பிராயம் தோன்றியிருக்கலாம். கடவுள் என்ற ஒரு வஸ்து கோபாவேசம் கொள்ளுமென்றும் செய்த தவறுகளுக்காகப் பச்சாத்தாபப்படும் என்றும் பூலோக மன்னர்களைப்போல் அதையும் ஆசை காட்டித் திருப்தி செய்யலாம் அல்லது லஞ்சம் கொடுத்து அதன் ஆதரவைத் தேடலாம் என்றும் அதற்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற வித்தியாசம்

உண்டு என்றும் கூறப்பட்ட கருத்துக்களையெல்லாம் அவர் நிராகரிக்கத்தான் செய்தார். கடவுள் என்ற அந்த ஒரு பொருளைத் திருப்தி செய்வதற்கு அது-அதுவே ஜீவப் பிராணிகளின் உயிர்க் குருதியைப் பலியாகக் கோரியது என்ற கொள்கை அவருக்கு அடங்காத ஆத்திரத்தை உண்டு பண்ணத்தான் செய்தது; அவர் அதை முழுமூச்சோடு எதிர்க்கத்தான் செய்தார்.

இந்தியாவுக்குப் புத்தர் விளக்கிக் காட்டிய ஓர் உண்மை இது; நிரபராதிகளின் ஜீவப்பிராணிகளைப் பலியிடுவதன் மூலம் திருப்தி செய்யக்கூடிய கடவுள் ஒரு உண்மைக் கடவுளாக இருக்கவே முடியாது, இதற்கு மாருகக் கடவுளைத் திருப்தி செய்விக்கலாம் என்ற கருத்தில் மிருகங்களைப் பலிகொடுப்பவர் இரட்டிப்புப் பாவம் செய்கிருர்கள் என்று அவர் கருதினர்.

## நிர்வாண நிலை எது ?

கடவுளின் நீதி நித்தியமானது; மாறக்கூடியதல்ல அதைக் கடவுளிடமிருந்து அந்நியமாகப் பிரித்துவிட முடியாது. அவரது பரிபூரண நிறைவுக்கு இயல்பான ஒரு நிலைமையே அது. எனவேதான் ஒரு குழப்பமான கருத்து ஏற்பட்டிருக்கிறது; புத்தர் கடவுள் என்ற ஒரு பொருளை நம்பவில்லை; ஆனல் தர்ம ஒழுக்க விதிகளில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்று கூறுகிற குழப்பநிலை ஏற்பட்டிருக்கிறது. கடவுள் விஷயத்தில் இவ்வாறு ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக நிர்வாணநிலை என்ற தத்து

தின் அர்த்தத்திலும் குழப்ப உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. "நிர்வாணம்" என்பது சர்வ அழிவு என்று அர்த்தப் படவே படாது. நான் புத்தர் வாழ்க்கையின் பிரதான அம்சத்தை உணர்ந்த அளவில் தெரிந்து கொண்டிருப்பது இதுதான்; நிர்வாணநிலை என்பது நம்மில் எதெல்லாம் கீழ்த்தரமானதோ, எதெல்லாம் விஷமத்தனமானதோ எதெல்லாம் மாசுபடுத்தக் கூடியதோ, மாசுக்கு உள்ளாகக் கூடியதோ அவை எல்லாம் பரிபூரணமாக அழிந்து விடுகிற நிலைதான். நிர்வாணநிலை என்பது மயானத்தில் நிலவுகிற வெறிச்சென்ற மரண அமைதியல்ல. தன்னை உணர்ந்து நிரந்தரமான மெய்ப் பொருளில் தனக்குரிய உறைவிடத்தை அடைந்து விட்டோம்' என்ற நிலையை உணர்ந்து ஜீவ இன்பம் பெற்று ஜீவ அமைதி பெற்று விளங்கும் நிலையாகும்.

மிகவும் கீழ்த்தரமான பிராணிகளைக்கூட தனக்குச் சமமானதாகக் கருதவேண்டும் என்று கௌதமர் உலகத்துக்குப் போதித்தார். ஊர்ந்து செல்கிற புழுக்கள் போன்ற பிராணிகளின் உயிர்கள்கூட தனது உயிரைப் போல் அரிய பொருள் என்று மதிக்கவேண்டும் என்று அவர் கூறினார். மனிதர்கள், இதர கீழ்த்தர ஜீவராசிகளை அடக்கியாளும் எஜமானர்கள் என்று கூறுவது மமதை பிடித்த ஒரு கூற்றேயாகும். அதற்கு மாறாக வாழ்க்கையில் உன்னத விஷயங்களையெல்லாம் பெற்றுள்ள மனிதர்கள் கீழ்த்தர விலங்குலகத்துக்குத் தர்ம கர்த்தாக்கள் ஆவார்கள். புத்த மகா முனிவர் அந்த உண்மையைத் தம் வாழ்நாளில் அனுஷ்டித்துக் காட்டியிருக்கிறார்.

## பலிபீடம்

நான் சிறு பையனாக இருக்கும்போது "ஆசியாவின் ஜோதி" என்ற நூலில் புத்தர் ஆட்டுக்குட்டியைச் சுமந்து சென்ற வரலாற்றைப் படித்தேன். யாதொரு குற்றமுமற்ற ஆட்டுக்குட்டிகளைக் கொன்று ரத்தத்தைப் பலிகொடுத்துக் கடவுளைத் திருப்தி செய்விக்கலாம் என்று கருதி அகங்காரமும் அறியாமையும் கொண்டிருந்த பிராமணர்களின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் (யாக பலிக்காகக் கொண்டு வரப்பட்ட) அந்த ஆட்டுக் குட்டியைத் தோளில் சுமந்துகொண்டு சென்று 'ஒரு ஆட்டுக் குட்டியாவது பலி செய்து விடுங்கள் பார்க்கலாம்" என்று எதிர்த்து நின்ற வரலாற்றை நான் படித்தேன். அவர் வந்து நின்ற தோற்றமே அந்தப் பிராமணர்களின் கல் மனதை இளக வைத்து விட்டது. அவர்கள் புத்தரை ஏறிட்டுப் பார்த்ததுமே தங்கள் கொலைபாதகக் கத்திகளைத் தூர எறிந்துவிட்டனர். யாகசாலையிலிருந்த ஒவ்வொரு ஆடும் உயிர் தப்பியது. பலிகொடுக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் உங்களையே பலிகொடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் மோகத்தைப் பலியிடுங்கள், லௌகிக ஆசைகளைப் பலியிடுங்கள், உலகப் பற்றுக்களைப் பலியிடுங்கள் என்று புத்தர் கூறினார். அது உங்களைப் புனிதப் படுத்துகிற பலியாக இருக்கும்.

## வர்ணாசிரமமும் வகுப்பும்

கௌதமர் போதித்த இரண்டாவது விஷயம், இப்போது ஜாதி என்று கூறப்படுகிற ஒன்றின் மூலம் என்ன

வெல்லாம் குறிப்பிடப்படுகிறதோ, அவரது காலத்திலும் அப்படியேதான் இருந்தது. அதெல்லாம் முற்றிலும் தவறானது என்று அவர் கூறினர். அதாவது ஹிந்து மதத்தின் உள்ளுறுப்புக்களை அரித்துக்கொண்டிருந்த, "உயர்வு" "தாழ்வு" வேறுபாடுகளை எல்லாம் அவர் ஒழித்தார். ஆனால் அவர் வர்ணுசிரம தர்மத்தை ஒழிக்கவில்லை; வர்ண தர்மம் ஜாதியல்ல. ஜாதிக்கும் வர்ணத்துக்கும் பொது அம்சம் எதுவுமே இல்லை. வர்ணம் உயிர் ஊட்டுகிறது. ஜாதி கொலை செய்கிறது. தீண்டாமைதான் ஜாதி அமைப்பில் மிகவும் வெறுத்து ஒதுக்க வேண்டிய அம்சம். எனவே, நீங்கள் ஜாதியை உங்களிடையேயிருந்து ஒழித்து விடுங்கள். ஒவ்வொரு மனிதனும் உங்களோடு சரிசமமானமாவன் என்பதைப் பிரகடனம் செய்ய உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுத்தால் நல்லது, ஒரே ஒரு மனிதனைக்கூடத் தீண்டத்தகாதவன் என்று நீங்கள் கருதி வருவது வரையில் நீங்கள் புத்த தர்மத்தை நிராகரித்தவர்களாகவும் மனித தர்மத்தை மறுத்தவர்களாகவுமே ஆவீர்கள்.

புத்தர் அறிவு விளக்கம் பெறுவதற்கு ஆதாரமாக இருந்த சம்ஸ்கிருதத்தையும் சம்ஸ்கிருதக்கிரந்தங்களையும் மூலத்திலேயே நீங்கள் கற்றறிந்தால்தான் புத்த தர்மத்தை நீங்கள் பூரணமாகக் கற்றுத் தெரிந்தவர்கள் ஆவீர்கள்.

### பகட்டுக்குப் பணியாதீர்

மேனுடுகளிலிருந்து வீசுகிற பகட்டொளியைக் கண்டு மயங்கிவிடாதீர்கள். சலனக்காட்சியாகத் தோன்

றும் அது உங்களைக் காலை வாரிக் கவிழ்த்து விடாமலிருக் கட்டும். இந்த வாழ்க்கையாவது மறையக் கூடிய நிழல் போன்ற ஓடி மறைகிற ஒன்று என்பதைப் புத்தர், நீங்கள் என்றும் மறுக்க முடியாத வார்த்தை களால் விளக்கிக் கூறியிருக்கிறார். உங்கள் கண் முன் காணப்படுகிற எல்லாம் சூன்யமே என்பதை நீங்கள் உணர முடிந்தால் சதாமாறிக் கொண்டே வருகிற இந்த ஸ்தூல உடம்பில் சூனியத்தை உணர முடிந்தால் உங்க ளுக்கு வானுலகில் அரிய பொக்கிஷங்கள் கிட்டும். இந்தக் கீழுலகில் அமைதி இருக்கும்; அறிவு உணர்ந்து கொள்ள முடியாத அமைதியும் நாம் இதுவரை தெரிந்திராத புதுமையான இன்பமும் கிட்டும். அதைப் பெறுவதற்கு நமக்கு அதிசயிக்கத்தக்க விதத்தில் நம்பிக்கை விசுவாசம் இருக்கவேண்டும். நம் கண்முன் பார்ப்பவைகளையெல் லாம் நாம் பரித்தியாகம் செய்யத் துணிய வேண்டும்.

புத்தரும் கிறிஸ்துவும் முகம்மதுவும்கூட என்ன செய்தார்கள்? தன்னலமறுப்பும் தியாகமும் தானே அவர் கள் வாழ்க்கையாக இருந்தது. புத்தர் உலக இன்பங்களை எல்லாம் துறந்தார். ஏன்? உண்மையை, மெய்ப்பொருளை நாடித் தியாகம்செய்து கஷ்டப்பட்டவர்களுக்கே கிடைக் கக் கூடிய பேரின்பத்தை இவ்வையகம் முழுவதும் பெற வேண்டும் என்ற எண்ணத்தால் அவ்வாறு துறந்தார்.

## அறம் வளர்ந்திடுக

புத்தர் அஹிம்ஸா ரீதியில் செய்த செயல்களின் பலன்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன. காலம் செல்

லச் செல்ல அவை வளர்ச்சி பெற்றுக்கொண்டே வரும். அந்நல்லறத்தை அனுஷ்டிக்க அனுஷ்டிக்க அது அதிக பலன் தருவதாகவும் வளங்குன்றுததாகவும் ஆகிவருகி றது. இறுதியில் உலகம் எல்லாம் மெய்மறந்து வாய் திறந்து "மகத்தான அதிசயம்" நிகழ்ந்திருக்கிறது என்று கூறும்படி ஆகி விடுகிறது.

உலகம் முழுவதற்கும் அது (ஆசியா) போதனை செய்யக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆனால் அதற்கு முன் அது அந்த போதனைப்படி நடக்கவேண்டும். ஆசியா முழுவதிலுமே புத்தர் போதனைகளின் சுவடு பதிந்திருக் கிறது. இந்தியா, சீனு, ஜப்பான், பர்மா, இலங்கை, மலேயா முதலிய நாடுகளில் எல்லாம் அது பரவியிருக் கிறது.

★

UNIVERSITY EX... MADURAI

முதல் இயல்

# புத்த ஞாயிறு

'மைத்திருள் கூர்ந்த மனமாசுதீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலை...'

—மணிமேகலை.

**உலகத்தின்** துக்க காரணத்தைக் கண்டுபிடிப்பதற்காகச் சித்தார்த்தர் 2,500 ஆண்டுகளுக்கு முன் துறவு பூண்டதை இன்றுவரை பௌத்தர்கள் போற்றிப் புகழ்ந்து வருகிறார்கள். பர்மாவிலே சிறுவர்கள் இள வயதிலேயே துறவுபூண்டு, சிறிதுகாலம் பௌத்தப் பள்ளியிலே சேர்ந்து, அறிவும் ஒழுக்கமும் மிக்க பிக்குகளுடைய சங்கத்தில் வாழ்தல் இப்போதும் வழக்கமாயிருக்கிறது. ஒவ்வொரு சிறுவனும் சித்தார்த்தரைப் போல் துறவு பூணும் சடங்கு பர்மாவிலே கோலாகலமான ஒரு வைபவமாகக் கொண்டாடப்பெறுகிறது.

துறவு பூணும் சிறுவன், உயர்ந்த ஆடை அணிகள் அணிந்து, தலையில் மகுடம் தாங்குவான்: அரசனை போல் நண்பர்கள் புடைசூழ, அவன் ஒரு வெள்ளைக் குதிரை மேலேறிப் பௌத்தப் பள்ளியை நோக்கிச் செல்வான். மங்கல வாத்தியங்களும், இசைகளும் முழங்கவும், மக்கள் பெருங் கூட்டமாகத் தொடர்ந்து வரவும், மன்னற்குரிய மரியாதைகளுடன், இந்த இள வரசன் நகர்வலம் வந்து பள்ளியை அடைவான். உடனே வாத்தியங்கள், இசைகளெல்லாம் நின்றுவிடும். இள வரசன் தன் விலையுயர்ந்த ஆடைகளைக் களைந்துவிட்டு, நீரில் மூழ்கி, வெள்ளைத் துணி அணிந்துகொண்டு, பள்ளி யிலுள்ள பிக்குவிடம் வருவான். தான் நிர்வாண சாந்தி அடைவதற்காகத் தன்பால் அருள்சுரந்து துறவிகளின் மஞ்சளாடையைத் தனக்கு அளிக்கும்படி வேண்டுவான். அவ்வாறே பெற்றுக்கொண்டு, தலையை முண்டனம் செய்து, சீவர உடையணிந்து, மீண்டும் வந்து பிக்குவிடம் உபதேசம் பெறுவான். ஆறு மாதமோ, ஒரு வருடமோ, பிக்குகள் சங்கத்தில் வாழ்ந்து, அவர்களுடைய ஒழுக்கங் களைப் பின்பற்றி, அவர்களுக்குத் தொண்டு செய்து வருவான். பின்னால்தான் அவன் தன் குடும்பத்திற்குத் திரும்புவான்.

இளைஞன் வெள்ளைக் குதிரை மீது பவனிவருதல்.
25 நூற்றாண்டுகட்கு முன்பு இளவரசர் சித்தார்த்தர் கபிலவாஸ்துவில் தம் அரண்மனையையும் அரசபோகத்தையும் துறந்து நள்ளிரவில் 'கண்டகம்' என்ற தமது

வெள்ளைக் குதிரையிலேறிச் சென்றதை நினைவுறுத்தும். பள்ளியுட் சென்றதும் நீரிலே குளித்தல், சித்தார்த்தர் அநோம நதியை யடைந்து நீராடியதைப் போன்றது. அநோம நதிக்கரையில் சித்தார்த்தர் பொன்னுடைகளை நீத்து, உடைவாளால் தமது மயிர்முடியை அறுத்தெறிந்ததைப் போலவே பர்மியச் சிறுவன் தலையை முண்டனம் செய்து கொள்கிறான். இத்தகைய அரிய சடங்குக்காகப் பர்மியர் பெரும் பொருளைச் செலவிடுதல் வழக்கம். ஏழைகள்கூடப் பல வருடங்களாக இதற்கென்று பணம் சேமித்து வைப்பது வழக்கமாம் !

## புனித பூமி

நேபாளத்தருகிலுள்ள கபிலவாஸ்து நகர், வெண்மையான கண்டகக் குதிரை, குதிரைக்காரனாகிய சந்தகன், அநோம நதிக்கரையின் மணல், இளவரசராகிய சித்தார்த்தர் துறவு பூண்டு காவியுடையணிதல்,— இவைகளை உலகம் ஒருநாளும் மறக்க முடியாது. அம்மட்டோ ! பின்னால் சித்தார்த்தர் வாழ்க்கையிலே அவரோடு தொடர்புகொண்ட மக்களையும், இடங்களையுங்கூட மறக்க முடியாது. கபிலவாஸ்து அவர் பிறந்த இடம். உருவேலா அவர் தவஞ்செய்த வனம். புத்தகயை அவர் ஞானமடைந்த தலம்; அங்குள்ள போதி (அரச) மரத்தடியில் அவர் ஞானமடைந்து புத்தரானார். அதுமுதல் புத்தருக்குரிய பெருமை அந்த மரத்திற்கும் ஏற்பட்டு

விட்டது. ஞானமடைந்த பின்பு, தாம் பெற்ற இன்பத்தை மற்றெல்லோருக்கும் அளிப்பதற்காகப் புத்தர் அறஆழியை உருட்ட ஆரம்பித்து, முதன்முதல் உபதேசம் செய்த இடம் காசிக்கருகிலுள்ள சாரநாத். பின்னுல் அவர் தங்கியிருந்த வேணுவனம், ஜேதவனம் போன்ற வனங்களும், அவர் அறஉரை பகர்ந்து பிரசாரம் செய்த இராஜகிருகம், வைசாலி, சிராவஸ்தி முதலிய நகரங்களும், அவர் முடிவெய்திய குசீநகரமும் உலகப் பிரசித்திபெற்ற தலங்களாகிவிட்டன. புத்தர் பிறந்து, வாழ்ந்து, மறைந்த பாரத பூமியே பௌத்தர்களுக்குப் புனித பூமியாக விளங்குகின்றது.

'வாவியெல்லாம் தீர்த்தம்,
மணலெல்லாம் வெண்ணீறு,
காவணங்களெல்லாம் கணநாதர்—பூவுகில்
ஈது சிவலோகம்...........'

என்று பட்டினத்தடிகள் கூறியுள்ளதை நோக்கினுல், பக்தர்கள் கண்ணுக்குத் திருப்பதிகள் எப்படிக் காட்சியளிக்கும் என்பது புலனுகும்.

## புத்தரால் தோன்றிய புரட்சி

'புத்த ஞாயிறு' என்று புத்தரைக் கதிரவனுகப் போற்றுகிறது 'மணிமேகலை'. மக்களின் மனமாசுகளாகிய இருளைப்போக்க வந்த ஒளிப்பிழம்பு புத்தர்,

மேலும், அவர் தோன்றிய காலத்தே, இந்நாட்டிலும் உலகிலும் இருள் அடர்ந்திருந்ததால், அதை நீக்கத் தோன்றிய செங்கதிராகவே அவரைக் கொள்ளலாம். அவர் தோற்றத்தால், எங்கணும் ஒளி பரவியது, எங்கணும் உணர்வு இனிதாய் மலர்ந்தது; அறங்கள் எழுந்தன, மறங்கள் மங்கி மறைந்தன; மக்கள் மனதில் அன்பு நிறைந்தது. புத்தர் பிறந்ததிலிருந்து இந்நாட்டில் ஏற்பட்ட புதுமைகளுக்கு அளவேயில்லை. அவர் ஒளி பரவாத இடமில்லை, அதனால் துலங்காத பொருளேயில்லை. நாடு, நகரம், சாதி, சமயங்கள், அறங்கள், ஒழுக்கங்கள்—யாவும் அந்த ஒளியில் நன்முறையில் மாற்றம் பெற்றன. புத்தர் காட்டிய நெறியாலே உலகில்—முக்கியமாகப் பாரத நாட்டிலும், பல ஆசிய நாடுகளிலும்—மக்கள் வாழ்க்கையில் பெரும் புரட்சியே தோன்றிவிட்டது!

புத்தர் காட்டிய நெறியை அருளறம் என்று பெரியோர் புகழ்வர். அவர் எத்தகைய அருளை உபதேசித்தார் என்பதற்குச் **சுத்தநிபாத** நூலில் ஒரு பாடலுண்டு. அதன் கருத்து வருமாறு :

> "தாய் தன் ஒரே சேயை அரவணைத்துப் போற்றுவது போல உங்கள் அன்பு உலகில் பரவட்டும்; ஒவ்வோர் உயிரையும் அரவணைத்துக் கொள்ளட்டும்; தடையற்ற சுதந்திரத்துடன் அது உயரேயும் கீழேயும் பறக்கட்டும்; துவேஷமும் பகையும் விலகி யொழியட்டும்!"

இக்கருத்துக்கு உரை எழுதிய **அசுவகோஷர்** தாயன்பை நான்கு பிரிவாகக் கூறியுள்ளார். குழவியிடம் தாய்க்

குள்ள கவலை; குழவி உடல் நலம் குன்றினால், அது குண மாக வேண்டுமென்ற கருணை, பையன் வளர்ந்து திறமை கள் பெறுகையில் களிப்புற்றுக் காட்டும் அநுதாபம், அவன் திருமணம் செய்துகொண்டு தனி வீடு செல்லும் போது, அவனை விட்டு ஒதுங்கியிருந்து காட்டும் பரிவு— ஆகிய நான்கு நிலைகளையும் நாம் தாயன்பில் காண்கிறோம். இத்தகைய அன்பே உலகை அளாவிப் பரவும்படி, எல்லா உயிர்களையும் போர்த்துக் கொள்ளும்படி, போதிமாதவர் கூறியுள்ளார். 'ஊர்வன. ஓடுவன, இரு கால், நாலு கால், பல கால்களைப் பெற்ற ஜந்துக்கள் யாவும் நமக்குத் தீங்கு செய்யாதிருக்கட்டும்; அவைகளுக்கு நாமும் யாதொரு தீங்கும் செய்யாமலிருப்போம்; நம்முடன் அவைகளெல்லாம் சாந்தியோடு வாழட்டும்!' என்றே அவர் போதித்து வந்தார்.

புத்தரிடம் சொர்க்கமும் இல்லை, நரகமும் இல்லை. அவரது மார்க்கமே புதிதாயிருந்ததால், மக்கள் மனத்தை மயக்குவதற்கேற்ற பழைய புராணங்களும், சாத்திரங் களும் அவரிடம் இல்லை. பிரார்த்தனை செய்வதால் பாவங்கள் ஒழியுமென்றோ, உயிர்களின் துக்கம் ஒழியு மென்றோ அவர் நம்பவில்லை. மக்களின் துயரம் நீங்க வேண்டுமானால், அவரவர் முயற்சியாலேயே ஆகவேண் டும். புறத்திலிருந்து எந்த உதவியும் வாராது. கருமம். காரியமெல்லாம், அகத்திலேதான் நிகழ வேண்டும். ஒவ் வொருவர் விதிக்கும் அவரவரே பொறுப்பு.

'நீயே முயற்சி செய்து உழைக்க வேண்டும்.

ததாகதர்கள் உபதேசம் மட்டுமே செய்பவர்கள்.'

'ஓ பிக்கு! உன்னை நீயே விழிப்படையச் செய்துகொள்;

உன்னை நீயே பரிசிலனை செய்துகொள்; இவ்வாறு தற்பாது காப்புடனும், கவனத்துடனும், நீ இன்புற்று வாழ்வாய்!'

'தனக்கு அதிபதி தானே, தனக்கு அடைக்கலம் தானே; ஆதலால் நல்ல குதிரையை வணிகன் அடக்கி யாள்வதுபோல், உன்னை நீயே அடக்கிக்கொள்,'

இவ்வாறுதான் பகவர் உபதேசித்திருக்கிறார். 'ஒருவன் தானே தீமை செய்கிறான், தானே துயருறுகிறான்; தானே தீமையைச் செய்யாது விலக்குகிறான், தானே தன்னைப் புனிதமாக்கிக் கொள்கிறான். புனிதனும் பாவியும் தத்தம் முயற்சியாலேயே வாழ்கின்றனர், அல்லது வீழ்கின்றனர்; எவரும் மற்றொருவரைப் பரிசுத்தமாக்க முடியாது. பல்லாயிரம் மனிதர்களைப் போரில் வென்றவனினும் தன்னைத் தான் வென்றவனே தலைசிறந்த வெற்றியாளன்.' இதுவே அவர் முடிவு.

கவிஞர் **பிரான்ஸிஸ் தாம்ப்ஸன்** எழுதியுள்ள 'வானுலகின் வேட்டை நாய்'* என்ற கவிதை எங்கும் புகழ்பெற்றது. பாவமே தொழிலாய்க் கொண்ட மனித ஜீவனைக் கடைத்தேற்றுவதற்காக, இறையருள் வேட்டைநாய் போல் தொடர்ந்து மோப்பம் பிடித்து

* "The Hound of Heaven" -by Francis Thompson.

வருவதாக அவர் மிக்க உருக்கத்துடன் வருணிக்கிறார். காடும், மலையும், குன்றும் குகையும் தொடர்ந்து சென்று, இறையருள் முடிவில் ஜீவனை ஆட்படுத்திக் கொள்கிறது. புத்தர் கருத்து இதற்கு நேர் மாறானது. அவரது அந்திம காலத்தில் அருகேயிருந்த சீடர் ஒருவர், அவருடைய பிரிவுக்குப் பின்னால் தங்களுக்கு வழிகாட்டி எவர் என்று வினவியபோது, ததாகதர் கூறியது இதுதான்: 'நீயே உனக்கு வழிகாட்டி, நீயே உனக்குச் சரணாலயம்!' இதுவே புத்த தருமத்தின் உள்ளுறை பொருள் எனலாம்.

பூனையே இல்லாத இருட்டறையில், பிறவிக் குருடன் கரும்பூனையைத் தேடிப் பிடிக்க முயல்வது போல், மக்கள் அறியாமை யிருளில் ஆழ்ந்து, தத்துவ விசாரங்களிலே வாழ்நாள் அனைத்தையும் வீணாக்குவதைப் புத்த புங்கவர் ஆதரித்ததேயில்லை. குருடருக்குக் குருடர் வழிகாட்டுவது போன்ற குருமார்களிடம் சிக்குண்டு, காடுகளில் உறைந்தும், காய், இலைகள் தின்றும் உடலை வருத்துவதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. உலக போகங்களில் சூழ்ந்து சுழல் நீரில் சிக்கிக் கொள்ளாமலும், உடலைத் துன்புறுத்தி மாயாமலும், நடுவான ஒரு வழியையே அவர் காண்பித்தார். அவருடைய புதிய வழிக்கு '**மஜ்ஜிம படிபதா**'—('நடுநிலையான வழி') என்று பெயர்.

வீண் விசாரங்களைப் பற்றி அவர் கூறியது இது :

'ஒரு மனிதனின் உடலில் விடம் தோய்ந்த அம்பொன்று பாய்கிறது. அவனுடைய நண்பர்கள் உடனே

மருத்துவரை அழைத்து வருகின்றனர். மருத்துவர் புண்ணிலிருந்து அம்பை யிழுக்க ஆரம்பிக்கிறார். அடிபட்டவன், "நில்லுங்கள்! அம்பை எய்தது யார்? ஆணா, பெண்ணா, பிராமணனா, வைசியனா, சூத்திரனா? அவன் குடும்பம் எது? அவன் நெட்டையா, குட்டையா? அம்பு எத்தகையது? இவற்றையெல்லாம் நான் அறிந்து கொள்ளும்வரை அம்பை யெடுக்க விடமாட்டேன்!" என்று பலபடக் கூறினால், என்ன நேரும்? இந்தக் கேள்விகள் அனைத்திற்கும் விடைகள் கிடைக்கும் முன்பே அம்மனிதன் உயிர் துறப்பான். இது போலவே, அப்பாலைக்கு அப்பால் என்ன இருக்கிறதென்பது போன்ற தன் கேள்விகளுக்கெல்லாம் விடையறிய விரும்பும் சீடன், துக்கம், துக்க காரணம், துக்க நீக்கம், துக்க நீக்க மார்க்கம் ஆகியவைகளைப் பற்றிய உண்மையை உணருமுன்பே மரித்து விடுவான்.'

மனிதன் தன்னைத் தான் அடக்கி வெற்றி கொள்ள வேண்டும் என்பதே அத்தருமராஜரின் குறிக்கோள். காரியத்திற்கு உதவாத கற்பனைக் குதிரையைத் தட்டியெழுப்புவதற்கு அவர் ஒருபோதும் இசைந்ததில்லை.

வாழ்க்கையில் மடிமை ஒழிய வேண்டும், விழிப்பு ஏற்படவேண்டும், சித்தம் போன போக்கில் சிந்தனைகள் சிதறுண்டு போகாமல், உணர்ச்சி வெறிகள் ஒடுங்கப் பெற்று, கோபமும் தாபமும் நீங்கி, மானிடன் பரிபூரண விடுதலை பெறவேண்டும். இவ்விடுதலையையும் உடனேயே பெறுவதற்கு, இன்றே, இப்பொழுதே முயல வேண்டும் என்பதே புத்தரின் சித்தாந்தம். 'சிந்தனையற்றவர்களைப் பின்னால் நிறுத்திவிட்டு, அறிவாளி, பந்தய

ஓட்டம் ஓடுபவனைப் போல், முன்னேற வேண்டும்' என்பது அவர் கருத்து. ஏன்? மக்கள் குடியிருக்கும் உலகமாகிய வீடே தீப்பற்றி எரிவது போல் அவர் கருதினர். அப்பெரு நெருப்பை அணைத்துக் குளிரச் செய்வதே தம் வேலை என்று எண்ணினர். இதைப் பற்றிக் கயை நகரில் ஆயிரம் துறவிகளுக்கு அவர் செய்த உபதேசத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் :

'ஓ துறவிகளே! எல்லாப் பொருள்களும் நெருப்பிலே எரிகின்றன. நெருப்பில் எரியும் இந்தப் பொருள்கள் அனைத்தும் யாவை ?

'கண் எரிகிறது; உருவங்கள் எரிகின்றன; காட்சி யுணர்ச்சி எரிகிறது; கண் பெற்ற காட்சிகள் எரிகின்றன; அந்தத் தீயினால் கண்ட காட்சியுணர்ச்சிகளை ஆதாரமாய்க் கொண்ட இன்ப உணர்ச்சி, அல்லது துன்ப உணர்ச்சி, அல்லது அலட்சிய உணர்ச்சி ஆகிய உணர்ச்சியும் எரிகிறது.'

'எந்தத் தீயில் இவைகள் எரிகின்றன ?'

'உணர்ச்சித் தீயில், துவேஷத் தீயில், ஆசைவெறித் தீயில் என்று நான் சொல்கிறேன். பிறப்பு, முதுமை, மரணம், துக்கம், புலம்பல், துயரம், சோகம், நம்பிக்கை யிழத்தல் ஆகிய தீயில் இவை எரிகின்றன...'

'ஒவ்வொருவரும் தமக்குத் தாமே தீபம், தமக்குத் தாமே அடைக்கலம், வெளியே எவரிடத்தும் சரணடைய வேண்டுவதில்லை. தருமமே யாவர்க்கும் புகலிடம்,

அதையே பற்றிக் கொள்க!* என்று புத்தர் வற்புறுத்தி யுள்ளார்.

பிரமனைப் பற்றி வருணிப்போர் எவரும் அவனை நேரில் கண்டோரில்லை. 'தன் காதலி யார் என்று சொல்ல முடியாமலே, காதல் கொண்ட ஒருவனைப் போலவும், அரண்மனை எந்த இடத்தில் அமைக்கப்படும் என்பதை அறியாமலே, மாடிக்குப் படிக்கட்டு அமைப்ப வனைப் போலவும், ஆற்றைக் கடக்க விரும்பும் ஒருவன் அக்கரையைத் தன்னிடம் வருமாறு அழைப்பது போல வும் அவர் விளங்குகிறார்'† என்பது அண்ணலின் வாக்கு.

வாழ்க்கையையும் ஆராய்ச்சி முறையையும் கொண்டு பரிசீலனை செய்தே எதையும் ஏற்றுக் கொள்ளும்படி அவர் சீடர்களுக்கு அடிக்கடி சொல்லி வந்தார். எவ் வளவு பெரியவர் எது சொன்னாலும், அவர் பெருமைக் காக அதை ஏற்றுக்கொள்வது முறையன்று என்று வற்புறுத்தி வந்தார். குருட்டு நம்பிக்கையும் அறியாமை யேயாம். அறியாமை இருளை அகற்ற வந்த புத்தர், ஒவ் வொருவரும் தமது அகத்தில் ஞான விளக்கேற்றி இருளைக் கடியும்படியே வேண்டினார்.

வேதாந்தம் பற்றி விரிவுரை கூறுவோர் மந்திக் குருளையையும் பூனைக் குட்டியையும் உபமானமாகக்

---

* அத்ததீப, அத்த சரண, அனன்ன சர,
தம்ம தீப, தம்ம சரண.'

—மகா – பரி – நிர்வாண சூத்திரம்.

† தேவிஜ்ஜ சுத்தம்.

கூறுவர். குரங்கு தன் குட்டியைப் பற்றிய நினைவே யில்லாமல் மரத்திற்கு மரம் தாவும். ஆனால் அதன் குட்டி, தாயின் வயிற்றை இறுகப் பற்றிக்கொண்டு ஒட்டிக்கொள்ளும். பூனைக் குட்டியோ, தாயோடு ஒட்டிக்கொள்ள ஒரு முயற்சியும் செய்யாது. பூனைதான் அதை வாயிற் கௌவிக்கொண்டு இடந்தோறும் சுற்றித் திரியும். இறையருளாலேயே ஜீவன் மீட்சி பெறுதல் பூனைக் குருளைக்கு ஒப்பாகும். புத்தரின் உபதேசத்தின் படி, மந்திக் குருளை போல், மனிதனே முயற்சி செய்ய வேண்டும். தன் வினையின் பயனை ஒவ்வொருவனும் தானே அநுபவித்தாக வேண்டும்!

'சம்சாரத்தில் ஆழ்ந்துள்ளவனின் உள்ளம் முதலைத் தோலால் மூடப்பட்டது; வெட்டினாலும் கத்தி இறங் காது' என்பது **இராமகிருஷ்ணர்** திருவாக்கு. செல்வத் துக் களித்தலும், தரித்திரத்து அழுங்குதலும், எதனிலும் முடிவில் துக்கமடைதலுமான உலக வாழ்க்கையின் உண்மையை அவன் உள்ளம் உணர வேண்டும். இல்லா விடின், **பட்டினத்தார்** கூறுவது போல், விழலுக்கு முத் துலையிட்டு* இறைத்துக் கொண்டேயிருப்பான். உண் மையை உணர்ந்துவிட்டால், கடைத்தேற வழி தேடு வான்; உணர்ச்சிகளை யொடுக்கி ஒழுக்கத்தைப் பேணு வான். உணர்ச்சிக ளொடுங்கியதும், அவன் விடுதலை பெறுவான். உணர்ச்சிகளின் வயப்பட்டு உழல்வோன்

* முத்துலை - மூன்று துலா.

வாழ்க்கைக் கடலில் ஆழ்ந்து தத்தளிக்கிருன். அற மொன்றே அவனைக் கரையேற்றும் நாவாய். சுயநலம்—தானென்னும் ஆணவம்—அற்றதும், மனமாசுகள் நீங்க ஆரம்பிக்கும்; அருள் அரும்பி மலரும்; தருமம் காய்த்துக் கனியாகும்.

## பசியும் அறியாமையும்

சாக்கியமுனி அருளிய இத்தகைய அருளறத்தை மக்கள் நன்கு தெரிந்து கடைப்பிடித்தால் இன்று உலகில் நாம் காணும் கோரக் காட்சிகள் பலவும் ஒரு கணமேனும் நிலைத்திருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் வறுமை யும் பசியும் கோடிக்கணக்கான மக்களை வாட்டி வருத்து கின்றன. இன்று பல்லோர் உழைப்பினுல் சிலர் மட்டும் பிரபுக்களாய்ப்

' பருத்திப் பொதியினைப் போலே
வயிறு பருக்கத் தங்கள்
துருத்திக்(கு) அறுசுவை போடுகின்ருர் !'

மலை போன்ற செல்வமுடையோர் பலர் காயா மரங்களாக வும், கனியில்லாத கற்பகங்களாகவும் விளங்குகின்றனர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஏழை மக்களின் கண்ணீர் அருவியாய், ஆருய்ப் பெருகிக் கொண்டே யிருக்கிறது. பெரும்பாலான மக்களின் பட்டினி, பரிதவிப்பு, நோய் நொக்காடுகளெல்லாம் மற்றையோர் கண்களிலே படாம

லில்லை, ஆனால், மேலே வானம், கீழே பூமி இருப்பது போல், இவையெல்லாம் இயற்கையென்றே எண்ணி அவர்கள் அனைத்தையும் மறந்து விடுகிறார்கள்!

உலகம் தோன்றிய நாள் முதல் இதுவரை எத்தனை சமயங்கள் தோன்றியிருக்கின்றன! எத்தனை ஆசாரியர்களும், ஆசிரியர்களும்! ஆனால், இன்றுவரை மானிடரின் பசிப் பிணிகூட நீங்காமல் நிலைத்து நிற்கிறது! பசியால் வாடும் மக்களுக்குப் பரலோகத் திறவுகோல் அளிக்கப்படுகிறது!

**'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!**

என்று **மணிமேகலை** கூறுகிறது. மேலும்,

**'பாரகம் அடங்கலும்**
**பசிப்பிணி அறுக!'**

என்ற உலக வாழ்த்தும் அந்த நூலிலேதான் ஒலிக்கிறது. 'காணார், கேளார், கால்முடப்பட்டோர், பேணுநர் இல்லோர், பிணி நடுக்குற்றோர் யாவரும் வருக!' என்று அழைத்து மணிமேகலை உணவூட்டுகிறாள். பின்னால், சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்க வேண்டுமென்று அவள் சோழ அரசனிடம் கேட்க, அவ்வாறே மாற்றப்படுகிறது. 'நிறையக் கொடுஞ்சிறை நீக்கிய கோட்டம்...... அறவோர் பள்ளியும், அட்டிற் சாலையும், அருந்துனர் சாலையுமாக மாறுகிறது! நரகச் சிறைபோல்

நலியும் நம் உலகும் அறப்பள்ளியாகவும், அட்டிற்சாலை யாகவும், அருந்துனர் சாலையாகவும் என்று மாறப் போகின்றது ? பசிப்பிணியால் வாடும் மக்களின் ஓலம் என்று ஒழியும் ? 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம்' மறைவது எக்காலம் ! 'மனிதர் நோக மனிதர்' பார்த்து மன அமைதியோடு வாழும் கொடுமை மாறுவது எந்நாள் ?

வறுமையும் பசியும் ஒழியாத உலகிலே, அறியாமை அந்தகாரம் அடர்ந்துள்ள இந்த அடவியிலே, அறம் எப் படி வளரும் ? பசையறக் காய்ந்த பாலையில் அருள் துளிர்ப்பது எங்ஙனம் ? பசி மக்கள் உள்ளத்தில் நன்மை எதையும் வளரவிடாமல் எரிக்கும் தீ. அது மக்களை அழிக்கும் அழல். பசி குடிப் பிறப்பைக் கொல்லும்; விழுப்பத்தை விழுங்கிவிடும்; கல்வியைக் கைவிடச் செய் யும்; நாணை அழிக்கும்; மானிட எழிலையெல்லாஞ் சிதைக்கும், அதனால்தான் தமிழ்மூதாட்டி,

**'வையகம் எல்லாம் வயலாய், வானோர்**
**தெய்வமாா் முகடு சேரியாகக்**
**காணமும் முத்தும் மணியும் கலந்(து) ஒரு**
**கோடானு கோடி கொடுப்பினும், ஒருநாள்**
**ஒரு பொழு(து) ஒருவன் ஊண் ஒழிதல் பார்க்கும்**
**நேர் நிறை நில்லா(து) என்னும் மனனே !'**

என்று பாடினார், 'கொடிது, கொடிது, வறுமை கொடிது !' என்று கூவினார். 'ஐயம் இடுமின், அறநெறி யைக் கைப் பிடிமின் !' என்று அரற்றினார். எனவே,

வறுமை உள்ளவரையில் வையத்தில் ஒழுக்கம் ஓங்காது, மந்திர தந்திரங்களால் மக்களின் மனத்தை ஓரளவு மயக்கி வைக்க முடியுமேயன்றி, மலர்ச்சி யடையச் செய்ய முடியாது. பேரறிவாளர் பெற்ற திரு ஊருணி நீர் என்றார் வள்ளுவர். இதுகாலைப் புல்லறிவாளர் பெற்ற திரு ஊருணியிற் கலந்த விடமாகவே விளங்குகிறது.

'அயலெல்லாம் செங்நெல் காய்க்குலை சாயும்,
அருகெல் லாம்இரை அன்னங்கள் ஆயும்.
புயலெல்லாம் மலர்ப் பூம்பொழில் தோயும்,
பொழிலெல்லாம் கனி போகங்கள் ஈயும்:'

நம் பூவுலகில், ஒருயிரேனும் உணவில்லை யென்று வாடும் வரை, மக்கட் சமுதாயத்தில் நீதியோ நெறியோ இல்லை யெனலாம்.

பசிக்கு அடுத்த பிணி அறியாமை. 'இருளே உலகத்(து) இயற்கை' என்று பாடினார் தமிழ்க் கவிஞர். ஆம், உண்மைதான். 'இருளகற்றும் கை விளக்கே கற்ற அறிவுடைமை' யென்றும் அவரே கூறியுள்ளார். கோடிகோடியான மக்களுக்கு, நாகரிகம் முதிர்ந்த இந்த நவயுகத்திற்கூட, இந்த விளக்கின் ஒளி கிடைப்ப தில்லையே!

பசியாலும் படிப்பின்மையாலும் தட்டுத் தடுமாறி விழும் மக்களை அரிந்து தள்ளுவதற்குப் பொல்லாத போர்களே பரிகாரமாக வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும்

குழப்பமும் குமுறலும் எழக் காண்கிறோம். இரண்டு உலகப் பெரும் போர்களுக்குப் பின்னால், மூன்றாவது போருக்கும் மூர்க்கர்கள் முனைந்து நிற்கிறார்கள்!

'முந்து துயரம் மூடுலகம்,
மூட உலகம் எந்நாளும்
வெந்து தீயும் நரகினுக்கு
விறகு தேடி யிடுமுலகம்' *

என்று பாரசீகப் புலவர் பாடியது பச்சை உண்மையாகவே யிருக்கிறது!

இன்று போதிமாதவர் பூவுலகுக்கு மீண்டும் வந்தால், என்ன காண்பார்? எத்தனை கோயில்கள், எத்தனை மடங்கள். எத்தனை விகாரைகள், எத்தனை ஆராமங்கள், எத்தனை தீர்த்தங்கள்! எத்தனை சாமிகள், எத்தனை சிலைகள்! எத்தனை தூபங்கள், தீபங்கள், பூசைகள், ஆராதனைகள்! தேர்கள், தெப்பங்கள், திருவிழாக்கள் எத்தனை! சமயங்கள், சாஸ்திரங்கள் எத்தனை! இத்தனையையும் தலையின் மேல் தாங்கிக்கொண்டு, பாரம் தாங்காமல் தத்தளிக்கும் மனித சமுதாயத்தைப் பார்க்கும்போது, அவருக்குப் பரிதாபமாகவே யிருக்கும்! 'நான் போதித்த உண்மை சருவ சாதாரணமானது. சூரியனைப் போல் ஒளியுடன் விளங்குவது. இதைப் பார்க்கவும் உணரவும் மறுத்து, மக்கள் எங்கோ சுற்றிச் சுற்றி அலைகின்றனரே!' என்று

* 'உமர்கையாம்' — கவிமணி திரு. தேசிகவிநாயகம் பிள்ளை.

வருந்துவார். அவர் கூறிய உண்மை இதுதான்: 'வாழ்க்கை துக்கம். தன்னலமே துக்கத்தின் காரணம்.' மக்கள் ஆசைப்பேயின் அடிமைகளா யிருக்கும்வரை துக்கம் நீங்காது. சுயநலம் குறைந்து, பரநலம் பெருகி வளர்ந்தால்தான் பாரகத்தின் பிணிகள் ஒழியும். மனமது செம்மையானால், மந்திரம் எதற்கு?

## புத்தர் காலத்து இந்தியா

புத்தர் தோன்றிய காலத்தில் இந்நாட்டை எத்தகைய இருள் கௌவிக் கொண்டிருந்தது என்பதைச் சிறிது பார்ப்போம். இதுபற்றித் தமிழறிஞரும், சமரச சன்மார்க்க சீலருமான **திரு. வி. கலியாணசுந்தரர்** கூறியுள்ளது இது: 'உண்மையை யுணர்த்தும் அறிவெனுங் கருவியை "வேதம்" என்னும் ஒரு நூலாகக் கொண்டும், உண்மையை விளங்கச் செய்யும் தியாகத்துக்குரிய "யக்ஞம்" என்னும் யாகத்தைக் கொலைக் குழியாக்கியும், பிறப்பில் சகோதரர்களாகத் தோன்றிய மக்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்தும், உண்மைக்கு மாறுபட்ட இழிவுகள் இன்னோரன்ன பல நிகழ்த்தியுஞ் சமயத் துறைகட்குச் சிலர் சூழ்ந்த கேட்டால், மன்பதை இருளில் மூழ்கி இடுக்கணுற்ற வேளையில், புத்தரென்னும் பெரு ஞாயிறு தோன்றிற்று. அஞ்ஞாயிறு, அக்கால தேசவர்த்தமானத்துக் கேற்ற வழியில், அறமுறைகள் கோலி, உண்மை மீது படர்ந்திருந்த பனிப் படலத்தை

நீக்கிற்று. சுருங்கக் கூறின், " **சீலம்** " என்பதன் வழிப் புத்தர் உலகைச் செம்மை செய்தார் என்று கூறலாம்.'

புத்தர் தோன்றிய காலத்தில் சாதி சமயங்கள் எந் நிலையிலிருந்தன என்பதை உற்று நோக்கின், அவரால் ஏற்பட்ட மாறுதல்கள் தெளிவாம். அக்கால இந்தியா வில் சமயங்கள் பல இருந்தன; தத்துவ சாத்திரங்களும் அனந்தம். எக்காலத்துமே இந்நாடு சமய உணர்ச்சியிற் குறைந்திருந்ததில்லை. 'இந்தியா மதத்தை அளவுக்கு அதிகமாகவே உண்டாக்கிவிட்டது!' என்று ஆசிரியர் **லின்-யு-டாங்** குறிப்பிட்டிருப்பது உண்மைதான். இன்றைய உலகில் இறைவன், ஆன்மா, பிரபஞ்சம் ஆகியவை பற்றி எத்தனை தத்துவ சாத்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ இவையெல்லாம் இந் நாட்டில் பண்டைப் பழங்காலத்திலேயே பரிசீலனை செய்து சித்தாந்தங்களாக வகுக்கப் பெற்றிருந்தன. வேதங்கள், உபநிடதங்களை ஆதாரமாகக் கொண்டு விரிவான சாத்திரங்கள் எழுதப் பெற்றிருந்தன. அவைகளைப் போலவே, பூதவாதம் (உலகாயதம்) பற்றியும் விரிவான ஆராய்ச்சிகள் செய்து முடிக்கப் பெற்றிருந்தன. சாத்திரங்கள் பல ஏற்பட்டதுடன், நாடெங்கும் தத்துவப் போர்களும் நிறைந்திருந்தன. போர்கள் மிகும்போது, உண்மைப் பொருள் நழுவி விடுவது இயற்கை. அதுபோல் உள்ளப் பண்பாடும், உன்னத வாழ்வுக்குரிய நெறியும் மறக்கப் பெற்றுப் பெரும்பாலும் மக்கள் நிழலையே தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர்.

அக்காலத்துச் சமயங்களை நான்கு தலைப்புக்களில் குறிப்பிடலாம் :

வேத உபநிடதங்களை ஆதாரமாய்க் கொண்ட வைதிக சமயம் (பிராமண மதம்), சமண சமயம்*, ஆசீவக சமயம், பூதவாதம். இவற்றுள் சமண சமயமும் ஆசீவகமும் புத்தர் காலத்திலேயே ஏற்பட்டவை. வைதிக சமயத்தைப் பின்பற்றி யொழுகியவர் அனைவரும் ஒரே தத்துவமும் கொள்கையுமுடையவர் என்று கூறமுடியாது. அவர்களுக்குள் பலபல பிரிவுகள் உண்டு. பிற்காலத்தில், சுமார் 15-நூற்றாண்டுகட்கு அப்பால், இந்த வேற்றுமைகள் இறுகித் தென்னாட்டில் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், சைவம் என்ற நான்கு தனிப் பெரும் சித்தாந்தங்களாக நிலைபெற்றன. இங்கு நாம் கவனிக்கவேண்டியது, வேதாந்த சூத்திரங்களை ஆதாரமாய்க் கொண்டு அவற்றிற்குப் பொருள் தெளிப்பதில் பிற்காலத்தில் ஏற்பட்ட இந்த நான்கு தெளிவான பிரிவுகள் புத்தர் காலத்தில் இல்லை யென்பதே.

முக்கியமாக வைதிக சமயம் ஒன்றே பெரும்பாலும் நாட்டில் பரவி யிருந்தது. அச் சமயத்திற்கு அடிப்படையாக விளங்கிய வேதங்கள் நான்கும் மற்ற அறநூல்களும் எல்லா வகுப்பார்க்கும் பொதுவில் போதிக்கப்படவில்லை. அவற்றின் உட்பொருள்கள் மறக்கப் பெற்று, சோம

* சமண சமயத்தை ஆருகதம், ஜைன மதம் என்றும் கூறுவதுண்டு.

பானமும், ஊன் உணவும், ஊனுடை வேள்விகளுமே பெரிதும் ஓம்பப்பெற்று வந்தன. மற்றும் சமுதாய வாழ்வில், மக்கள் நான்கு முக்கிய சாதிகளாகவும், அப்பாலும் பல பிரிவுகளாகவும் பிரிந்து, தமக்குள் நெருங்கிய தொடர்பும் நேசப்பான்மையும் வளர வகையில்லாத முறையில் பிளவுபட்டிருந்தனர். பிராமணச் சாதியினர் சமுதாயத்தில் முதலிடம் பெற்று, மன்னர்களுக்கு ஆலோசனை கூறவும், அவர்கள் மூலம் பெரிய யாகங்கள் செய்யவும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். பிராமணரே உயர்ந்தவரென்ற கொள்கை நிலவியிருந்தது. அவர்களே சமய வழிகாட்டிகளாகவும், சமய நூல்களின் பாது காவலர்களாகவும் விளங்கினர். மற்றும் பெரும்பாலான பொது மக்கள் கல்வி மணமின்றி, இன்று போல், அன்றும் பாமரராகவே இருந்தனரென்று கொள்ளலாம்.

அக்காலத்தில் பெரும்பாலான மக்கள் ஊனுணவு உண்போராகவே யிருந்தனர். வேதியரும், மேல் நிலையிலிருந்த மற்ற வகுப்பினரும் புலால் உண்பவரே. வேள்விகளில் பசுக்கள். மாடுகள். குதிரைகள், ஆடுகள் முதலியவை தேவர்களுக்குப் பலியாக அளிக்கப்பட்டன. 'அக்காலத்தில் கடவுள் பெயரால், சமயத்தின் பெயரால், வேள்வியின் பெயரால், உயிர்க் கொலைகள் நிகழ்த்தப்பட்டன; குடி பெருகலாயிற்று; மக்களுக்குள் பிறப்பால் உயர்வு தாழ்வு வகுக்கப்பட்டன......... கொலையுங் குடியுஞ் சாதிக் கொடுமையும் யாண்டுங் கடவுள் நெறியாகக் கருதப்பட்டன என்று சுருங்கச் சொல்லலாம்.'*

* '**தமிழ் நூல்களில் பௌத்தம்**' - திரு. வி கலியாணசுந்தரர்.

# பௌத்த தருமம்

நாட்டில் தாம் கண்ட கொடுமைகளை ஒழிக்கப் போதி மாதவர் முனைந்து நின்றார். சமயங்களின் பெயரால் கோப தாபத்துடன் விவாதித்துக் கலகம் செய்வதை அவர் அறவே வெறுத்தார். நூல்களைப் புரட்டிக் கொண்டு, ஏட்டுப் புழுக்களாய், வாழ்க்கை முழுவதையும் தத்துவ ஆராய்ச்சியில் வறிதே கழிப்பதையும் அவர் கண்டித்தார். ஆண்டவன் பெயராலும், மற்றைத் தேவர்கள் பெயராலும் ஆயிரக்கணக்கான வாயில்லாப் பிராணிகளை வதை செய்வதை நிறுத்தி, யாகமென்னும் கொலைக் குழிகளை மூடும்படி போதித்தார். சமுதாயத்தில் மக்களுக்குள் அமைந்த ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, ஒடுக்கமான சாதீயச் சுவர்களுக்கு நடுவே சிதறி நசுக்குண்டு கிடந்தவர்கள் கடைத்தேறும் வழியை வகுத்தார். நாடெங்கும் நாறிக் கொண்டிருந்த சாதி யென்னும் சாக்கடைகளை மூடி, சகல மக்களுக்கும் எவ்விதப் பாகுபாடு மின்றி அறவழியைப் போதிக்க ஏற்பாடு செய்தார்.

புத்தர் போதித்த அறம் பௌத்த தருமமாயிற்று. அந்த அறத்தின் வழியே துறவிகளான பிக்குகளின் திருக்கூட்டம் பௌத்த சங்கமாயிற்று. தருமத்தையும் சங்கத்தையும் அருளிய புத்தர் அறத்தகை முதல்வரானார். எனவே, பௌத்தர்களுக்குப் **புத்தர், தருமம், சங்கம்** ஆகிய மூன்று அடைக்கலங்கள் உண்டு. இன்றைக்கும் அவர்கள்,

"புத்தம் சரணம் கச்சாமி,
தர்மம் சரணம் கச்சாமி,
சங்கம் சரணம் கச்சாமி!".

என்று மும்மைச் சரணங்களையும் கூறுவதைக் கேட்கலாம். இம்மூன்று அடைக்கலங்களும் 'மும்மணிகள்' என்று போற்றப்படுபவை. புத்தரைச் சரணடைவதாகக் கூறுவதில் கௌதம புத்தரை மட்டுமே வாழ்க்கை வழித் துணையாகக் கொள்வதாக எண்ணவேண்டுவதில்லை. புத்தர் ஒருவரல்லர். கௌதமருக்கு முன்னும் பல புத்தர்கள் இருந்ததாகவும், கௌதமர் கடைசியாகவந்த புத்தரென்றும், இனியும் **மைத்திரேய புத்தர்** ஒருவர் வருவாரென்றும் பௌத்த சமயம் கூறும். ஆகவே, திரிசரணங்களில் 'புத்தர்' என்ற சொல் அறத்தகை முதல்வரின் பீடத்தை—அல்லது தலைமை நிலையையே—குறிப்பதாகும். புத்தரும் தம்மைத் 'ததாகதர்' என்றே சொல்லிக்கொண்டார். ததாகதர் என்றால் முந்திய ஆன்றோர்களை — அதாவது புத்தர்களைப் பின்பற்றுவோர் என்று பொருள்.

புத்தர் எந்த முறையிலே அறக்கிளர்ச்சி செய்தார், கொடுமைகளை எதிர்த்தார்? அன்பு முறையையே அவர் கைக்கொண்டார். அருள் நெறியேயன்றிப் பிறநெறியை அவர் அறியார். அதுவே அவருக்கு வெற்றியளித்தது. அதுவே அவரது பெருமை. இன்றுவரை உலகில் வாள் வலியாலோ, உடல் வலியாலோ துன்புறுத்தி ஒரு மனிதனைவது பௌத்த சமயத்தில் சேர்க்கப்பட்டதாகச் சரித்

திரத்தில் ஆதாரமில்லை. புத்தருடைய பெருமை அச்சமயத்திற்கும் நிலைத்துவிட்டது.

புத்தர் தமக்கு முன்னிருந்த அறநூல்களை நன்கு தெரிந்துகொண்டு, அவற்றில் கண்ட நல்லன யாவற்றையும் எடுத்துக்கொண்டார் என்பது அவர் உபதேசங்களிலிருந்தே தெரிகிறது. ஆயினும், இறைவன், ஆன்மா உலகம் ஆகியவை பற்றிய அவர் போதனையும், வேள்வி ஊனுணவு, சாதிப் பாகுபாடு முதலியவற்றை அவர் எதிர்த்ததும் வைதிகத்திற்கு முரண்பாடாகும். வேள்விக்குப்பதில் 'அமிஸ பூஜை' என்று சொல்லப்படும் தரும பூஜையே சிறந்ததென்றும், பலிகளைப் பரிசாகக் கொடுத்துத் தெய்வங்களின் திருவருளைப் பதிலாகப் பெற எண்ணுவது தவறென்றும் அவர் போதித்தார். இவ்வளவு போதனைக்குமிடையில், வேதங்களை அவர் எவ்விடத்திலும் பழித்து இழித்துக் கூறவில்லை. பௌத்த சமய சம்பந்தமான பிடக நூல்களில்* ஓரிடத்திலாவது வேத கண்டனம் இல்லை. ஊன் வேள்வி முற்காலத்தில் இல்லையென்றும், பின்னால் பிராமணர் அதைத் தொடக்கி வைத்தனர் என்றும் 'சுத்த நிபாத' நூலில் கூறப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

பகவர் சிராவஸ்தி நகரையடுத்த ஜேதவன ஆராமத்திலிருந்தபோது, ஒரு சமயம் கோசல நாட்டுத் தனிகரான பல வயோதிகப் பிராமணர் அவரைத் தரிசிக்க வந்

* பிடக நூல்கள் மூன்று—திரிபிடகம்; பிடகம்—கூடை.

திருந்தனர். அப்போது பண்டைப் பிராமணருக்கும் பிற்காலப் பிராமணருக்குமுள்ள வேற்றுமைகள்பற்றி அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் மறுமொழி கூறினர். முற்காலத்து வேதிய ரிஷிகள் புலனடக்கம் பெற்று, அருந்தவத்தை மேற்கொண்டு, ஆடுமாடுகள். தானியங்கள், பொன் முதலியவற்றை உடைமைகளாகக் கொள்ளாமல், தியானமே செல்வமாகப்பெற்று வாழ்ந்ததையும், நாற்பத்தெட்டு வருடம் அவர்கள் பிரமசரியத்தைக் கடைப்பிடித்து, விவாகமான பிறகும் கனவிலும் போக விலாசங்களில் ஆழ்ந்துவிடாமல், உத்தம வாழ்க்கை வாழ்ந்ததையும், உயிர்க்கொலை செய்து யாகங்கள் இயற்ருமல், தமக்குப் பிறரளித்த தானியங்கள், உடைகள், எண்ணெய், வெண்ணெ முதலியவைகளைக்கொண்டே யக்ஞங்கள் நடத்தித் தியாகிகளாகத் திகழ்ந்ததையும், அறமே அவர்களைப் பாதுகாத்து வந்ததையும் அவர் எடுத்துக் கூறினர். பிற்கால வேதியர், செல்வத்திலும் போகங்களிலும் நாட்டமுற்றுப் பேராசைகொண்டு, தமது பண்டைப் பெருமையிலிருந்து வழுவி வந்ததையும், ஆயிரக்கணக்கில் பசுக்களை யாகங்களில் வதைத்தும், மன்னர்கள் மூலம் அசுவமேதம், புருஷமேதம், வாசபேயம் முதலியவற்றைச்செய்ய முற்பட்டதையும், அவர்களும் க்ஷத்திரியர்களும் ஐம்புல இன்பங்களில் சிக்குண்டு சீர்கெட்டதையும் அவர் விளக்கி யுரைத்தார்.

வேதியரிடம் அண்ணலுக்கு வெறுப்பில்லை, பகையுமில்லை, உலகில் தீயொழுக்கத்தைக் காட்டிலும் அறி

யாமையே பல பாவங்களுக்கும் காரணம் என்று அவர் கருதியதால், நமது கருணை மார்க்கத்தை யாவர்க்கும் உபதேசிக்கச் செய்ததோடு, முக்கியமாகப் பிராமணர்களுக்கும் உபதேசிக்கும்படி அவர் பிக்குகளுக்கு ஆணையிட்டு வந்திருக்கிறார். பிராமணர்கள் ஊனும் உடைகளும் அளித்துப் பிக்குகளுக்கு உபகாரம் செய்து வந்ததையும் அவர் போற்றியிருக்கிறார். ஆயிரக் கணக்கான பிராமணர் அவருடைய தருமத்தை ஏற்றுக் கொண்டு பிக்குகளாயினர். அவருடைய முதன்மையான சீடர்களில் இருவராகிய **சாரீபுத்திரரும், மௌத்கல்யாயனரும்** பிராமணர், உருவேலா வனத்திலிருந்த பிராமண முனிவரான **மகா காசியபர்** தம்முடைய சீடர்கள் ஐஞ்நூற்றுவரோடு ததாகதரைச் சரணமாகக் கொண்டார்.

பிராமணரைப் போலவே க்ஷத்திரியர்களிலும் பலர் பௌத்த தருமத்தை மேற்கொண்டனர். பல இளவரசர்கள், மஞ்சள் உடையணிந்து, மாதவரின் அடியார்களாக விளங்கினர். அரசர் பலர் தம் அரியாசனங்களை விட்டிறங்கி, ஆதி மூர்த்தியின் அடிகளைப் பணிந்து, அறங்கேட்டு உய்ந்தனர். மகத நாட்டரசர் **பிம்பிசாரரும், கோசல** நாட்டரசர் **பிரசேனஜித்** என்ற பசேனதியும் அவருக்கு அடியராகி, அருளறம் வளர்வதற்கு அருந்தொண்டாற்றி வந்தனர். அவர்களுடைய பிராமண மந்திரிகளும் அவரையே தம் குருமணியாக ஏற்றுக் கொண்டனர்.

அந்தணர், அரசர், போர் வீரர்களைப் போலவே, மற்றும் பல சாதியினரையும் புண்ணியமூர்த்தி தமது தருமத்தில் சேர்த்துக் கொண்டுவந்தார். சாதியும், நிறமும், தொழிலும், தோற்றமும் பௌத்த மார்க்கத்தை மேற்கொள்ளவும், பிக்கு சங்கத்தில் சேரவும் தடையாக இருக்கவில்லை. எக்குலத்தோராயினும், மக்கள் அனைவரையும் அத்தருமம் இருகையாலும் வரவேற்று அணைத்துக் கொண்டது. தெருக் கூட்டுவோரும், மீன் பிடிப்போரும், வேடர்களும், சமுதாயத்தின் அடித் தலத்தில் ஒடுங்கிக் கிடந்த மற்றோரும் புத்த தருமத்தைப் புகலிடமாய்க் கொள்ள வழி திறந்துவைக்கப் பெற்றது. குப்பையள்ளும் சுநீதனைத் ததாகதர் தாமே சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். இவனே பின்னால் பெரிய முனிவனாக விளங்கினான். கொள்ளைக்கும், கொலைக்கும் கூசாமல், காடும் நாடும் அதிரும்படி கலங்கி வந்த திருடர் தலைவனை **அங்குலிமாலனை*** அவர் அன்போடு அரவணைத்துக் கொண்ட பெருமை பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்க நிகழ்ச்சியாகும். குருநாதரின் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்த அங்குலிமாலன் வெளியே மீளவேயில்லை; அதனுடன் கலந்துவிட்டான். மற்றும் புத்தருடைய அந்தரங்கச் சீடர் பதின்மரில் ஒருவராகிய **உபாலி** 'நாவிதர்' என்ற மருத்துவ குலத்தைச் சேர்ந்தவர். இவர் சங்கத்தில் உறுப்பினராயிருந்ததோடு, பிக்குகளின் ஒழுக்க முறையைக் கவனிக்கும் சங்கத் தலைவராகவும் திகழ்ந்து வந்தார்.

---

* இவனது பெயர் 'அங்குலிமாரகன்' என்றும் காணப்படுகிறது.

'சாதியால் வந்த சிறுநெறி' என்றும், 'நீதியால் வந்த நெடுந் தருமநெறி' என்றும் குறிப்பிடுகிறார் கம்பர். நீதியின் உறைவிடமாகிய போதிநாதர் நெடுந் தரும நெறியையே திறந்து வைத்து, மக்களை அவ்வழியே அழைத்துச் சென்றார். அவர் அடியார்களும், சாதிப் பித்தும் சமயச் செருக்கும் ஒழிந்து, சமரச மனப்பான்மையை மறவாது போற்றி வந்தனர். ஒரு சமயம் அடிகளின் அணுக்கத் தொண்டரான ஆனந்தர் நெடுவழி செல்கையில், கிணற்றடியில் நீரிறைத்துக் கொண்டிருந்த பெண்ணொருத்தியிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டார். அவள் தீண்டாச் சாதியைச் சேர்ந்தவளாதலால், அப்பெரியாருக்கு நீரளிக்கத் தயங்கினாள். 'தண்ணீர்க்கும் நீரிறைக்கும் கயிற்றுக்கும் சாதியுண்டோ?' என்று ஆனந்தர் கேட்டார். அந்தோ! உலகிலே ஒப்பற்று விளங்கிய ஒரு சமுதாயம், சாதி வகுப்பால் முடை நாற்றத்துடன் அழுகி முடமாகி வீழ்ந்திருக்கும் பரிதாபத்தைக் காண வேண்டுமானால் இந்தியாவைப் பார்த்தாலே போதும்! இந்த நாட்டிலேதான் புத்தர் பெருமான் இவ்வாறு அறவுரை புகன்றார்:

'ஓ பிக்குகளே! கங்கை, யமுனை, அசிரவதி, சரயு, மாஹி முதலிய பெரு நதிகள் கடலில் கலக்கும்போது தங்கள் பழைய பெயர்களையும், தோன்றிய இடங்களையும், எவ்வாறு இழந்து ஒரே சமுத்திரம் என்று பெயர் பெறுகின்றனவோ, அவ்வாறே க்ஷத்திரிய, பிராமண, வைசிய, சூத்திரரென்ற நால் வருணத்தாரும் ததாகதர் உபதேசித்த தருமத்திலும் சீலத்திலும் புகுந்த பின்பு, வீட்டை விட்டு

விடற்ற வாழ்க்கையை மேற்கொண்ட பின்பு, அவர்களு டைய பழைய நாம கோத்திரங்களை இழந்து துறவிகள் என்றே அழைக்கப் பெறுவர்.'

மறத்தின் வளர்ப்புப் பண்ணையாக விளங்கிய சாதிக் காட்டைச் சன்மார்க்கத்தால் அழித்து வளஞ் செய்து, அறிவு விதைகள் விதைத்து, அறப் பயிர் வளர்த்து, இன்பக் கதிர் விளைக்க முற்பட்டோரில் முதல்வர் கௌதம புத்தர் என்பதை என்றும் மறக்கமுடியாது.

பௌத்த தருமம் இந்தியாவில் மிக வேகமாகப் பரவிய முறை வியக்கத் தக்கதாகும். மழை முகம் கண்ட பயிர் போல், மக்கள் அதை வரவேற்றனர். ஆயிரத்தைந்நூறு பிக்குகளுடன் ததாகதர் நாடு நாடாக நடந்து சென்று அறவுரைகள் கூறியதும், மன்னர்கள் மந்திரிகள், மக்கள்-யாவர் உள்ளத்தையும் கவர்ந்து வெற்றி மேல் வெற்றி பெற்றதும் உலக சரித்திரத்திலேயே ஒப்பற்ற பகுதியாகும். நாடெங்கும் பௌத்தம் தழைத்து வளர்ந்தது. காஸ்மீரம், காந்தாரம், ஆப்கானிஸ்தானம், மற்றும் மத்திய ஆசிய நாடுகள் பலவற்றிலும் ததாகதரின் தருமம் பரவியிருந்ததைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் இப்போது தெளிவாக எடுத்துரைக்கின்றனர்.

அசோக சக்கரவர்த்தி காலத்தில், அதாவது கௌதமர் காலத்திற்குச் சுமார் 200 வருடங்களுக்குப் பின், பௌத்த தருமம் தூர தொலைவிலுள்ள பல நாடுகளிலும் திகழ ஆரம்பித்தது. பின்னால் சீனு, ஜப்பான், பர்மா,

இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய ஆசிய நாடுகள் பலவற்றிலும் அது தண்ணருள் பரப்பி வந்தது. சேர, சோழ, பாண்டியர் ஆண்டுவந்த தென்னாட்டிலும் புத்த ஞாயிற்றின் பேரொளி பல நூற்றாண்டுகளாகப் பரவியிருந்ததைச் சரித்திரத்திற் காணலாம். காஞ்சிக்கு அருகே அசோகர் கட்டிய விகாரை இருந்தது. காவிரிப் பூம்பட்டினம், நாகைப்பட்டினம், தஞ்சாவூர், மதுரை திருச்சிராப்பள்ளி, வஞ்சிமாநகர், முதலிய பெரிய நகரங்களிலும், பிற ஊர்களிலும் பௌத்தமதம் நன்கு செழித்து வளர்ந்தது. சுமார் ஆயிரம் வருடம் தென்னாட்டில் அது நிலைத்திருந்தது.

## அறிஞர் கருத்துக்கள்

கதிரவனுக்கு ஒரு நாடு, ஓரெல்லை என்றில்லாதது போலவே புத்த ஞாயிற்றுக்கும் தனி நாடு என்பதில்லை. அவர் காலங் கடந்த பெருஞ் சோதி. எனவே அவரது கருணை வெள்ளம் கரை புரண்டோடிக் கண்டங்களை இணைத்துக் கொண்டதில் வியப்பில்லை. உண்மையிலேயே ஓர் உலகப் புரட்சிக்கு அடிகோலியவர் அவர் என்பதை 2,500 வருடங்களுக்குப் பின் இக்காலத்து அறிஞரும் ஆராய்ந்து கூறுகின்றனர். அழிவுப் பாதையில் ஆவேசமாய்ச் சென்று கொண்டிருக்கும் இன்றைய உலகம் கடைத்தேற வேண்டுமானால், மீண்டும் புத்தர் போதித்த அறத்தினைப் பரிசீலனை செய்து, அதை இக்காலத்திற்கு

ஏற்ற முறையில் அமைத்துக்கொண்டு வாழ்தலே தக்க வழியாகத் தோன்றுகிறது என்று பேரறிஞர் **எச். ஜி. வெல்ஸ்** தமது உலக சரித்திரத்தில் கூறியுள்ளார்.

'வெளித் தோற்றமான பூத பௌதிக விசாரணையிலேயே ஒரு மதம், அரச மரத்திற் பிறந்து, ஆலமரம்போல் தழைத்து வேரூன்றி வளர்ந்து, பாரிசாதம் போல் பூத்து, அரிச் சந்தனம் போல் உலகெங்கும் நறுமணம் வீசி, கற்பகம் போல் நிருவாண அமிழ்தத்தை வழங்கிய விதம் மிகவும் போற்றத் தக்கதாம்' என்று அறிஞர் திரு. **ரைஸ் டேவிட்ஸ்** பாராட்டியிருக்கிறார். இவரும் இவருடைய மனைவியாரும் பௌத்த சமய நூல்களைப் பாலி மொழியிலிருந்து ஆங்கிலத்தில் பெயர்ப்பதில் செய்துள்ள பணியை அளவிட்டுரைத்தல் அரிது.

'இந் நாடு பெருஞ்சோதிகளைத் தான் பெற்றிருந்ததோடு, மற்ற நாடுகளிலுள்ள இருளை நீக்கி ஒளி செய்வதற்கு அலைகளை எடுத்துச் சென்றிருக்கிறது. 2,500 ஆண்டுகட்கு முன் புத்தர் அருளிய செய்தி இந்தத் தேசத்திற்கும், இந்தக் கண்டத்திற்கும் மட்டுமேயன்றி, உலகனைத்திற்குமே பொதுவான பெருஞ்சோதியாகும்' என்பது உலகம் புகழும் இந்தியப் பிரதமமந்திரி **திரு. பண்டித ஜவாஹர்லால் நேருவின்** புகழ்மாலை.

தத்துவ சாத்திரப் பேராசிரியர் '**பாரத ரத்னம்' டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்** கூறியுள்ள அரிய வாக்கியங்கள் இவை:

'புத்தர் தம் உபதேசங்களை உலகின் மனச் சான்றிலே பதித்துவிட்டுப் போயிருக்கிறார். உலகனைத்திலுமுள்ள தத்துவ ஞானிகளும் புத்தருடைய அழைப்புக்கு இன்று செவி சாய்த்து வருகின்றனர்......

'புத்தர் போதித்த தத்துவங்களான அன்பும் உண்மையும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், உலகம் முழுவதும் சமாதானத்தோடும் சாந்தியோடும் வாழ முடியும்......

'ஒரு சமயம் புத்தர் "தலையை மழிப்பதற்குப் பதிலாக உங்கள் பாவங்களை மழித்துத் தள்ளுங்கள்!" என்று கூறினார்......

'அரசுகளும் மக்களும் இந்த உபதேசங்களைப் பின்பற்றி, ஞானத்தையும் கருணையையும் தமக்கு வழிகாட்டுந் துணையாக ஏற்றுக் கொண்டால், நம் உலகம் சீர்திருத்தி வசிப்பதற்கு ஏற்றதாகும்......'

**சுவாமி விவேகானந்தர்** அமெரிக்காவில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் புத்தரைப் பற்றியும், அவர் அறத்தைப் பற்றியும் விளக்கியுள்ளார். அதில் ஒரு பகுதி கௌதமரை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போலுளது:

'அவர் (புத்தர்) தம்மைப் பற்றிச் சொல்லிக்கொண்டது இதுதான்: "ஆகாயத்தைப் போல் எல்லையற்ற பேரறிவுக்குப் புத்தர் என்று பெயர்; கௌதமராகிய நான்

அந்த நிலையை அடைந்துள்ளேன்; நீங்கள் அனைவரும் அதற்காக முயற்சி செய்தால் அதை அடைய முடியும்." அவர் சுவர்க்கமடைய விரும்பவில்லை, பணத்தை வேண்டவில்லை; தமது சிம்மாசனத்தையும் மற்றைப் பொருள்களனைத்தையும் துறந்து, இந்திய நாட்டின் தெருக்களில் அலைந்து தம் உணவுக்காகப் பிச்சையெடுத்துக் கொண்டு, கடல் போன்ற விசாலமான இதயத்துடன், மக்கள், விலங்குகளின் நன்மைக்காக உபதேசம் செய்து வந்தார். ஒரு யாகத்தைத் தடுத்து, விலங்குகளுக்குத் தமது உயிரையே அளிக்கத் தயாராயிருந்த மனிதர் அவர் ஒருவரே. இத்தனைக்கும் அவருக்குத் தூண்டுகோலாக உந்தக்கூடிய எவ்வித ஆசையுமில்லை. ஒரு சமயம் ஒரு மன்னனிடம், "ஆட்டுக்குட்டி யொன்றைப் பலி கொடுப்பது நீ சுவர்க்கமடைய உதவுமென்றால், ஒரு மனிதனையே பலிகொடுப்பது அதைவிட அதிக உதவியாகும்; ஆதலால் என்னையே பலியிடு!' என்று கூறினார். மன்னன் திடுக்கிட்டுப் போனான்! எனினும், இந்த மனிதருக்கு ஆசையெதுவும் இருந்ததில்லை. ஊக்கமாகக் கருமத்தைச் செய்துகொண்டே பரிபூரணமடைந்த மனிதர் அவர். அவர் எவ்வளவு உயர்ந்த சிகரமான வாழ்வை அடைந்தாரோ, அவ்வாறே நாமும் கருமத்தைச் செய்வதன் மூலம் ஆன்மீக நிலையின் உச்சியை அடைய முடியும் என்பதை அவர்நிலை காட்டுகின்றது.

கடைசியாகப் புத்தர் பெருமானைப் பற்றிக் காந்தியடிகளின் கருத்தைக் கவனிப்போம்;

'புத்தருடைய போதனைகளில் முக்கியமான பகுதி இப்போது இந்து சமயத்தின் ஒரு பகுதியாகச் சேர்ந்திருக்கிறது என்பது எனது திடமான அபிப்பிராயம். கௌதமர் இந்து சமயத்திலே செய்த பெரிய சீர்திருத்தத்தை மாற்றி, இன்று இந்து—இந்தியா மறுபடி பின்வாங்கிப் போகமுடியாது. அவருடைய பெருந்துறவினாலும், அப்பழுக்கற்ற அவருடைய தூய வாழ்க்கையாலும் அவர் இந்து சமயத்தில் அழிக்க முடியாத மாறுதலைச் செய்திருக்கிறார்; அந்த மாபெரும் குருவுக்கு இந்து சமயமும் நன்றியோடு என்றும் கடமைப்பட்டிருக்கிறது.'

புத்தரைத் திருமாலின் ஒன்பதாவது அவதாரமாகச் சில வைணவ நூல்கள் கூறும். பௌத்த சமயத்தில் பற்றுள்ள பலகோடி மக்களும் அவரை ஓர் அவதார புருடரென்றே கருதுவர். ஆனால் இறைவன் நிலையில் தம்மை உயர்த்தி வணங்கும்படி புத்தர் யாண்டும் கூறியதில்லை; தம்முடனிருந்த அடியார்கூட அவ்வித எண்ணம் அவர் இடம் கொடுக்கவில்லை. மனிதராகவே தோன்றி, மனிதராகவே வாழ்ந்து, மனிதராகவே அவர் முடிவெய்தினார். ஆனால் எத்தகைய மனிதர்! எல்லா வகையிலும் ஆச்சரியமான மனிதர்! 'மானிடத் தருவில், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கப்பால் ஒருமுறை மலரும் ஒண்மலர்!' என்று உலகமே போற்றக்கூடிய மனிதர்!

# போதி வேந்தரின் அழகு

அம்மனிதர் தோற்றத்தில் எப்படியிருந்தார்? மக்களிடம் அவர் எப்படிப் பழகினுர்?

புத்தர் உயர்ந்த அங்க இலக்கணங்களையெல்லாம் பெற்றிருந்ததாகவே பழைய நூல்கள் கூறுகின்றன. முற்புறத் தோற்றத்தில் அவர் சிங்கம்போலிருந்தார். வனத்தில் தனியே திரியும் அழகிய ஆண் யானைபோல அவர் நடந்து செல்வது வழக்கம். அவர் கால்கள் மானின் கால்களைப் போலிருந்தன, மெல்லிய உடல், தங்க நிறமுள்ள மென்மையான சருமம், தாமரை மலர்போல் மென்மையான தடக் கைகளும் பாதங்களும், நீண்ட விரல்கள், சங்குபோல் உருண்ட கணைக்கால்கள், இந்திர நீலம்போல் இருண்ட தலைமுடி, கருமையான நீலக்கண்கள், பசுவின் இமைகளைப்போல் நீண்டு அகன்ற இமைகள், வரிசையாகப் பதித்த முத்துக்களைப்போன்ற பற்கள், பவளவாய், தண்ணொளி பரப்பும் சந்திரவதனம் ஆகிய இத்தனை உறுப்பு நலன்களும் வாய்ந்த புத்தரை வருணிக்கும்போதெல்லாம், பண்டைப் புலவர்களுக்கு ஆண் யானையும், சீரிய சிங்கமும், காற்ருய்ப் பறந்தோடும் கறுப்பு மானுமே நினைவுக்கு வந்திருக்கின்றன. சிங்கம் போன்ற எடுப்பான நெஞ்சும், முதுகோடு ஒட்டிய வயிறும், உடலின் கம்பீரத் தோற்றமும் அவர் அசைந்தசைந்து நடந்து சென்றது நாகத்தின் நடையழகையே நினைவுறுத்தும். ஆனால், சிங்கம் போன்ற மிடுக்கான

கம்பீரத் தோற்றத்துடன், அவர் அன்னம் போன்ற அமைதியையும் பெற்றிருந்தார்.

எல்லா இனிமைகளும் ஒருங்கே பொருந்தியிருந்ததுடன், அவர் குரலும் இசைக்குரலாக இருந்தது. எந்த இடத்தில், அவர் குரலைப்பற்றிக் குறிக்க நேர்ந்தாலும். அது 'கருவிக'ப்* பறவையின் இசைபோலிருந்ததாகவே குறிக்கப் பெற்றுள்ளது. புத்தர் பெருமானின் பொன்மொழிகள் லட்சக்கணக்கான மக்களைக் கவர்ச்சி செய்ததற்கு, அம்மொழிகளின் உயர்வோடு, அவர் தோற்றத்தின் இனிமையும், குரலின் இசையும் காரணங்களாயிருந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உலகில் வழங்கி வரும் ஆடல்கள், பாடல்கள், நூல்களிலும், சிற்பிகளும் சைத்திரிகர்களும் தங்கள் உளியாலும், தூரிகையாலும் சமைத்து வைத்துள்ள சிலைகள், சித்திரங்களிலும், நாம் கருணைமூர்த்தியான புத்தரை ஒரேபடியாய்த்தான் காண்கிறோம். ஆழ்ந்த அறிவும், குளிர்ந்த அன்பும் தவமும் ஒளி பொருந்திய முகத்துடன், அசைதலும் துளங்குதலுமின்றி அமைதியோடு ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருப்பதுபோன்ற உருவமே நம் கண் முன்பு வருகிறது. கம்பீரத் தோற்றம், சாந்தி நிறைந்த தண்மதி போன்ற திருமுகம், கருணைபொழியும் கண்கள், இத்தனையுடன்

* இமயமலைச் சாரலிலுள்ள ஒருவகைப் பறவை; அதன் குரல் இசைமயமானது.

கையிலே திருவோடு ஏந்திய உருவம் எப்போது தங்கஎிடம் வரப்போகிறது என்று அங்கநாடு, கோசலம், மகதம், குருநாடு, மிதிலை, காசி முதலிய இடங்களில் வசித்த பண்டை மக்கள் ஆர்வத்தோடு துடித்துக் கொண்டிருந்தனர் என்றால், அதற்கேற்ற எழிலும் அழகும் புத்தரிடம் இருந்திருக்கவேண்டும்.

கருங்கல்லிலும், சலவைக் கல்லிலும், வெண்கலத்திலும் அமைந்த பல்வேறு புத்தர் சிலைகளைப் பண்டித நேரு பார்த்துப் பார்த்து வியந்திருக்கிறார். 'உலகச் சந்தடிகளுக்கு அப்பால், உணர்ச்சிகளும் ஆசைகளும் ஒடுங்கிப் பரமோன நிலையில் அமர்ந்துள்ள புத்தரின் ஓவியத்தைக் காணும்போது, நாம் அண்டமுடியாத, அடையமுடியாத தொலை தூரத்தில் அவர் இருப்பதாகத் தோன்றுகிறது' என்று அவர் கூறுகிறார். ஆனால், உடனேயே அவருக்கு வேறொரு கருத்தும் தோன்றுகிறது; 'அவருடைய கண்கள் மூடியிருக்கின்றன. ஆயினும் அவைகளிலிருந்து ஓர் உயிர்ச்சக்தி எட்டிப் பார்க்கின்றது. அவர் உடல் முழுதும் மூலாதாரமான ஜீவசக்தி நிறைந்து விளங்குகின்றது. ஆண்டுகள் பல்லாயிரம் கழிந்துகொண்டேயிருக்கின்றன. ஆயினும், கடைசியாகப் புத்தர் நமக்கு வெகு தூரத்திலில்லையென்று தோன்றுகிறது. அவருடைய குரல் நம் செவிகளில் மெல்ல ஒலிக்கிறது. வாழ்க்கைப் போரிலே நாம் புறங்கொடுத்து ஓடாமல் நிலைத்து நின்று, மேற்கொண்டு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உரிய வாய்ப்புக்களை அவ் வாழ்க்கையிலேயே கண்டுகொள்ளும்

படி அவர் குரல் நமக்குப் போதிக்கின்றது' என்றும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

மனித சமூகத்தின் சிந்தனைக் களஞ்சியத்திலே நிலையாக இடம் பெற்றுள்ளவர் புத்தர். அவரை இன்று நினைப்பினும், நம் சிந்தையில் எழுச்சி யுண்டாகிறது, உணர்ச்சிகள் கொந்தளித்துப் பாய்கின்றன. அன்பும், அருளும், உண்மையும், ஒழுக்கமும் வாழ்வின் அடிப்படையென்று அவர் போதித்த தத்துவங்கள் ஏட்டுச் சுரைக்காய்களாக இல்லாமல் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன, மறக்கவொண்ணாத, மாசற்ற அந்த மகான் ஓர் அரிய மனிதராகவே திகழ்ந்திருக்க வேண்டும். மானிட சமுதாயம் என்னும் சிப்பியிலே விளைந்த விலை மதிக்க வொண்ணாத நன்முத்தே போதி வேந்தர் !

'வெண் திரையின் மீது விரிகதிர்கள் நாண, எரிதழல் கொள் மேனி' என்று ஒரு பழந் தமிழ்ப் பாடல் அவர் திருமேனி எழிலைக் குறிக்கின்றது. கவிமணியவர்களின் 'ஆசிய ஜோதி'யிலுள்ள ஒரு கவியையும் பார்ப்போம் :

'மரத்தினடியில் மௌனமெய்தி,
சோதி மண்டலம் சூழ்ந்து பொலிய
முழங்கை மடக்கி முட்டில் அமர்த்தி,
வனத்தில் வாழும் மாபெருந் தெய்வம்
அருள் வடிவாகி அமர்வது பாராய் !
சாந்தம் உருவாய்த் தழைப்பது காணாய் !
விரிதா மரையை வென்ற விழிகளில்
தெய்வத் தன்மை திகழ்வது நோக்காய் !'

காவியுடை அணிந்து மூண்டிதமாக அலைந்து கொண்டிருந்த பெருமானைக் காண்கையில், 'கள்ளரும் உள்ளம் மறந்து நின்றார்' என்றும், கண்டவர் 'உள்ளங் கனியு' தென்றார் என்றும், 'வந்தவர் போனவர் கண்களுக்கும் அந்த வள்ளல் முகம் விருந்தானது' என்றும் நாஞ்சில் கவிஞர் வருணித்துள்ளார்.

ஆசைத் துடிப்புகள் அணுவளவுமின்றி, ஒளியும் சாந்தியும் ஒருருவாய் அமைந்து, பிக்குகளோடு பிக்குவாய்ப் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நடந்த கௌதமரைக் கற்பனைக் கண்ணால் கண்டு, 'நோபல்' பரிசு பெற்ற ஜெர்மானிய ஆசிரியர் **ஹெர்மான் ஹெஸ்** தமது நவீனம் ஒன்றில் பின்வருமாறு விவரித்துள்ளார்: 'சாந்தமான அவர் முகத் தோற்றத்தில் களிப்புமில்லை. வெளிப்படையாக அன்றி, அவர் தமக்குள்ளே மெல்ல முறுவல் செய்வது போல் காணப்பட்டார். கட்டிளங் குழந்தையைப் போல் அடக்கமான புன்னகை பூத்துச் சாந்தி தவழ அவர் நடந்து சென்றார். உடலில் தமது நீண்ட அங்கியை அணிந்து கொண்டு, மற்றத் துறவிகளைப் போலவே அவரும் வழிநடந்தார். ஆனால் அவருடைய திருமுகமும், சிறுநடையும், சாந்தி நிறைந்த தணிந்த பார்வையும், அமைதியாகத் தொங்கிக் கொண்டிருந்த தாழ்ந்த கைகளும், அக்கைகளிலுள்ள ஒவ்வொரு விரலும், அவர் நிறைவெய்திய பூரணர் என்பதை வெளிப்படுத்தின; இனி அவர் எதையும் நாடவில்லை என்பதைக் காட்டின;

இடையருத சாந்தியை, வாடாத ஒளியை, அசைக்க முடியாத ஓர் அமைதியை அவை அறிவுறுத்தின.'

மன்னர்களும், மறையோர்களும், இளவரசர்களும் இளைஞர்களும் அவர் முகவிலாசம் பார்த்து, உள்ளம் பிணிக்கும் அவருடைய இன் சொற்களில் ஈடுபட்டு, அவர் திருவடிகளைத் தொடர்ந்து செல்லும்படி அவர் அவ்வளவு அழியா அழகுள்ள வடிவு பெற்றிருந்தார் என்றே சொல்லவேண்டும். புத்தரென்று சொன்னதும், யாருக்கும் சாந்தியே நினைவுக்கு வரும். ஆயினும், அந்தச் சாந்தமூர்த்தி தமது வாழ்நாள் முழுதும் ஓய்வொழிவின்றி உழைத்து வந்தாரென்றே சரித்திரம் கூறுகின்றது. அது போலவே, அவருடைய இனிய முகம், அடக்கமான புன்னகை முதலியவைபற்றிப் படிக்கும்போது, மன்னுயிர்க்காக அவரடைந்த துயரத்தையும்,

'அழுது புலம்பி அரற்றும் புவியே!
மகிழ்ந்து நீயும் உன் மக்களும் வாழ,
என்குடி, என்கிளை, என்வாழ்வு, என்சுகம்,
என் இளம்பருவம், என்சிங் காதனம்,
யான்வாழ் அரண்மனை யாவும் வெறுத்தேன்!'

என்று வெறுத்து வெளியேறியபோது அவர் முகத்தில் தேங்கி நின்ற சோகத்தையும், உண்மையை நாடி உழலும்போது, ஊணை வெறுத்து, உடலை வருத்தி, வயிறும் முதுகும் ஒன்ருய் ஒட்டி, உயிர் ஊசலாடும்படி நோயற்ற நோன்பையும், போதிமரத்தடியில் பூரண ஞானம் பெற்ற

காலையில் விளங்கிய அவர் திருமுகப் பொலிவையும், மற்றும் பற்பல காட்சிகளையும் நாம் மறந்து விடுவதற் கில்லை.

## சிற்பமும் - சிலைகளும்

சிற்பிகளும் சித்திரக்காரர்களுமாகிய கலைஞர்கள் தங்கள் கைத்திறத்தாலும், கற்பனை வளத்தாலும், அன்றி ருந்த புத்தரின் அமர உருவத்தை இன்றும் நாம் கண்டு களிக்கும்படி அமைத்து வைத்திருக்கிறார்கள். கற்களி லும், கற்பாறைச் சுவர்களிலும் அவர்கள் புத்த சரிதையை அழியாத காவியமாகச் செதுக்கியும் வரைந்தும் வைத்தி ருக்கிறார்கள். எத்தனை சிலைகள்! எத்தனை சிற்பங்கள்! எத்தனை எத்தனை சித்திரங்கள். ஆசிய நாடுகள் பல வற்றிலும் வாழ்ந்த பெருமை மிக்க கலைஞர்களின் உள்ளங் களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கௌதமர் தமக்கே உரிமையாய்க் கொண்டிருந்தார் என்று கூறலாம்.

வாழ்க்கையில் நற்காலம் வரும் என்ற நன்னம்பிக் கைக்கு இடமின்றிப் போதிவேந்தர் 'துக்கம், துக்கம்!' என்று அழுங்கும் மனப்பான்மை ஏற்படும்படி போதித்து விட்டார் என்பதாகச் சிலர் குறை கூறுவர். இது தவறு. உயிரோடிருக்கும்போதே அழுங்கி யழுங்கிச் சாகும்படி அவர் போதிக்கவில்லை. வாழ்க்கை துக்கமென்பதை அவர் மறுக்கவில்லை, மறைக்கவுமில்லை. ஆனால், இந்தத் துக்கத்திரையைக் கிழித்தெறிந்து, 'இன்றே, இப்பொழுதே

இந்த உலகிலேயே விடுதலை பெறலாம்!' என்று போதித்த பெருந்தகை அவர். ஆகவே மன்பதைக்கு அருள் சுரந்து அவர் ஊட்டிய நம்பிக்கை கலைஞர்கள் உள்ளங்களையும் தன் வயப்படுத்திக் கொண்டது இயற்கையேயாகும்.

கௌதமர் கட்டுப்பாடான வாழ்க்கையையும், உயர்ந்த ஒழுக்கத்தையும் வற்புறுத்தி வந்தார், ஆசைகளைக் களைந்தெறியும்படி அறிவுறுத்தினார். இவ்வளவு கடுமையான தவநெறியைப் போதித்தவரிடம் கலைஞர்கள் தம் உள்ளத்தைப் பறி கொடுத்ததன் மர்மம் என்ன? அதுவே புத்தருடைய அருள்! எவ்வளவு கண்டிப்பான விதிகளைக் கூறினும், அவர் உள்ளத்தில் அன்பு வற்றாமல் பொங்கி வழிந்தோடிக் கொண்டேயிருந்தது. பச்சைக் குழந்தை போல் அவர் மக்கள், விலங்குகள், பிற உயிர்கள் ஆகிய எல்லோரையும், எல்லாவற்றையும் நேசித்தார். கார்முகில் போல் கருணைமழை பொழிந்து வந்தார். வளநாடு பூச்சொரியும்படி வாய்திறந்து அறம் புகன்று, மன்னுயிரெல்லாம் தம்முயிர்போல் வாழச் செய்தார். இந்தக் கருணை வெள்ளத்திலே கலைஞர்களும் மிதக்க ஆரம்பித்துவிட்டார்கள்!

மேலும், சித்தரத்திற்கும், சிலைகளுக்கும், கதைக்கும் கவிதைக்கும் சாக்கிய முனிவரின் சரிதையைப் பார்க்கிலும் மேலாகக் கற்பனையிலேகூட ஒரு கதையைக் கண்டு பிடிப்பது அரிது. அந்த வாழ்க்கையிலே எத்தனை விசித்திரமான மாறுதல்கள், எத்தனை சம்பவங்கள், உணர்ச்சி

கள், இன்பங்கள், சோகச் சுடர்கள், பயங்கரமான தியா கங்கள்! இவைகளை அறிந்து அநுபவித்த கலைஞர்கள் தங்கள் திறமைகளையெல்லாம் புத்தருக்கே உரிமையாக்கி விட்டார்கள்!

கிறிஸ்துநாதர் பிறப்பதற்குமுன், ஆறுவது நூற்றுண்டில், இந்திய நாட்டில் புத்தர் பெருமான் துவக்கிவைத்த சமயப் புரட்சி காரணமாக, அதைத் தொடர்ந்து பல கலைகளும் அரும்பி மலர ஆரம்பித்தன. நாட்டின் பல பாகங்களில் பௌத்த விகாரைகளும், ஆராமங்களும், சேதியங்களும் அமைக்கப் பெற்றன. பார்த்தவிடமெல்லாம் புத்தருடைய சிலைகள் காட்சியளித்தன. குன்றுகளைக் குடைந்து கோயில்கள் அமைக்கப் பெற்றன. அசோக சக்கரவர்த்தி காலத்திலும், அதற்குப் பின்னரும், பெரும்புயல் வீசுவது போன்ற வேகத்துடன், பௌத்த தருமம் பரவிப் பெருக ஆரம்பித்தது. இந்தியா மட்டுமல்லாமல், அக்காலத்தில் கிரேக்கர் ஆட்சியிலிருந்த சிரியா, எகிப்து, மசிடோனியா முதலிய நாடுகளிலும் இந்தியப் பிக்குகள் சென்று தருமப் பிரசாரம் செய்து வந்தனர். இலங்கை, பர்மா, சீனு, ஜப்பான் நாடுகளுக்கும், ஜாவா, சுமத்திரா முதலிய தீவுகளுக்கும் துறவிகள் சென்று பௌத்த மதத்தைப் பரப்பி வந்தனர். இத்துறவிகளைத் தொடாந்து சிற்பிகளும் சித்திரக்காரர்களும் பல நாடுகளுக்கும் போய், ஆங்காங்கே ஆலயங்களிலும் மலைக் குகைகளிலும் தங்கள் கலைப் படைப்புக்களால் அவ்வறத்தை நிலைநிறுத்தி வந்தனர். இவ்வாறு ஆசியா,

EXTENSION

ஐரோப்பா, ஆபிரிகா ஆகிய மூன்று கண்டங்களையும் அளாவி வளர்ந்தன பௌத்தமும் இந்தியக் கலைகளும்.

ஹைதராபாத் நிஜாம் இராஜ்யத்தின் வட பகுதியில் குன்றுகளின் நடுவே ஒரு கணவாயிலுள்ள **அஜந்தா குகைகள்** கலை சம்பந்தமாக உலகப் புகழ் பெற்றவை. மனிதர் கைபுனைந்தியற்றிய கோயில்களில் இந்தக் குகைகளுக்கு முதலிடம் அளிக்கலாம். இவைகளினுள்ளே சுவர்களில் பல வர்ணங்களில் தீட்டப்பெற்ற புத்த சித்திரங்கள் தனியழகும் ஒளியுங்கொண்டு திகழ்கின்றன. கதைகளாயும் கவிதைகளாயும் மக்களிடையே பரவி வந்த புத்தர் வரலாறுகளும், அறக் கொள்கைகளும், அங்கே உயிரோவியங்களாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. புத்தர் வாழ்ந்த காலத்திற்கு ஆயிரம் வருடங்களுக்குப் பின்னால் தீட்டப்பெற்ற இச்சித்திரங்கள் போதி நாதரின் உருவமும் உபதேசங்களும் மக்கள் மனத்திலே பசுமரத்தாணிபோல் பதியும்படி செய்தன. குன்றுகள் சூழ்ந்த அடவியிலே, கூட்டம் கூட்டமாய்க் குரங்குகள் கூத்தாடித் திரியும் ஒரு கணவாயிலே, இந்த அமர ஓவியங்கள் இன்றும் மக்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாக அமைந்திருக்கின்றன. 'அருமையான வாழ்வு அமைந்துள்ள போதே அஜந்தாவை வந்து பாருங்கள்!' என்று இந்நாட்டிலும் வெளிநாடுகளிலுமிருந்து வரும் யாத்திரிகர்களை இவை அழைத்துக் கொண்டேயிருக்கின்றன. அஜந்தாவுக்கு அடுத்தபடியாகப் புகழ்பெற்றவை நிஜாம் இராஜ்யத்திலுள்ள

எல்லோரா குகைகள். பல நூற்றுண்டுகளின் சிற்பக் களஞ்சியங்களாயும், சித்திரக் காட்சிச் சாலையாயும் இவை விளங்குகின்றன. ஔரங்காபாத் ரயில் நிலையத்திலிருந்து 14 மைல் தூரத்தில் இவை இருக்கின்றன.

புத்தர் முதன் முதலாக அறஆழி உருட்டிய சாரநாத்தில் சிங்க உருவமும் தரும சக்கரமும் பொறித்த அசோகருடைய தூணும், தாமரை மலரில் அமர்ந்து அறம் உரைப்பது போன்ற ததாகதர் * சிலையும் உண்டு. அவர் ஞானமடைந்த புத்த கயையில் அசோகரால் கட்டப் பெற்ற அழகிய ஆலயமும், பண்டைப் போதி மரமும் இருக்கின்றன. சாஞ்சியிலே, ஏகாந்தமான ஒரு குன்றின் மேலே, நாற்பத்தைந்தடி உயரமுள்ள பழைய ஸ்தூபம் ஒன்றும், அதைப் பாதுகாக்கப் பின்னுல் அசோகர் அமைத்த வேலிகளும், உலகப் புகழ்பெற்று விளங்குகின்றன. மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் அசோகர் நாட்டிய தூண்களும், அறஉரைகள் பொறித்த பாறைகளும் இன்னும் புத்த ஞாயிற்றை நினைவுறுத்திக் கொண்டே நிற்கின்றன. இவ்வாறு காஷ்மீரத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வரை கலைவெள்ளம் அலை அலையாகக் கரைபுரண்டு பாய்ந்து வந்ததை இதுகாலை எஞ்சியுள்ள சின்னங்களின் மூலம் நாம் அறிகிறோம்.

---

* ததாகதர்—முன்னோர் நெறியிலே செல்பவர்—இங்கே புத்தர்'

## கல்விப் பெருக்கம்

புத்தா காலத்திற்குப் பின்னுல் கல்வியிலும் பெரு வளர்ச்சியைக் காண்கிறோம். அறிவு பொதுவுடைமை யாக யாவருக்கும் அள்ளி வழங்கப் பெற்றது. விகாரை கள்தோறும் பிக்குகள் கல்விப் போதகர்களாயும் விளங்கி ஞர்கள். வடக்கே பாஞ்சாலத்தில் **தட்சசீல** நகரில் † பெரிய சர்வகலாசாலை ஒன்று ஆயிரம் ஆண்டுகள் அரும் பணியாற்றி வந்தது. இந்தியக் கலைகளும், விஞ்ஞானமும், வைத்தியமும், இங்கே போதிக்கப் பெற்றன. அசோகர் காலத்திலும், பின்னர் கி. பி. ஏழாம் நூற்றுண்டு வரை யிலும், இதன் புகழ் ஓங்கி வளர்ந்து வந்தது. இந்நாட் டின் பல பகுதிகளிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் மாண வர்கள் திரள் திரளாக இங்கே வந்து பயின்று வந்தனர். இப்போது கண்டுபிடித்துள்ள பாழடைந்த கட்டிடங் களைக் கொண்டே தட்சசீலம் செல்வத்திற்கும் கலைகளுக் கும் உறைவிடமாக விளங்கியதை அறியமுடியும். சிதைந்துபோன இப்பெருநகரின் கட்டிடங்களின் நடுவே தருமராஜர் கோயிலும், ததாகதரின் தனிச்சிலை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

தட்சசீலத்தைப்போலவே பிற்காலத்தில் புகழ்பெற்ற சர்வகலாசாலை ஒன்று கிழக்கே பீஹார் * நாட்டில்

---

† தட்சசிலம் ராவல்பிண்டி நகருக்கு இருபது மைல் வடமேற்கி லுள்ளது.

* பீஹார்—பௌத்த விஹாரங்கள் (விகாரைகள்) நிறைந்த நாடென்பதால் இப்பெயருண்டானதாகச் சொல் லப்படுகிறது.

**நாலந்தா**வில் திகழ்ந்து வந்தது. அதில் பதினுயிரம் மாண வர்கள் பயின்று வந்தனர். **ஹார்ஷ சக்கரவர்த்தி** உள் ளிட்ட பல மன்னர்கள் அதை வளர்த்து வந்ததாகச் சரித் திரம் கூறும். புத்தர் காலத்திலும் அது புகழுடன் விளங் கியதால், அவர் ஆங்குச் சென்று தங்கியிருந்து, சர்வகலா சாலை அறிஞர்களோடு அற ஒழுக்கங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து வந்திருக்கிருர். நாலந்தா சர்வகலாசாலையின் அலங்காரமான ஸ்தூபிகளையும், கோபுரங்களையும், வான மண்டல ஆராய்ச்சிக்காக அமைக்கப்பெற்ற விண்முட்டும் ஆராய்ச்சிச்சாலைகளையும், நீலத் தாமரை மலர்களுடன் விளங்கிய நீர்நிலைகளையும்பற்றிச் சீன யாத்திரிகர் **ஹுயன் ஸாங்** வியந்து பாராட்டியிருக்கிருர். இந்தச் சர்வகலா சாலையின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று வரு மாறு :

'வெகுளியை மன்னிப்பால் வெல்வாய் ;
தீயமனிதனை நற்செயல்களால் வெல்வாய் ;
கருமியை அவனுக்கு அதிகமாய் அள்ளிக்கொடுத்து வெல்வாய் ;
பொய்யனை உண்மையால் வெல்வாய் !'

இன்றுள்ள பள்ளிகளும், கலாசாலைகளும், எண்ணூறு வருடங்களுக்கு முன் வரை சிறப்போடு விளங்கிய இந்த நாலந்தா சர்வ கலாசாலையைப் பின்பற்றினல் போதும்— உலகம் உயர்நிலை அடைந்துவிடும் !

## இந்தியாவும் வெளி நாடுகளும்

ஆந்திர நாட்டில் மொழி, கல்வி, கலைகள்யாவும் பௌத்த தருமத்தால் மகோன்னத நிலையை அடைந்து விளங்கின, ஆந்திரக் கலைப்பண்பே பெரும்பாலும் அச் சமயத்தால் உண்டானது என்பர் சரித்திர ஆசிரியர், கலைகளுக்கும் கல்விக்கும் நிலைக்களமாக விளங்கிய நகரங்களில் **அமராவதியும், நாகார்ஜுன கொண்டாவும்** முதன்மை யானவை. குண்டூரிலிருந்து 18 மைல் தூரத்திலுள்ள அமராவதியில் சிற்பச் செல்வங்கள் மலிந்த பழைய பௌத்த மகா சேதியம் ஒன்று கண்டுபிடிக்கப் பெற்றிருக்கிறது. இது மௌரிய சக்கரவர்த்திகள் காலத்திலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை நல்ல நிலையிலிருந்ததாகத் தெரிகிறது. அமராவதிக்கு அருகில் நாகார்ஜுன கொண்டாவில் ஆசாரியர் **நாகார்ஜுனரே** நேரில் தங்கியிருந்து தருமப் பிரசாரம் செய்துவந்தார். இவர் வேதியராயிருந்து பௌத்த சமயத்தில் சேர்ந்த பேரறிஞர். அச்சமயம் பற்றி இவர் எழுதிய பல நூல்களில் பதினாறு வரை அகப்பட்டிருக்கின்றன. புகழ் பெற்ற பல அறிஞர்கள் இவரோடிருந்து, நாகார்ஜுன கொண்டாவில் சர்வகலாசாலை நடத்தி, அறிவொளியைப் பரப்பி வந்தனர். இந்தத் தலத்திலுள்ள புதை பொருள்களைத் தோண்டிப் பார்க்கையில், சர்வகலாசாலைக் கட்டிடங்கள் பல சேதியங்கள், ஸ்தூபங்கள், மண்டபங்கள், அரண்மனை முதலியவற்றின் சிதைவுகள் காணப்படுகின்றன.

புத்தர் தோன்றிய பின்னால் ஆயிரம் ஆண்டுகள் வரை இந்திய நாடு மகோன்னத நிலையில் இருந்து வந்தது.

அவருடைய பௌத்த தருமம் நிலை பெற்றிருந்த அந்த ஆயிரம் ஆண்டுகளிலும் இந்நாடு சீரும் செழிப்புமுள்ள மாபெரும் வல்லரசாகத் திகழ்ந்து வந்தது. **அலெக்ஸாந்தர்** ஒருவரைத் தவிர, பின்னால் எந்த அந்நியரும் இந்தியாமீது படையெடுக்கத் துணியவில்லை. புத்தருக்குப் பின்புஇரண்டு நூற்றாண்டுகள் கழியுமுன்பே, **சந்திரகுப்தர்** இந்தியாவின் பெரும்பகுதியை ஒன்று சேர்த்து, உலகமே அதிசயிக்கத் தக்க வல்லமையுள்ள ஏகாதிபத்தியத்தை நிறுவித் தாமே அதன் சக்கரவர்த்தியாக விளங்கினார். அவருக்குப் பின்னால் அருளறம் பூண்ட **அசோக சக்கரவர்த்தியின்** ஆட்சியில் ஆசிய நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவுக்கு அளவற்ற செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. யவனர்களும் ரோமாபுரி மன்னர்களும் இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பும் அரசியல் தொடர்பும் கொண்டிருந்தனர். இந்தியச் சக்கரவர்த்திகளின் செல்வாக்கையும், செழிப்பையும், ஆற்றலையும், சேனைகளின் வல்லமையையும், அரசியல் முறைகளையும் பார்த்தறிந்தே ரோமாபுரி பின்னால் தன் பெரிய ஏகாதிபத்தியத்தை அமைத்துக் கொள்ள முடிந்தது.

இந்திய நாட்டைப்போலவே, புத்த ஞாயிற்றின் ஒளி ஆசிய கண்டத்தின் பல நாடுகளிலும் இருளகற்றி, மக்களின் மனத்திலுள்ள ஊற்றுக் கண்களைத் திறந்து வைத்து, எங்கணும் ஒரு புது வாழ்வை ஆரம்பித்து வைத்தது, பத்து நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்த அறக் கதிரின் உதவியால் மக்கள் அமைதியான இனிய

வாழ்க்கை வாழ்ந்து வந்தனர், எங்கும் கல்வியும் கலைகளும் தழைத்தன. ஆங்காங்கேயுள்ள பழங்காலச் சின்னங்கள் இவைகளுக்குச் சான்று பகரும். இந்துகுஷ் மலைக்கு அப்பால் ஆப்கானிஸ்தானத்தில் **பாமியன்** என்ற இடத்தில் குன்றுகளினுள்ளே குகைச் சுவர்களில் தீட்டப் பெற்றுள்ள பன்னிற ஓவியங்கள் அஜந்தா மாதிரியைப் பின்பற்றியவை, அங்கே 110-அடி உயரமும், 160-அடி உயரமும் கொண்ட கம்பீரமான தோற்றமுள்ள இரண்டு புத்தர் சிலைகளும் இருக்கின்றன. நேபாளத்திலும், திபேத்திலும் வெண்கலத்தால் புத்தர் சிலைகளை வார்க்கும் கலை மிக்க வளம் பெற்றிருந்தது.

இந்நாடுகளின் வழியாயும், கடல் மார்க்கமாயும் பௌத்தத் துறவிகள் சீனுவுக்குச் சென்று அங்கே பௌத்த தருமத்தைப் பிரசாரஞ் செய்துவந்தனர். முதன் முதலாகக் கி. பி. 67ம் ஆண்டில் **காசியப மதங்கர்** என்பார் **தர்மரட்சகர்** என்ற தோழருடன் சீனுவுக்குச்சென்றதாகத் தெரிகின்றது. பின்னல் வெவ்வேறு காலத்திலும் நூற்றுக்கணக்கான அறிஞர்களும், பிக்குகளும் அங்கே சென்று, வடமொழியிலுள்ள பல பௌத்த நூல்களைச் சீனமொழியில் பெயர்த்தெழுதியதோடு, சீனமொழியிலேயே பல புது நூல்களையும் எழுதியுள்ளார்கள். இத்தகைய பெரியார்களுள் **புத்தபத்திரர், ஜீனபத்திரர், குமாரஜீவர், பரமார்த்தர், ஜீனகுப்தர், போதிதருமர்** முதலியோரைப்பற்றிய வரலாறுகள், தருமத்தைப் பிரசாரம் செய்வதற்காக அவர்கள் உயிரையும் பொருட்படுத்தாது

ஆயிரக்கணக்கான மைல்கள் யாத்திரை செய்து, தங்கள் வாழ்நாள் முழுவதையும் அதற்கே செலவிட்ட மாபெருந் தியாகத்தை விளக்குகின்றன. இவர்களில் போதிதருமர் தென்னாட்டில் காஞ்சீபுரத்திலிருந்து கி. பி. ஆறாவது நூற்றாண்டில் சென்றவர். சீனாவிலும், ஜப்பானிலும் இவர் தமது 'தியான மார்க்க'த்தைப்* போதித்து வந்தார்.

இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர்களில், கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் வந்திருந்த **பாஹியான்**, ஏழாம் நூற்றாண்டில் வந்திருந்த **ஹுயன்சாங்**, **இத்சிங்** ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். இவர்கள் திரும்பிச் செல்லும்போது இந்தியாவிலிருந்து ஏராளமான வடமொழி நூல்களை எடுத்துச் சென்றார்கள். அவைகளில் பல பின்னால் சீனமொழியில் பெயர்க்கப் பெற்றன. இப்போது இந்திய நாட்டில் இல்லாத மூலப்பிரதிகளைச் சீனாவிலுள்ள அவைகளின் மொழிபெயர்ப்புகளிலேயே பார்க்க வேண்டியிருக்கின்றது.

கி. பி. 13ம் நூற்றாண்டில் நேபாளத்திலிருந்து சீனாவுக்குச் சென்றிருந்த **அனிகோ** என்ற கலைஞர் மங்கோலியச் சக்கரவர்த்தியான **குப்லேகானுக்கு** ஏராளமான புத்தர் சிலைகளும் பலநிறப் படங்களும் தயாரித்துக் கொடுத்ததாகத் தெரிகிறது. இவரிடம் கலைபயின்ற

---

* இவரது தியானமார்க்கம் சீனமொழியில் 'சான் மதம்' என்றும், ஜப்பானில் 'ஜென் மதம்' என்றும் அழைக்கப்பெறும். பௌத்த தருமத்தில் இது ஒரு பிரிவாகும்.

**இ-யுவான்** என்ற சீனக் கலைஞன் செய்த பௌத்த விக்கிரகங்கள் **ஷாங்காய், பீகிங்** போன்ற சீனப்பெரு நகரங்களில் வைக்கப்பெற்றன. **கான்டன்** நகரத்துப் புத்தர் ஆலயத்தில் புத்த ஜாதகக் கதைகளையே பல வர்ணப் படங்களாகச் சித்தரிப்பதற்காக காஷ்மீரத்திலிருந்து **குணவர்மன்** என்ற அரசகுலத்தைச் சேர்ந்த கலைஞன் சென்றிருந்தான்.

கி. பி. ஆறும் நூற்றாண்டில் ஜப்பானிலும் பௌத்த மதம் அதிகமாய்ப் பரவ ஆரம்பித்தது. கொரியாவிலிருந்த குடார நாட்டு மன்னர் ஜப்பானிய சக்கரவர்த்தி **கிம்மேய்க்கு** அனுப்பிய கடிதத்தில் பௌத்த மதம்பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். 'இந்த உபதேசம் மற்றெல்லா உபதேசங்களிலும் தலைசிறந்தது. தூர தொலைவிலுள்ள இந்தியாவிலிருந்து இது கொரியாவுக்கு வந்துளது; இந்த இரு நாடுகளுக்குமிடையேயுள்ள தேசங்களில் மக்களனைவரும் இதையே ஆதரிக்கிறார்கள்'. சக்கரவர்த்திக்கு இத்திருமுகம் கிடைத்த கி. பி. 552ம் ஆண்டில்தான் **உபயதோ** என்ற இளவரசர் பிறந்தார். இவர் பிற்காலத்தில் பௌத்த தர்மத்தை வளர்க்கப் பேருதவி செய்துவந்தார். இவரை மக்கள் 'சில முனிவர்' என்று பொருள்படும் 'ஷோடோகு' என்ற பெயரால் அன்போடு அழைத்து வந்தார்கள். ஜப்பானிலும் பல இடங்களில் அஜந்தா சித்திரங்களைக் காணலாம். **காமகுரா** என்ற நகரில் 49 அடி 7 அங்குல உயரமுள்ள அமித புத்தருடைய அழகிய பெரிய சிலை ஒன்றிருக்கிறது.

இத்தகைய சிற்பக் கலையும், சித்திரக் கலையும் வளர்ந்ததைப் போலவே, இலக்கியமும் செழித்து வளர்ந்தது. பௌத்த நூல்கள் பலவும் அந்நாட்டு மொழியில் பெயர்த்தெழுதப்பட்டன. மொத்தத்தில் ஜப்பான் நாட்டையே நாகரிகப்படுத்தி நலமுறச் செய்தது பௌத்தம் என்று கூறலாம்.

இலங்கையில் பௌத்த மதப் பிரசாரம் செய்வதற்கு அசோகர் தம் அருமை மகள் **சங்கமித்திரை**யையும், குமாரர் **மஹிந்தரையும்*** அனுப்பியிருந்தார். 'நான் புத்தருக்கும் அவர் தருமத்திற்கும், சங்கத்திற்கும் அடைக்கலமாயிருக்கிறேன். சாக்கிய குல தீபமாகிய பகவன் அருளிய நெறியில் ஒழுகும் உத்தம சீடனாவதற்கு உறுதி கொண்டுள்ளேன். தங்கள் உள்ளத்தையும் இந்தப் பௌத்த மும்மணிகளின் வழியே திருப்பி நிரப்புக! இதுவே எனது உன்னத மதமாகும், பகவனைச் சரணடைக!' என்று அவர் இலங்கைத் **திஷ்ய** மன்னருக்கு ஒரு செய்தியும் அனுப்பினார். மாகடலின் நடுவே விளங்கும் அந்த மரகதத் தீவில் பௌத்தம் நின்று நிலைபெற்றுவிட்டது. இலங்கையில் இப்போது **சிகிரியா** என்ற இடத்தில் காணப்படும் சித்திரங்கள் அஜந்தா பாணியில் எழுதப் பெற்றவை. **பொலந்நருவை** என்ற இடத்தில் 46 அடி உயரமுள்ள பெரிய புத்தர் சிலை ஒன்றிருக்கிறது.

---

* மஹிந்தர் அசோகரின் குமாரர் என்று இலங்கை வரலாறுகள் கூறும்; சகோதரர் என்று வேறு வரலாறுகளில் காணப்படுகின்றது.

கண்டியிலுள்ள புத்தர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. இலங்கையின் பண்டைத் தலைநகரான அநுராதபுரத்தில் சிதைந்து காணும் ஸ்தூபமும், பிற சின்னங்களும் இலங்கை மன்னர்களும் மக்களும் புத்தரை எப்படிப் போற்றி வந்தனர் என்பதை அறிவுறுத்தும்.

இலங்கையைப் போலவே பர்மாவிலும் பௌத்தம் நிலைபெற்றது. இந்திய பிக்குகள் அங்கேயும் சென்று போதிமாதவரின் புனித மார்க்கத்தை ஊரூராக உபதேசித்து வந்தனர். அவர்களைத் தொடர்ந்து இந்தியக் கலைஞர்களும் சென்று நாடெங்கும் கலை நிலையங்களை நிறுவ உதவி செய்தனர். பர்மாவில் பௌத்த தருமம் தன் ஆதிப் பரிசுத்தத் தன்மையோடு விளங்குவதை இன்றும் காணலாம். பர்மியர்களின் மதப் பற்றும், தயாள குணமும், பெரும்பாலான பிக்குகளின் நேர்மையான வாழ்க்கையும் அந்நாட்டிலே கல்வியையும் கலைகளையும் வளர்ப்பதற்கு உறுதுணையாக விளங்கின. பௌத்த நூல்கள் சம்பந்தமாகப் பர்மிய மன்னர்கள் கொண்டிருந்த ஆசைக்கு வடக்கு பர்மாவை ஆண்டு வந்த **அனோரதா** என்ற மன்னனை ஓர் உதாரணமாகக் கூறலாம். அக்காலத்தில் தென் பர்மாவிலே மட்டும் பாலி மொழியிலுள்ள அற நூல்கள் இருந்து வந்தன. அந்நாட்டு மன்னன் அந்த நூல்களை அனோரதாவுக்கு அளிக்க இசையவில்லை. அதனால் அனோரதா போர் தொடுத்துத் தென் பர்மாவின் மன்னனையும் அவன் சுற்றத்தாரையும் சிறைப் பிடித்து, அவர்களோடு பௌத்த நூல்களையும்

தைப்பற்றிக் கொண்டு போய்விட்டான். பின்னுல் அவ் வற நூல்களின் உயர்ந்த கருத்துக்களைப் படித்த போது, அவன் உள்ளம் உருகிவிட்டது. தான் செய்த தவறு களை உணர்ந்தான். அசோகரைப் போலவே அவனும் போரையும் பலாத்காரத்தையும் கைவிட்டு, நாடெங்கும் புத்தர்பிரானின் அருளறம் தழைக்கச் செய்தான்.

ஜாவா, சுமத்திரா முதலிய தீவுகளிலும் பௌத்தம் பரவியிருந்த பெருமையைப் பழைய சிற்பங்களின் மூலம் இன்றும் காணமுடிகிறது. ஜாவாவில் பௌத்தமே முக் கிய சமயமாக இருந்து வந்தது. அங்கே **போரோபுதூர்** அருகே **முண்டங்** என்ற இடத்தில் ஒரு முழுக் குன் றையே குடைந்து பௌத்த ஸ்தூபமாகச் செய்யப்பட்டி ருக்கிறது. அங்கு புத்தரின் பெரிய உருவச் சிலைகள் மூன்று இருக்கின்றன. இதை நேரில் பார்த்து வந்த ஆசியாவின் ஆஸ்தான கவிஞரான **ரவீந்திரநாததாகுர்** ஒரு மனித ஆயுளில் அந்தக் கோயிலை நிர்மாணித்திருக்க முடியாதென்று அபிப்பிராயப்பட்டார். அக்கோயிலுள் நூற்றுக்கணக்கான புத்தரின் வடிவங்களும், புத்த ஜாத கக் கதைகளை விளக்கும் சித்திரங்களும் நிறைந்திருக்கின் றன, 'கல்லில் செதுக்கிய ஜாதகச் சித்திரங்கள் சிற்பக் கலைக்கே பெருமை தருவன, உயிரோடு துடிப்பன போன்ற கணக்கற்ற உருவங்கள்!...மற்றக் கோயில்களில் தேவ தேவி மூர்த்தங்களையும், இராமாயண மகாபாரதத் தின் சில உருவமான கதைகளையும் பார்த்தேன். இங்கே உலகையே காண்கிறேன்! மனிதர் வாழ்க்கையில் நிகழும்

எல்லா விஷயங்களையும் இங்கே பார்க்க முடிகிறது. அரசன் முதல் ஆண்டிவரை இடம் பெற்றிருக்கின்றனர். பௌத்த சமயத்தின் மகிமையால், எளியர், நீசர், உலகம் வெறுக்கும் பாதகர் அனைவருக்கும் இங்கே இடமளித்திருக்கின்றனர், சிற்பிகள்!' என்று இவ்வதிசயங்களைக் கண்ட கவிஞர் மனமாரப் புகழ்ந்திருக்கிறார்.*

நாம் வசிக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும், நம் இந்தியக் கலைஞர்கள் புத்தரை மறவாமல் போற்றி வருவதை அவர்களுடைய சித்திரங்கள், சிலைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். கலையுலகில் பெரும் புகழ்பெற்ற **அபனீந்திரநாத தாகூரும், நந்தலால் போஸும்** பழைய பெருமையைப் புதுக்கியுள்ளார்கள். கிழக்கு வங்காளத்தில் விக்ரமபுரியைச் சேர்ந்த திரு. **சாரதா உகில்** என்னும் சைத்திரிகர் புத்தருடைய பிறப்பிலிருந்து முடிவு வரையுள்ள சரிதையைப் பல வர்ணப்படங்களாக வரைந்துள்ளார். பத்திரிகைகளில் வெறும் கறுப்பு மையில் அச்சிட்ட இவருடைய படங்களே உள்ளத்தை உருக்குந் தன்மை பெற்றிருக்கின்றன. மற்றும் பல சைத்திரிகர்களும் படங்கள் வரைகிறார்கள்; நடிகர்கள் நடிகைகள் பலர் நாடகங்கள், நடனங்கள் மூலம் புத்த சரிதையை மக்களுக்கு அறிவித்து வருகிறார்கள்.

---

* 'ஜாவா யாத்திரை'—ரவீந்திரநாத தாகூர்.

# புத்தரின் செய்தி

புத்த ஞாயிற்றின் ஒளி உயிரளிக்கும் அமுதம். மாநில மக்களில் சுமார் மூன்றில் ஒரு பாகத்தினர் அதைப்போற்றி வருவதாகப் பௌத்தர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்வர்.* எனினும், பிறர் துக்கத்தையெல்லாம் தமதாகக்கொண்டு விளங்கிய பகவரின் அருள் வழியை இக்காலத்து மக்களிற் பெரும்பாலார் இன்னும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. அறிவாளரும், கலைஞர்களும் கௌதமரைப் பெரிதும் போற்றுவதுபோல் பொதுமக்களும், தொழில் துறைகளிலுள்ளோரும், முக்கியமாக அரசியல்வாதிகளும் அவர் அருள்மொழிகளைக் கவனித்தல் வேண்டும். இன்று உலகில் பயமும் பாதகங்களும் நிறைந்திருப்பதை அகற்றுவதற்கு அவை உதவி செய்வன. சர்வ மக்களின் சமத்துவமும், சகோதரத்துவமும் படர்ந்து வளர அவ்வுரைகள் கொழுகொம்புகளாக உதவக் கூடியவை. இந்தியா, ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய எந்நாட்டு மக்களாயினும் சரி, டில்லி, மாஸ்கோ, பீகிங், வாஷிங்டன், லண்டன் ஆகிய

---

* திரு. ஜே. எம். மாக்பெயில் 1951-ம் வருடம் வெளியிட்ட தமது புத்த சரிதையில் கீழ்க்கண்ட கணக்கைக் கொடுத்துள்ளார்:

| | | | |
|---|---|---|---|
| கிறிஸ்தவர்கள் | 55,70,00,000 | இந்துக்கள் | 21,70,00,000 |
| முஸ்லிம்கள் | 33,40,00,000 | பௌத்தர்கள் | 13,70,00,000 |
| கன்பூஷிய மதத்தினர்கள் | 25,00,00,000 | டாவோ மதத்தினர்கள் | 4,30,00,000 |

எந்தத் தலைநகரிலுள்ள அரசியல் வாதிகளாயினும் சரி—தற்கால உலகின் சீர்கேடுகளை நீக்க, அவர்கள் தங்கள் உள்ளங்களைத் திறந்து வைத்தாற் போதும். புத்தரின் அருளொளி அவைகளிலே பாய்ந்து பரவிவிடும்! உள்ளத்தைத் திறந்து வைத்தால்தான் ததாகதரின் அருளொளி உள்ளே புகமுடியும். மதுராபுரியில் வாழ்ந்து வந்த பிக்கு **உபகுப்தர்** இதைத்தான் கூறிவந்தார். உலக போகங்களிலே ஆழ்ந்திருந்த கணிகை **வாசவதத்தை**க்கு அவர் இந்தச் செய்தியைத்தான் சொல்லியனுப்பினார். அவளுக்காகத் தூதுவந்த தோழியிடம் அவர், 'அவள் வீட்டைச் சுத்தி செய்யட்டும்! தீபத்தை ஏற்றட்டும்! கதவைத் திறக்கட்டும்! அவசியம் வருகிறேன்!' என்று உறுதி சொல்லியனுப்பினார். உபகுப்தர் 'வீடு' என்றது உள்ளத்தை, உள்ளத்திலுள்ள ஒட்டடைகளை நீக்கி, வெள்ளையடித்துச் சுத்தஞ்செய்வோம்! ஞானச்சுடரை ஏற்றுவோம்! உள்ளத்தை இருட்சிறையாக்கி வைத்திருக்கும் ஆணவக் கதவுகளைத் திறந்து வைப்போம்! புத்தர் வருவார். உறுதியாக வருவார்! அவர் ஒளியில் உள்ளத் தாமரை உவப்புடன் மலரும்.

உலகப் பெருஞ் சமயங்களின் நடுவே பௌத்த தருமத்தின் நிலையை நன்கு தெரிந்து கொள்ளவும், அதற்கும் பிற சமயங்களுக்குமுள்ள வேற்றுமைகளைத் தெரிந்து கொள்ளவும் முதற்கண் வேதங்களையும் வைதிக சமயங்களையும்பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளல் அவசியம்.

★

# வேதங்களும் வைதிக சமயங்களும்

'ஒன்றே என்னின் ஒன்றேயாம்,
பலஎன்(று) உரைக்கின் பலவேயாம்,
அன்றே என்னின் அன்றேயாம்,
ஆம்என்(று) உரைக்கின் ஆமேயாம்,
இன்றே என்னின் இன்றேயாம்,
உள(து) என்(று) உரைக்கின் உளதேயாம்,
நன்றே நம்பி குடிவாழ்க்கை,
நமக்(கு) இங்(கு) என்னே பிழைப்பம்மா!'

—கம்பர்

**ம**க்கள் யாவரும் வாழ்வில் இன்பமே விழைகின்றனர், ஒவ்வொருவரும் இன்பத்தை நாடியே செல்கின்றனர், ஆனால் எந்தப் பொருள்களில் ஆசையுண்டா

யிற்றே, அவை கிடைத்த பின்பு, அவற்றில் தெவிட்டுதல் ஏற்படுகின்றது, வெறுப்பு விளைகின்றது. இன்பங்கள் சிறிது சிறிதாகக்கூடி வருகையில், துன்பங்கள் பலவாறுகப் பெருகி விடுகின்றன. பிறந்தது முதல் இன்பத்தையே தேடியலையினும், அது கானல்நீராகவேமுடிகிறது. பிறப்பு முதல் முதுமைவரை வாழ்க்கை துக்க மயமாகவே யிருக்கிறது முடிவில் மரணமென்ற பெருந் துக்கமும் ஏற்படுகிறது. மொத்தத்தில், நாம் விரும்பியவை கிடைத்தாலும் துக்கம், கிடையாவிடினும் துக்கமே நேருகிறது.

## இன்ப வேட்கை

இவ்வாழ்க்கையில் மனிதன் எக்காலத்திலுமே திருப்தி கொண்டிருக்கவில்லை; எப்போதுமே துக்கத்திலிருந்து தப்புவதற்கு முயன்று வந்திருக்கிறுன். இந்தத் துக்கத்தைக்கண்ட அறிஞர்கள், மக்களின் சுயநலத்தாலேயே துக்கம் பெருகிக் காண்கிறதென்றும், பரநலத்தை நாடுவதால் துக்கம் குறையுமென்றும் கூறுவர். ஆயினும், பிறப்பு, பிணி, பசி, பாசம், ஏமாற்றம், மூப்பு, இறப்பு ஆகிய எல்லாமுமே துக்கமயமாயிருப்பதை ஒழித்துவிட முடியாமல், மனிதன் தொன்றுதொட்டே இவைகளிலிருந்து தப்ப வழிதேடி வந்திருக்கிறுன். வாழ்க்கையில் தனக்குள்ள தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து, தான் எண்ணிய இன்பத்தை—அழியாத இன்பத்தை—அடைய மனிதன் முயன்றுகொண்டே வந்திருக்கிறுன். தன் அறிவுக்கு எட்டிய வரை அதைப்பற்றி அவன் ஆராய்ந்து

வந்திருக்கிறான். 'வாழ்க்கை யென்பது என்ன? நான் ஏன் வந்தேன்? எங்கிருந்து வந்தேன்? இனி எங்கே செல்வேன்?' என்ற வினாக்களுக்கு அவன் விடை காண முயன்று வந்திருக்கிறான். இவற்றிலிருந்து, 'நான் யார்? இந்தப் பிரபஞ்சம் யாது? இதற்கும் எனக்கும் என்ன தொடர்பு? பிரபஞ்சத் தோற்றத்தின் காரணம் யாது?' என்ற கேள்விகளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்திருக்கிறான்.

இந்த ஆராய்ச்சியின் பயனாகச் சமயம் அல்லது மதத்தை மனிதன் மேற்கொண்டான். மதம் மனிதனைப் படைக்கவில்லை, மனிதனே மதத்தைப் படைத்துக் கொண்டான். விடுதலை வேண்டி மனிதன் கொண்டிருந்த உள்ளாசையே மதமாகப் பரிணமித்தது என்பர்.

நீரைப்பற்றியும், நிலத்தைப்பற்றியும், காற்றைப் பற்றியும், கடலைப்பற்றியும் சேதனம்,* அசேதனம் பற்றியும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவன் ஆராய்ந்து வந்திருக்கிறான். இந்த ஆராய்ச்சியோடு, தனது வாழ்வு—உயிர்—பற்றியும் சிந்தனை செய்து வந்திருக்கிறான். இவற்றிற்கெல்லாம் அவனுக்குத் துணையாயிருந்த கருவி ஒப்பற்ற கருவி—பகுத்தறிவு ஒன்றுதான், போதிய ஆராய்ச்சியில்லாமல் அவன் சில சமயங்களில் ஆழ்ந்த நம்பிக்கையினால் ஏற்றுக்கொள்ளும் விஷயங்களையும், பின்னால்

---

* சேதனம்—அறிவுள்ள பிராணிகள்.

† அசேதனம்—அறிவற்ற சடப்பொருள்கள்.

பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், அவன் அவைகளைக் கைவிட்டு விடுகிறான். இருள் நிறைந்த உலகில் அவனுக்கு வழிகாட்டும் ஒரே கைவிளக்கு அந்த அறிவுதான்.

## சமயங்களின் தோற்றம்

மனிதன் பிரபஞ்சத்தோடும், தன்னைச்சுற்றி எங்கணும் காணப்படும் எல்லையற்ற உயிர்த்தொகுதியோடும் கொள்ளும் உறவே சமயம் எனப்படும். இந்த உறவு அவனுடைய பகுத்தறிவுக்கும், அவன் சேர்ந்துள்ள சமுதாயத்தின் அறிவுக்களஞ்சியத்திற்கும் ஏற்ற முறையில் அமைகின்றது. சமயங்களிலும் பல ஏற்பட்டிருக்கின்றன. இவை எப்போதும் ஒரே நிலையிலில்லாமல், தளர்ந்து வீழ்ச்சியடைந்த காலங்களும், மீட்சியடைந்த காலங்களும் உண்டு. சில சமயங்களில், வீழ்ச்சியுற்ற சமயத்தின் பீடத்தில் வேறு புதுச்சமயம் தோன்றுவதும் உண்டு. சமயங்களுக்குள்ளே சில வேற்றுமைகளிருப்பினும், மனிதனுடைய முக்கியமான கேள்விகளுக்கு அவையெல்லாம் அநேகமாக ஒரே மாதிரியான விடைகளையே அளிக்கின்றன.

மனிதன் தன் செயல் ஒவ்வொன்றிலும் பகுத்தறிவைப் பயன் படுத்துவதில்லை. பெரும்பாலும் உணர்ச்சியே அவனைச் செயலில் இறங்குமாறு தூண்டுகின்றது; பின்னரே அச்செயல் சரிதானென்று அவன் பகுத்தறி

வால் ஆராய்ந்து தெளிகிறான். உணர்ச்சியால் உந்தப் பெற்ற மனிதன், பகுத்தறிவு பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் செயல்களை உறுதியுடன் நிறைவேற்றும்படி செய்வது நம்பிக்கை உணர்ச்சியில்லாவிடின், செயலில் கவர்ச்சியிராது. பகுத்தறிவில்லாவிடின், பல உணர்ச்சி களின் நடுவிலே சிக்கித் தடுமாற நேரிடும்; நம்பிக்கை யில்லாவிடின், எதையும் முழுதும் நிறைவேற்ற முடி யாது. ஏனெனில் மனிதன் ஒவ்வொரு நிலையிலும் உணர்ச்சியையும் பகுத்தறிவையும் பயன் படுத்திக் கொண்டிருக்க முடியாது; நம்பிக்கையோடு துணிந்து இறங்கினால்தான் வெற்றியடைய முடியும்.

மனிதனைச் செயற்படுத்தும் மூவகை ஆற்றல்களில், மூன்றும் ஒற்றுமையோடு ஒன்று சேர்ந்து இயங்குதலே நலமாகும். இவைகளில் மூன்றாவதான நம்பிக்கையை மட்டும் கைக்கொண்டு ஒழுகினால், அது வெறும் குருட்டு நம்பிக்கை, அல்லது மூட பக்தியாகவே முடியும். இத்த கைய நம்பிக்கையை மட்டும் ஆதாரமாய்க் கொண்டே உலகிலே பெரும்பாலான மக்கள் சமயங்களைப் பின்பற்றி வருகின்றனர். மானிட ஆராய்ச்சிகளின் பயனாகச் சம யங்கள் தோன்றியிருப்பினும், குருமார்கள் உணர்ச்சியை யும் பகுத்தறிவையும் கைவிட்டு மனிதன் தாங்கள் கூறும் கிரியைகளையும், தந்திரங்களையும், மந்திரங்களையும் மட் டுமே நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளும்படி செய்து விட்டனர். இதனால் அவன் பகுத்தறிவை யிழந்து, மூட பக்தியை மேற்கொண்டு, மூடப் பழக்கங்களுக்கு

அடிமையாக நேர்ந்துவிட்டது. கட்டுக்களின்றும் விடுதலைபெற விரும்பிய மனிதன், இவ்வாறு மேற்கொண்டும் புதிய விலங்குகளால் பிணிக்கப்பெற்ருன். சமயங்களின் மூலம், பந்தங்கள் ஒழிந்து, எல்லையற்ற உயிர் வெள்ளத்தில் தானும் ஒரு துளியாகச் சேர்ந்து இரண்டறக் கலந்து கொண்டு, பிறப்பும் இறப்புமற்ற பெரு வாழ்வைப் பெற வேண்டுமென்று பல்லாயிரம் ஆண்டுகளாக முயன்று வந்த மனிதன், அந்தச் சமயங்களே குருமார்களின் மூலம் தன்னை மேலும் அடிமையாக்குவதைக் கண்டு வெறுப்படைகிருன்; சில காலங்களில் சமயங்களையே எதிர்த்தும் நிற்கிருன்.

சமயங்களையே ஏற்றுக் கொள்ளாத மனிதர்களும் எக்காலத்திலும் இருந்து வருகின்றனர். பிரபஞ்சமும், உயிர்களும் தாமாகவே இயற்கையில் தோன்றியவை யென்றும், இவைகளின் படைப்புக்கு மூலகாரணமாக எதுவுமில்லை யென்றும் இவர்கள் கூறுவர். இவர்களுக்குத் துணையாக நிற்பதும் பகுத்தறிவுதான். விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவுகளைத் தவிர, இவர்கள் வேறு எதையும் ஏற்றுக் கொள்வதில்லை. சமயங்கள் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவைக் கொண்டு ஏற்படவில்லை, விஞ்ஞானம் வளர வளர, அதன் முடிவுகளோடு சமயக் கொள்கைகள் முரண்படாமலிருக்கின்றனவா என்பதையே மக்கள் பார்க்கின்றனர். அதிகமான முரண்பாடுகள் ஏற்பட்டால், அவர்கள் சமயங்களைத் திருத்தவோ, கைவிடவோ முற்படுவார்கள்.

ஏனெனில் விஞ்ஞான முடிவுகளைத் திருத்த முடியாது; அவை கண் முன்னால் காணும் உண்மைகள், பகுத்தறிவுக்கு முற்றிலும் ஏற்புடையவை.

எல்லா மக்களும் ஒரே மாதிரியான உடல்களையும், குணங்களையும் பெற்றிருக்கவில்லை. மக்கள் வாழ்க்கையில் பயிற்சியினாலும், சூழ்நிலையாலும், தங்கள் சமுதாயத்தின் கலைப் பண்பினாலும் எவ்வளவு மாறுதலடைந்த போதினும், அவர்களில் ஒவ்வொருவருக்கும் தனியாக விளங்கும் உடல்தோற்றமும், அதற்கேற்ற மனப்பண்பும் அமைந்து, குணங்களை உருவாக்குகின்றன. மக்களின் குணங்களைத் தாமசம், இராஜசம், சத்துவம் என்ற மூன்று பிரிவாகக் கூறுவது நம்நாட்டு வழக்கம். **வில்லியம் ஷெல்டன்** என்ற மேலைநாட்டு அறிஞரும் இவ்வாறே மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிறார்.* பெரும்பாலும் ஒவ்வொரு மனிதனும் இம்மூன்று குணங்களையும் சம அளவாகப் பெற்றிருப்பான். ஆனால் சிலரிடம் இக்குணங்களில் ஒன்று முனைப்பாகவும் இருக்கும்.

தாமச குணம் முனைப்பாகவுள்ளவர்கள் சற்றுப் பருத்த மென்மையான உடல்களைப் பெற்றிருப்பார்கள்; அவர்களுக்கு உணவிலும், இன்ப வாழ்க்கையிலும் விருப்பம் அதிகம். இராஜச குணம் முனைப்பாகவுள்ளவர்கள் திண்ணிய தசை நார்களோடு சரீரக் கட்டுடையவர்க

---

* தாமசம்—**Viscerotonia**, இராஜசம்—**Somatotonia**, சத்துவம்—**Cerebrotonia**.

ளாயிருப்பார்கள்; அவர்களுக்கு அதிகார ஆசையும், போராட்ட மனப்பான்மையும் அதிகமாயிருக்கும். சத்துவ குணமுள்ளவர்கள் மெல்லிய எலும்புகள், தசை நார்களுடன் மெலிந்த உடல்களைப் பெற்றிருப்பார்கள்; அவர்கள் கூட்டங்களை விட்டுத் தனியே யிருக்க விரும்புவர், எப்போதும் சிந்தனையில் ஆழ்ந்திருப்பர், ஆத்திரமோ ஆதிக்கிய வெறியோ இல்லாமல் அடக்கமாயிருப்பர்.

மக்களின் குணங்களுக்கு ஏற்ற முறையில் சமய நூல்கள் முக்கியமான மூன்று முறைகளைக் குறிப்பிடலாம். அவை பக்தி யோகம், கருமயோகம், ஞானயோகம். தாமச குணம், இராஜச குணம், சத்துவ குணம் பெற்றுள்ளவர்களுக்கு இவை முறையே பயன்படுபவை. பக்தி யோகத்தைக் கடைப்பிடிப்பவன் பக்தி, பிரார்த்தனை, தொழுகைகளின் மூலம் பரம்பொருளை அடைய முயற்சிக்கிருன். கருமயோகி, பயன் கருதாமற் செய்யும் செயல்களின் மூலம் தன்னை நிறைவுள்ளவனாகச் செய்து கொள்கிருன். ஞானயோகி, ஆராய்ச்சியறிவால், பரம்பொருள் 'இதுவல்ல, இதுவல்ல' என்று ஆராய்ந்து, உண்மைப் பொருளைப்பற்றிய மெய்யறிவு பெற முயற்சிக்கிருன்.

மனிதனுக்கும், பிரபஞ்சம் அல்லது அதன் காரணபூதமான பொருளுக்கும் ஒருவகைத் தொடர்பை அமைப்பது சமயம். இந்தத் தொடர்பால் ஏற்படும் விளைவுகளை ஆராய்வது தத்துவ ஞானம். விஞ்ஞானம் உலகப் பொருள்களைப் பிரித்துப் பிரித்து ஆராய்ந்து கூறும்

முடிவுகளை ஒன்று சேர்த்துக்கொண்டு, மனிதனும், உயிர்களும், உலகமும் தொடர்பு கொண்டு இயங்குகிற இயக்கத்தையும், இவ்வியக்கத்திற்குக் காரணமான மூல சக்தியையும் பற்றித் தத்துவ ஞானம் ஆராய முற்படுகிறது.

மனிதன் உலகத்தோடு கொள்ளும் உறவிலிருந்து அவன் வாழவேண்டிய ஒழுங்குமுறை—ஒழுக்கம்—எழுகின்றது. இதனாலேயே ஒவ்வொரு சமயமும் தன் கொள்கைகளுக்கேற்ற ஒழுக்க முறைகளையும் கோலியிருக்கிறது. வெறும் தத்துவ விசாரமும், விவாதமும் செய்து கொண்டிருந்தால், அவை குழப்பத்திலேயே முடியும். வாழ்க்கையை முறையாக வகுத்து, ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, மௌனமாக அமர்ந்து சிந்தித்துத் தியானம் செய்யும் பழக்கத்தின் மூலமே ஞானத்தை அடைய முடியும். மேலும், ஏட்டிலும், பாட்டிலும், பேச்சிலும், உபதேசத்திலும் மட்டுமே ஞானம் அடைபட்டிருக்கவில்லை. இவையெல்லாம் ஆரம்பத்தில் வழி காட்டும் உதவிகளே. வீடுகளையும், காடுகளையும் பறவைகளையும், விலங்குகளையும்—பொதுவாக இயற்கை அனைத்தையுமே—பார்த்துப் படிக்கவேண்டிய பாடங்கள் ஏராளமாயுண்டு. சீனதேசத்து அறிஞர் ஒருவர், கோயிலருகே கிடந்த ஒரு கல்லைக் காட்டி, 'இறந்த காலத்திலிருந்த எல்லாப் புத்தர்களும், நிகழ்காலத்து எதிர்காலத்துப் புத்தர்கள் அனைவரும் இதிலே தங்கியிருக்கின்றனர்' என்று கூறினாராம். பல சமயங்களில் ஏடுகளைவிட அதிகமாக எழுத்தறியாக் குழந்தைகளிடம் கற்கலாம்.

சொற்பொழிவுகளைவிட மௌனமே அதிகப் போதனை செய்துவிடும். ஹுயன்ஷா என்ற முனிவர் ஒருநாள் ஒரு கூட்டத்தினர்க்கு உபதேசஞ் செய்யச் சென்றிருந்தார். அவர் மேடைமீது ஏறிப்பேச முற்படுகையில், அருகே மரத்திலிருந்த பறவையொன்று இனிமையாகப்பாட ஆரம்பித்தது. 'உபதேசம் நடந்து முடிந்துவிட்டது!' என்று சொல்லிக்கொண்டே ஹுயன்ஷா கீழிறங்கிவிட்டார். தமது பேச்சைப் பார்க்கிலும் பறவையின் இன்னிசையால் மக்களின் உள்ளங்கள் பண்பட்டிருக்குமென்று அவர் கருதினர். பறவையின் இசையே குருவின் உபதேச மொழியென்று கருதியது அவருடைய ஆழ்ந்த ஞானத்தையும் அடக்கத்தையும் காட்டுகின்றது.

## வேதங்களும் உபநிடதங்களும்

உலகில் பல சமயங்களும் தத்துவ நூல்களும் தொன்றுதொட்டே ஏற்பட்டு வந்திருக்கின்றன. இன்றைக்குச் சுமார் 3,500 ஆண்டுகளுக்கு முன்பு—4,000 ஆண்டுகளுக்கு உட்பட்டு—இந்திய ஆரிய மக்களின் வேதங்கள் தோன்றியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். வேதங்களில் தெய்வங்களுக்குரிய பல பிரார்த்தனைப் பாடல்கள் இருக்கின்றன. உண்மைப் பொருள் ஒன்றே என்று கருத்துள்ள 'ஏகம் சத்' என்று ஒரே தெய்வ வணக்கத்தையும் அவை கூறுகின்றன. வேதங்களைத் தொடர்ந்து பின்னல் பிராம்மணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புரா

ணங்கள் ஏற்பட்டன. இவ்வாறு அற நூல்களும், தத்துவ நூல்களும் பல தோன்றின. ஆரியர்கள் சிந்து நதிக்கரையிலும், கங்கை நதிக்கரையிலும் குடியேறி, விவசாயம் செய்து, வேட்டையாடி, வாழ்க்கையின் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவைகளைப் பற்றிய கவலைகள் குறைத்து, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற கொள்கையுடன் இன்பமாக வாழ்ந்திருக்கையில் கூறப்பட்டவையே வேதங்கள்.

ஆரிய வேதங்கள் நான்கு; அவை **இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்** என்பவை. இவை வெகு காலம் வாய் மொழியாகவே போற்றி வரப்பெற்றவை: அக்கால ஆரிய மக்களின் கலையறிவும், கொள்கைகளும், வாழ்க்கை முறைகளும் இவைகளில் தொகுத்து வைக்கப் பெற்றிருக்கின்றன. இருக்கு வேதத்தில் தெய்வங்களுக்குரிய பிரார்த்தனைகள் இருக்கின்றன. கதிர், மதி, காற்று, மழை, தீ முதலிய இயற்கையின் சக்திகள் தெய்வங்களோடு வர்ணிக்கப் பெற்றிருக்கின்றன. தெய்வங்கள் உண்டோ என்ற சந்தேகத்தைக் கிளர்த்தும் பாடல்களும் காணப்படுகின்றன. யஜுர் வேதம் யாக விதிகளைக் கூறுவது; இது யாகங்களிலே படிக்கப் பெறுவது. சாம வேதம் கீத நடையிலுள்ளது; யாகங்களிலே இதை இசையோடு பாடுவர். அதர்வண வேதம் இறுதியாக வந்தது; மாந்திரிகங்கள், வசியத்திற்குரிய கிரியைகள் முதலியவை இதில் கூறப்படுகின்றன. மொத்தத்தில் வேதங்களில் பலதிறப்பட்ட

விஷயங்கள் அடங்கியுள்ளன. இயற்கையோடு இயைந்து வாழ்ந்து, காலைக்கதிரின் வனப்பையும், மாலை மதியத்தின் தண்ணொளியையும், ஆறுகளின் அந்தமில்லாத இசைகளையும், மற்றும் இயற்கை யின்பங்களையும் அநுபவித்து மக்கள் முதன் முதற் பாடிய பாடல்களும், கூறிய வசனங்களும் இவைகளிலே யிருக்கின்றன. தெய்வங்களுக்கு உயிர்ப்பலியளித்துச் செய்யும் யாக முறைகளும் இவற்றில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பின்னால் தோன்றிய ஆரணியகங்களுக்கும் உபநிடதங்களுக்கும் வேதத்தின் முடிவு—'வேதாந்தம்'—என்று பெயரளிக்கப்பட்டிருக்கிறது. மனிதன் முதன் முதலாக ஐம்புலன்களின் அறிவுக்கு எட்டாத விஷயங்களைப் பற்றித் தைரியமாக ஆராய்ந்தும், கற்பனை செய்தும் கண்டறிந்த விஷயங்கள் உபநிடதங்களிலே கூறப்படுகின்றன. உபநிடதங்கள், இறைவனும் மனிதனும் ஒன்று—ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்று—என்ற கொள்கையை வலியுறுத்துகின்றன. உலகமும் உயிர்களும் ஒரே பொருளின் தோற்றங்கள், ஆறுகள் ஓடிச் சென்று அலைகடலில் சேர்வது போல இவைகளும் முடிவில் அந்த ஒரே பொருளில் இரண்டறக் கலந்து ஒன்றாகி விடுகின்றன. இக்கருத்தைச் **சாந்தோக்ய உபநிடதம் சுவேதகேதுவின்** கதை மிகவும் அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

சுவேதகேது இருபத்திநான்கு வயது வரை குருகுலவாசம் செய்து, கற்கவேண்டிய அனைத்தையும் கற்றுத்

தெரிந்துகொண்டு, வீடு திரும்புகிறான். அவன் தந்தை அவனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறார். அவர்களுடைய உரையாடல் வருமாறு:

**தந்தை**—மகனே! கண்ணால் காண முடியாததைக் காணவும், காதால் கேட்க முடியாததைக் கேட்கவும், உணர முடியாததை உணரவுங் கூடிய வித்தையை அறிந்து வந்திருக்கிறாயா?

**மகன்**— அப்படி ஒரு ஞானம் இருக்கிறதா?

**தந்தை**—ஒருபிடி களிமண்ணைப் பற்றித்தெரிந்து கொண்டு பிறகு களிமண்ணாலான எல்லாப் பொருள்களும் களிமண்ணேயென்று அறிதல்போல, ஒன்றைக் கொண்டே மற்ற யாவற்றையும் அறியக்கூடியதே அந்த ஞானம்.

**மகன்**— எனக்குப் போதித்த ஆசிரியர்களுக்கு அந்த ஞானம் தெரியாது. தெரிந்திருந்தால், அதை எனக்கும் போதித்திருப்பார். தாங்களே அதை எனக்கு அருள வேண்டும்.

**தந்தை**—சரி, போய் ஓர் ஆலம்பழம் கொண்டுவா!

**மகன்**— இதோ கொணர்ந்திருக்கிறேன்.

**தந்தை**—அதை விண்டுவை!

**மகன்**— விண்டாகி விட்டது.

**தந்தை**—அதில் என்ன தெரிகிறது?

**மகன்**— விதைகள் இருக்கின்றன—மிக நுண்ணிய விதைகள்!

**தந்தை**—அந்த விதைகளில் ஒன்றைப்பிளந்து வை,

**மகன்**— பிளந்தாகி விட்டது.

**தந்தை**—அதில் என்ன காண்கிறாய்?

**மகன்**— ஒன்றுமில்லை!

**தந்தை**—மைந்தா! அதிலுள்ள — உன்னால் காணமுடியாத — சத்து ஒன்றில்தான் மாபெரும் ஆலமரம் அடங்கியிருக்கிறது. பிரபஞ்சத்தில் தோன்றியுள்ள எல்லாவற்றினுடைய சத்தும் எதுவோ, அதில்தான் அதன் ஆன்மா இருக்கிறது.

**மகன்**— இன்னும் சற்றே விளக்கமாகச் சொல்லுங்கள்!

**தந்தை**—அவ்வாறேயாகட்டும். இந்த உப்பைத் தண்ணீரில் போட்டு வைத்து விட்டு, நாளைக் காலையில் என்னிடம் வா!

மைந்தன் அப்படியே செய்தான். மறுநாட் காலை தந்தையிடம் சென்றபொழுது, அவர் தண்ணீரில் போட்டு வைத்த உப்பை எடுத்துவரச் சொன்னார்.

சுவேதகேது சென்று பார்க்கையில் உப்பைக் காணவில்லை.

தந்தை, உப்பைப் போட்ட நீரில் மேலாகக் கொஞ்சம் குடித்துப் பார்க்கும்படி சொன்னார்.

**தந்தை**—எப்படியிருக்கிறது?

**மகன்**— உப்புக்கரிக்கிறது.

**தந்தை**—மத்தியிலிருந்து கொஞ்சம் குடித்துப்பார்.

**மகன்** — உப்புக்கரிக்கிறது.

**தந்தை**—அடியிலிருப்பதைக் குடித்துப்பார்!

**மகன்** — உப்புக்கரிக்கிறது.

**தந்தை**—தண்ணீரைத் தூரே கொட்டிவிட்டு வா!

குமரன் அப்படியே செய்தான்.

**தந்தை**—இதுபோல் தான் உனது உடலில் உண்மைப் பொருளை நீ காண முடியவில்லை. ஆனால் அது அங்கேதான் இருக்கிறது. சத்தாயுள்ள அதில்தான் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றின் ஆன்மாவும் இருக்கிறது. அதுதான் உண்மைப் பொருள், அதுதான் ஆன்மா, சுவேதகேது, **தத்துவம் அஸி**-நீயும் **அதுதான்**!

## பிருகதாரணியக உபநிடதம்

பிரும்மத்தைப் பற்றிக் கூறுகையில், **'நேதி நேதி** இது அன்று, இது அன்று' என்று சொல்லுவதைத் தவிர அப்பாலாக ஒன்றுமில்லை யென்றும், பொருள்களுக்கெல்லாம் மெய்ப் பொருளான அதன் பெயர் 'உண்மையின் உண்மை' யென்றும் விவரிக்கின்றது.

'மனிதனே சிவம், சிவமே மனிதன்: மனிதன் முதற்பொருளான சிவமேயன்றி வேறல்லன். ......பந்தனமுள்ள போதுதான் மனிதனுயுள்ளான்; ஆனல் பந்தனம் நீங்கி விடுதலை பெற்றதும், மனிதன் அசைக்க முடி

யாத சிவமேயாவான்' என்று **ஸ்கந்த உபநிடதம்** கூறுகின்றது.

**'தத் துவம் அஸி'*** என்ற மகா வாக்கியம் வேதாந்தத்தின் முடிவு எனலாம். 'நீ அதுவாக இருக்கிருய், நீயே அது!' மெய்ப்பொருளான பிரும்மமும், அதன் ஆற்றலும் இரண்டல்ல, ஒன்றுதான். மனிதன் தன்னைத் துக்கத்திலாழ்த்தி நலிந்து மெலியச் செய்யும் உடலுணர்ச்சியையும், உலகுணர்ச்சியையும் குறைத்து, ஆன்ம உணர்ச்சியை வளர்த்து. ஆற்றலைப் பெருக்கிக்கொள்ளும்போது, விடுதலை அல்லது மோட்சத்தை அடைகிருன்—எதிலிருந்து தோன்றிஞனே அதில் அடக்கமாகி விடுகிருன். இவ்வாறு பல சமயங்களின் மூலக்கொள்கைகளையும் வேதாந்தம் தன்னகத்தே கொண்டு விரித்துரைக்கின்றது. 'வேதாந்தத்தில் இல்லாத கோட்பாடு உலகில் எந்த மதத்திலுமே இல்லையென்று உறுதி கூறலாம்.'†

## பகவத்கீதை

வேதங்கள், தெய்வங்களிலிருந்து சோமபானம் வரை** பல திறப்பட்ட விஷயங்களின் தொகுதிகளாயுள்ளன. உபநிடதங்கள் ஆன்மா, பரமான்மா

---

* துவம்—நீ, தத்—அதுவாக, அஸி—இருக்கிருய்.

† ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

** சோமம்—ஒருவகைச் செடி, இதன் சாற்றைப் புளிக்க வைத்துப் பருகிஞல் வெறியளிக்கும்.

பற்றிய விரிவான ஆராய்ச்சிகளாயுள்ளன. இவை ஆரிய முனிவர்களின் கருத்துக்களைச் சுருங்கிய அளவில் யாவர்க்கும் புலனாகும்படி வடித்துக் கொடுக்கவில்லை. அவ்வாறு வடித்துக் கொடுக்கத் தோன்றிய நூல் **பகவத்கீதை** மகாபாரதம், இராமாயணம் என்ற இதிகாசங்களில், கீதை முந்தியதில் ஓரங்கமாக அமைந்திருக்கிறது. முக்கியமான சில உபநிடதங்களும், வேதங்களுமே புத்தர் காலத்தில் இருந்திருக்கின்றன. கீதை அவர் காலத்தில் இருந்ததா என்பது சந்தேகமே; மகாபாரதக்கதை மட்டும் மக்களிடையே வழங்கி வந்திருக்கலாம்.

கீதை உபநிடதப் பசுக்களின் பால் என்பர். **உபநிடதங்கள், பிரும்ம சூத்திரம், கீதை** ஆகிய மூன்றுமே இந்து சமயத்திற்குரிய பிரமாண நூல்களாக பிற்காலத்தில் அமைந்துவிட்டன.

குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் அணிவகுத்து நிற்கையில் கண்ணன் அருச்சுனனுக்குக் கீதையை உபதேசம் செய்ததாக மகாபாரதம் கூறும். மனித உடலே குருக்ஷேத்திரம், விவேகத்தின் மக்கள் பாண்டவர், குருட்டு அஞ்ஞானத்தின் மக்கள் கௌரவர், உடல் வாழ்வாகிய ராஜ்யத்திற்காக இருதிறத்தாருக்கும் போர் நடக்கிறது; என்று கீதைக்கு உட்பொருள் கூறுவர். அவ்வாறாயின், அந்தப்போர் இன்னும் நடந்துகொண்டேயிருக்கிறது, மக்கட்குலம் உள்ளவரை நடந்துகொண்டேயிருக்கும்,

கீதை பல மொழிகளில் வெளிவந்துள்ளது. மேலே நாடுகளில் தத்துவ ஆராய்ச்சி செய்யும் பல பேராசிரியர் கள் அதைப் போற்றியிருக்கின்றனர். முதன் முதலாக அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் 'கிழக்கு இந்தி யக் கம்பெனியார்' வெளியிடுகையில், அக்காலத்து ஆங் கில அரசாட்சித் தலைவராயிருந்த **வாரன் ஹேஸ்டிங்ஸ்** அப்பதிப்புக்கு முகவுரை எழுதியுள்ளார். கீழ்த்திசை நாடுகளின் தத்துவ நூல்களும் இலக்கியமும் மேலே நாட்டு ஞானக் களஞ்சியத்தின் ஒரு துளிக்குக்கூட இணை யாகமாட்டா என்று இருமாந்திருந்த ஆசிரியர் **மெகாலே** போன்றவருடைய மனப்பான்மையைவிட்டு, வாரன் ஹேஸ்டிங்ஸ், 'இங்கிலாந்து ஒரு காலத்தில் இந்திய நாட்டை இழக்க நேரலாம். ஆனால் இந்தியாவில் தோன் றிய இந்தப் பகவத் கீதையின் கோட்பாடுகளை இங்கி லாந்து செயல் முறைக்குக் கொண்டு வந்தால், இங்கி லாந்து என்றைக்கும் மேன்மையுற்று விளங்கும்' என்று தமது முகவுரையில் குறித்துள்ளார். மனிதனின் உள்ளச் சோர்வை அகற்றி, ஊக்கமளித்து, அவன் பேராற்றலும், அன்பும், அறிவும் பெற்று நிறைவுடையவனைகச் செய் வதே கீதையின் நோக்கம்.

இந்தியத் தத்துவ ஆராய்ச்சியில் பகவத்கீதை ஒரு முற்றுப்புள்ளி யெனலாம். முந்திய தத்துவ நூல்களுக்குப் பின்னல் உரைகள் பல எழுதப்பெற்று வந்தனவேயன்றி, ஆராய்ச்சி கீதையுடன் நின்றுவிட்டது. வேதகாலத் திலும், அதற்கு முன்பும் மண்ணும், மரமும், கதிரும்,

ஒளியும், காற்றும், தீயும் கடவுளாக இருந்த நிலை மாறி, ஏகமான பரம் பொருள் ஒன்று தான், மற்றவை யெல்லாம் அதன் தோற்றமென்றும், அந்த மெய்ப் பொருள் மாறுபாடின்றி என்றும் உளதான 'சத்' ஆகவும், ஒளி மயமான 'சித்' ஆகவும், இன்பமயமான 'ஆனந்தம்' ஆகவும் உளது என்றும் கூறும் தத்துவம் நிலைத்து விட்டது. பகவத்கீதை பண்டிதர்களுக்கு மட்டுமின்றி மற்ற ஜனங்களுக்கும் உபநிடதமாகிவிட்டது.

## புராணங்கள்

ஆயினும், சமயக்கொள்கைகளைக் கல்வியறிவில்லாத பெரும்பாலான மக்களிடையே பரப்புவதற்குப் புராணங் களென்ற கற்பனைக் கதைகளும் கட்டப்பெற்றன. இவை முதலில் பதினெட்டாக இருந்து, பின்னால் எண்ணிலடங் காதவையாகப் பெருகிவிட்டன. ஆதிப்புராணங்களில் ஏழு நரகங்களே குறிக்கப்பட்டுள்ளன. பின்பு பாகவத புராணத்தில் ஆயிரக் கணக்கிலும், கருட புராணத்தில் 84லட்சம் நரகங்களும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன !

## மூன்று ஆசாரியர்கள்

காலம் செல்லச் செல்லச் பிறசமயங்களின் போட்டி யினாலும், வைதிக சமயத்தைப் பற்றி வாழ்க்கையில் சிரத்தை குறைந்ததனாலும், அவ்வப்போது பல ஆசாரியர் களும், கவிவாணரும், கல்விமான்களும், தோன்றி மக்களை

ஊக்கப்படுத்தி வந்திருக்கின்றனர். இவர்களுள் கி. பி. 9ஆம் நூற்றுண்டில் **சங்கரரும்,** 11ஆம் நூாற்றுண்டில் **இராமாநுஜரும்,** 12ஆம் நூற்றுண்டில் **மாத்வரும்** தலை சிறந்த ஆசாரியர்களாப் போற்றப்படுகின்றனர். இவர்கள் மூவரும் வேதாந்த நூல்களுக்கு விரிவுரை எழுதியுள்ளனர். இவ்வுரைகளை ஆதாரமாய்க் கொண்டு அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்று வைதிக சமயம் மூன்று பிரிவாகப் பிரிந்தது; மூன்று பிரிவான தத்துவ நூல்களும் பெருகிவிட்டன.

சங்கராசாரியார் உலகில் தோன்றிய முதன்மையான தத்துவ ஞானிகளில் ஒருவராகப் புகழ்பெற்றிருக்கிறுர். அவருடைய வாழ்க்கையும் போதனையும் பிரமிக்கத்தக்கவை. அவர் புதிய சமயம் எதையும் அமைக்கவில்லை; வேதாந்தக் கருத்தையே விளக்கியிருக்கிறுர். அவர் காலத்திருந்த ஆறு சமயங்களை அவர் ஆதரித்து உதவி செய்திருக்கிறுர். அவர் விளக்கிய சிறப்பான தத்துவம் அத்வைதம் (இரண்டற்றது) என்பது. உலகம், உயிர், பரம்பொருள்—இவை வேறல்ல; பரம்பொருளே தன்னை உலகமாகவும், உயிராகவும் காட்டுகின்றது என்று அவர் விளக்கியதோடு ஞானமார்க்கத்தின் வழிகளை மிக விரிவாக வற்புறுத்தியிருக்கிறுர். இவைகளைப் பார்த்த சிலர், அவர் கருமத்தை கைவிடச் சொல்லியிருப்பதாக எண்ணுவர். ஆனல் அவருடைய உபதேசங்கள் அவ்வாறு கூறவில்லை.

'சும்மா உட்கார்ந்திராதே, கருமத்தைக் கை விடாதே! நீ அறியாதவனாயிருந்தாலும், கருமத்தைச் செய்........நீ ஞானியாயிருந்து உண்மைப் பொருளை அறிந்திருந்தாலும், கருமத்தைச் செய்வாயாக!'

'ஒருவர் யோகப் பயிற்சியில், அல்லது உலக இன்பங்களைத் துய்க்கும் வேலைகளில், அல்லது சமுதாயக் கடமைகளில் ஈடுபட்டிருக்கலாம். அத்தகையோரின் இதயம் மட்டும் பிரும்மத்தில் (லயித்து) இன்புறுமானால், அவர் இலட்சியத்தை அடைந்தவராவர்'.

—சங்கரர்.

ஞானமில்லாமல் கருமம் மட்டும் பயன்படாது, ஞானத்தையிழந்தால் நாசம் என்பதை அவர் வற்புறுத்தியுள்ளார்.

இராமாநுஜாசாரியர் பிரகாசிக்கச் செய்த சித்தாந்தத்திற்கு விசிஷ்டாத்வைதம் (விசேஷத்தோடு கூடிய அத்வைதம்) என்று பெயர். இறைவன் ஒருவனே; அவனுக்கு உடலாயிருப்பது ஆன்மாவும் பிரகிருதியும், (உலகமென்ற உடலுக்கு அவன் உயிர்); அந்த உடலில் கணக்கற்ற உயிர்த் தத்துவங்களாயிருப்பது ஜீவன். இறைவன் நிறைவெய்திய பூரணன், அதில் தான் ஓர் அம்சமென்று ஜீவன் அறிந்துகொள்ளுதல் முக்தி — இதுவே இந்தச் சித்தாந்தத்தின் அடிப்படை. பரம்பொருளும், அதற்கு உடலாக அமைந்த ஆன்மாக்களும் - பிரகிருதியும்— மூன்றுமே நித்தியமானவை. இறைவன் யாதொரு தீமையும் கலவாதவனாய், மங்கள குணமுடையவனாய்,

ஆக்கல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களுக்கும் கருத்தாவாய், எங்கும் நிறைந்தவனாய், எல்லாம் வல்லவனாய், எல்லாம் அறிந்தவனாய் இருக்கிறான். ஆன்மாக்கள் அறிவும் ஆனந்தமுமே வடிவானவை, அவை அணு அளவுள்ளவை, எண்ணற்றவை. மெய்ப் பொருளும், ஆன்மாக்களும், பிரபஞ்சமும் சேர்ந்ததே உலகம்.

மாத்வாசாரியருடைய சித்தாந்தம் துவைதம்—இரண்டாகப் பேதமுடையது. அதன்படி பிரபஞ்சம், ஆன்மா, பரம்பொருள் மூன்றும் அநாதியானவை, அவைகளுக்குத் துவக்கமுமில்லை, முடிவுமில்லை; பரம்பொருள் பிரபஞ்சத்தை ஆட்சி செய்கின்றது; ஆனால் உலகமும் ஜீவனும் பரம் பொருளுக்கு வேறானவை. முக்தி பெற்ற பின்பும் ஆன்மா வேறு, பரம்பொருள் வேறு. மேலும், ஐந்து வேற்றுமைகளை (பஞ்ச பேதங்களை) மாத்வர் வற்புறுத்தியுள்ளார். இறைவனுக்கும் தனி ஆன்மாவுக்குமுள்ள வேற்றுமை, இறைவனுக்கும் சடப் பொருளுக்குமுள்ள வேற்றுமை, தனி ஆன்மாவுக்கும் சடத்துக்குமுள்ள வேற்றுமை, ஒரு சடப்பொருளுக்கும் மற்றொன்றுக்குமுள்ள வேற்றுமை. உலகம் கடவுளின் வேற்றுருவம் அன்று என்றும், அது கடவுளின் உடல் அன்று என்றும், இரண்டு ஆன்மாக்கள்கூட ஒன்று போலில்லை என்றும் அவர் கூறியுள்ளார். பக்தியே முக்திக்கு வழி. இறையருளாலேயே அந்த முக்தியைப் பெறலாம், முக்திக்குப் பின்பும் ஆன்மா இறை நிலையை அடையாது.

# சித்தாந்த சைவம்

அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகிய மூன்று சித்தாந்தங்களோடு, தென்னாட்டில் சைவ சித்தாந்தமும் சிறப்பாகத் திகழ்ந்து வரும் சமயம். இதுவும் பிரும்ம சூத்திரத்தை ஆதாரமாய்க் கொண்டது. இதற்கு வேதம் பொது நூல், 'ஆகமம் சிறப்பு நூல், வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என்பர். இது எப்போது தோன்றியது என்று கூற இயலாத முறையில் மிகத் தொன்மையான காலம் முதலேயிருந்து வருவது. ஆயினும், பிற்காலத்தில் **மெய்கண்டார்** இதைச் சித்தாந்த உருவில் அமைத்தார். அவருடைய 'சிவஞான போதம்' இதன் தத்துவங்களை விளக்குவது. பின்னால் இதற்கு உரையும், சார்பு நூல்களும் தோன்றின. சைவம் முப் பொருளுண்மையை வலியுறுத்தும். உலகு, உயிர், கடவுள் மூன்றுமே அநாதி நித்தியமானவை என்பது அதன் கோட்பாடு. உலகம் சடப் பொருளாயிருப்பினும், அதுவும் தனியிருப்புடையது. அறிவுப் பொருளின் முயற்சியால் அதுவும் தொழிற்படும். ஜீவான்மாவாகிய உயிரும் என்றுமுள்ளது. அது அறிவற்ற சடப்பொருளாகவோ, முற்றறிவுள்ள சித்துப் பொருளாகவோ இல்லை; சடத்தோடு இயைந்து சடமாயும், சித்தோடு இயைந்து சித்தாயும் இயங்குகிறது. இம்மையிலும் மறுமையிலும் அதன் அறியாமை நீங்கியொழிவதில்லை; ஆனால் முக்தியில் அறியாமை அடங்கியிருக்கும். சச்சிதானந்தப் பரம்பொருள் உலகோடும், உயிரோடும் நீக்கமறக் கலந்து நிற்கிறது.

இப்பரம்பொருள் மும்மூர்த்திகளில் ஒன்றன்று; அவற்றிற்கும் மேற்பட்ட முழுமுதல். எனவே இச் சித்தாந்தத்தில் மெய்ப்பொருள் ஒன்றே என்ற கொள்கையும், நித்தியமான மூன்று பொருள்கள் உண்டென்ற கொள்கையும் முரண்பாடில்லாத முறையில் நிலைத்திருக்கின்றன. இச் சித்தாந்தத்தைச் சுத்த அத்வைதமென்றும் கூறுவர்.

சித்தாந்த சைவத்தில் சமய வழிபாட்டுக்கு நான்கு வழிகள் வகுக்கப் பெற்றிருக்கின்றன. சரியை (உருவ வழிபாடு, கிரியை (அருவுருவ வழிபாடு) யோகம் (அருவ வழிபாடு), ஞானம் (உயர்நிலை) ஆலயங்களில் இறைவனை வணங்குவதுபோல, உயிர்களை வணங்குவதும் விதிக்கப் பெற்றிருக்கிறது. 'இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்' என்ற கொள்கையால், சைவர்கள் ஜீவகாருண்ய நெறியைப் பெரிதும் போற்றுவர். சைவமும் தமிழும் தழைக்கும்படி வளர்த்த சமய குரவர்கள், நாயன்மார்களுடைய வரலாறுகளும் கதைகளும் ஏராளமாயிருக்கின்றன.

## பிற வாதங்கள்

மேலே கூறிய வரலாற்றில் இந்திய நாட்டில் சமயங்களின் வளர்ச்சியும், தத்துவ ஆராய்ச்சியும் சுருங்கிய அளவில் குறிக்கப் பெற்றிருக்கின்றன. இவைகளைக் கொண்டு இந்திய மக்கள் அனைவருமே இரவும் பகலும்

தொழுதும், தியானத்தில் ஆழ்ந்தும் இருந்தனர் என்று கருதவேண்டியதில்லை. சமயங்களின் நடுவே பூதவாத மும் (materialism) நிலைத்து வந்திருக்கிறது. சில சம யங்களில் அது மேலோங்கியும், சில காலங்களில் மங்கி யும் வந்திருக்கிறது. இக்கொள்கைபற்றிய சரித்திர ஆராய்ச்சியின் மூலமே இதன் வரலாறு விளக்கமாகத் தெரியும். ஈசனே இல்லையென்று நாத்திக வாதமும், 'உண்டு, இல்லை'யென்று உறுதிப்படுத்தாத சந்தேக வாத மும் (agnosticism) வெவ்வேறு காலங்களில் இருந்திருக் கின்றன, ஆனால் சமயங்களைப்பற்றிய சரித்திரங்களைப் போல், இவைகளைப்பற்றிய வரலாறுகள் இன்னும் விரி வாக எழுதப்படவில்லை.

★

# நான்கு தீர்க்கதரிசிகள்

'வையம் மீது மானிடர் எல்லாம்
உய்யும் வழியை உணர்த்தும் மந்திரம்
..........................................................
எந்நா ளாயினும், எவ்விடத் தாயினும்
வெளியாம், நன்கு விளங்குதல் திண்ணம்'

—ஆசிய ஜோதி

சென்ற மூவாயிரம் ஆண்டுகளுக்கிடையே உலகில் நிலையான பெரும் புகழ் பெற்ற ஆறு தீர்க்கதரிசிகள் அவதரித்திருக்கின்றனர். இவர்கள் நிறுவிய சமயங்

களும், இவர்களுடைய உபதேச மொழிகளும் இன்று வரை மக்களிடையே நிலைத்திருக்கின்றன. இந்திய வேதங்களுக்குப் பின்னால், உலகுக்கு அறமுரைத்த இப் பெரியார்கள் தோன்றிய காலங்களும், நாடுகளும் வரு மாறு:

கி. மு. 1,000 (சுமார்)...ஜாரதுஷ்டிரர்...(பாரசீகம் என்ற ஈரான் நாடு)

கி. மு. 573 ...கௌதமபுத்தர்...(இந்தியா)

கி. மு. 570 ...லாவோத்ஸே ...(சீனா)

கி. மு. 551 ...கன்பூஷஸ் ...(சீனா)

கி. மு. 1 ...ஏசுகிறிஸ்து ...(பாலஸ்தீனம்)

கி. மு. 632 ...முகமது நபி ...(அரேபியா)

வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு நாடுகளில் தோன்றிய இப்பெரியார்களில் ஒவ்வொருவரும் அவரவர் சமுதாயத்திற்குப் போதித்து வந்த அறமுறைகள் ஒவ்வொரு சமயம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தன. இவர்களைப் பற்றியும், இவர்களுடைய சமயங்களைப் பற்றியும், சுருக்கமாக ஓரளவாவது அறிந்து கொண்டால், சமயங்களை நிறுவிய சான்றோர்களில் புத்தரின் ஸ்தானத்தை நன்கு தெரிந்து கொள்ளமுடியும். பௌத்த தரும ஆராய்ச்சிக்கும் பிற சமயங்களைப்பற்றிய கருத்து மிக்க உதவியாகும். இந்த இயலில் முதல் நான்கு தீர்க்க தரிசிகளைப் பற்றிக் கவனிப்போம்.

# ஜாரதுஷ்டிரர்

**ஜாரதுஷ்டிரர்** ஈரான் நாட்டு ஆரிய மக்களிடையே அவதரித்தவர். இந்தியாவுக்கு வந்த ஆரியரும் அவ்வாரிய இனத்தைச் சேர்ந்தவரே யாதலால், இரு பிரிவினருடைய பழக்க வழக்கங்கள், வழிபாடுகள் முதலியவை ஒன்று போலவே இருந்தன. ஜாரதுஷ்டிரர், ஜாரதுஷ்டிரர்* சமயத்தை ஸ்தாபித்தவர். பின்னல், கி. மு. ஆறும் நூற்றுண்டில் ஆசிய கண்டத்தில் அலை மோதிய சமயப் புரட்சியின் திலகங்களாக மூவர் தோன்றினர். இந்தியாவில் **கௌதம புத்தர் பௌத்த** சமயத்தையும் சீனவில் **லாவோத்ஸே டாவோ** மதத்தையும், **கன்பூஷஸ் கன் பூஷிய** மதத்தையும் நிறுவினர்கள். இம்மூவரும் ஒரே காலத்தில் இருந்திருக்கவேண்டுமென்று சரித்திர ஆசிரியர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். இவர்களுக்கு ஐந்து நூற்றுண்டுகளுக்குப் பின்னல் **ஏசுநாதர்** பாலஸ்தீன நாட்டு யூதரிடையே தோன்றிக் **கிறிஸ்தவ** சமயத்தை அமைத்தார். அவருக்கு ஆறு நூற்றுண்டுகட்குப் பின்னல் பாலை வனங்கள் மிகுந்த அரேபிய தேசத்தில் **முகம்மது நபி இஸ்லாம்** மார்க்கத்தை ஏற்படுத்தினர்.

ஜாரதுஷ்டிரைப் பற்றி ஆதாரமுள்ள சரித்திர வரலாறு இல்லாததால் அவர் பிறந்த ஆண்டே சரியாகத் தெரியவில்லை; அதைக் கணக்கிடுவதிலேயே ஆயிரக்

---

* இது சௌராஷ்டிர மதம் என்று சாதாரணமாகச் சொல்லப் பெறுவது.

கணக்கான ஆண்டுகள் வித்தியாசமாகக் கூறப்படுகிறது. கிறிஸ்துநாதர் காலத்திற்குச் சுமார் 10 நூற்றுண்டுகட்கு முன் அவர் இருந்திருக்கலாம் என்று **எட்வர்டு மேயர்*** என்பார் குறித்திருக்கிருர். சிலர் அவர் புத்தர் காலத்திலேயே இருந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். அவர் உரைத்த அற நூல்கள் பலவற்றை மஸிடோனிய நாட்டு வீரனை **அலெக்ஸாந்தர்** குடிவெறியில் அழித்து விட்டான். இக்காரணங்களால் அவரைப் பற்றிய முழு வரலாற்றையும் அறிவதற்கில்லை. ஒரு காலத்தில் ஈரான் நாடு முழுவதும் பரவியிருந்த அவருடைய சமயமும் பின்னுல் அருகிவிட்டது. இப்போது அதைச் சேர்ந்தொழுகுவோர் இந்தியாவிலுள்ள சுமார் இலட்சம் மக்களே.

ஜாரதுஷ்டிரர் பிறந்த அன்றே சிரித்தாராம்! ஞானம் பெறுவதற்காக அவர் வெகு காலம் மலைக் குகையில் தனியே யிருந்து தியானம் செய்வது வழக்கம். அவர் காலத்து ஈரானிய மக்கள் இந்திய ஆரியர்களைப் போலவே இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாக வணங்கி வந்தனர். விவசாயமே அவர்களுடைய தொழில். இரும்பையும் உப்பையும் பற்றிக்கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஒன்றே தெய்வமென்ற அடிப்படையில், அவர்களுக்குத் தமது புது மதத்தைப் புகட்டுவதற்காக ஜாரதுஷ்டிரர் பத்து வருடம் அரும்பாடு பட்டும், ஒரேயொரு சீடனைத்தான் பெறமுடிந்தது. இதனுல் அவர் அடைந்த வேதனையை அவரே கூறியிருக்கிருர்.

* Edward Meyer

'நான் எந்த நாட்டுக்குச் செல்வேன், எங்குதான் ஓடிப் போவேன்? பிரபுக்களும் சீமான்களும் என்னை விலக்கு கிறார்கள், ஜனங்களும் என்னை விரும்பவில்லை, நாட்டை யாளும் தீவினையாளரும் என்னை விரும்பவில்லை. ஓ **அஹுர மஸ்தா!** உன்னை நான் எப்படி. வணங்குவேன்?'

அஹுர மஸ்தா என்பது இறைவனின் பெயர். இந்திய ஆரியர் தேவர், அசுரர் என்று வழங்கி வந்த சொற் களையே ஈரானியர் நேர் எதிரான பொருளில் வழங்கி வந்தனர். 'அசுரர் (அஹுர)' இறைவனின் பெயராயிற்று. அரக்கர் முதலிய தீவினையாளர் 'தேவர்' என்று அழைக் கப்பெற்றனர். இந்திய ஆரியர் சோமபானம் செய்து வந்ததுபோல, ஈரானியர் ஹோமரசத்தைப் பானஞ் செய்து வந்தனர். இந்த மதுவையும், இதைக்கொண்டு செல்பவர்கள் பாமர மக்களை ஏமாற்றுவதையும் ஜார துஷ்டிரர் வன்மையாகக் கண்டித்ததுடன், ஆண்டவ னிடமும் அதைப்பற்றி முறையிட்டு வந்திருக்கிறார்.

'சத்திய மார்க்கம் அஹுர மஸ்தாவால் அமைக்கப் பெற்றது' என்பது அவர் திருவாக்கு. நீதிபற்றியும், தான தருமங்கள் பற்றியும் அவர் விரிவான போதனைகளைக் கூறியிருக்கிறார். ஆனால் தீய எண்ணமும் தீயசெயல்களு முள்ள தீயோருக்கு இரக்கங்காட்டலாகாது என்று அவர் போதித்தார். புத்தரும் ஏசுநாதரும் தீயோரிடமும் அன்பு காட்டி நல்வழிப்படுத்தும்படி கூறிய கருணை மார்க்கம் அவருக்கு உடன்பாடன்று. ஈரான்போன்ற விவ சாய நாட்டில் கால்நடைகள் பேணப்படுவது இயற்கை.

பசுவை மிக்க அன்புடன் பேணி வளர்க்கும்படி மதவிதிகள் இருக்கின்றன. இந்துக்களைப் போலவே ஈரானியர்களுக்கும் பசு புனிதமானது. அவர்களுடைய சமயத்தில் உழவுத் தொழிலுக்கு உன்னதமான இடமளிக்கப்பெற்றிருந்தது. பதினாயிரம் பிரார்த்தனைகள் செய்பவனைப் பார்க்கினும் நிலத்தைப் பண்படுத்திக் கவனத்தோடு விதைத்துப் பயிரிடுவோனே மேலானவன் என்று போதிக்கப்பட்டது.

ஜாரதுஷ்டிர சமயத்தைச் சேர்ந்த பார்சிகள் பிணங்களை எரிப்பதுமில்லை, புதைப்பதுமில்லை; 'தோக்மா' என்ற உயர்ந்த கோபுரத்தின் உச்சியில் திறந்த வெளியில் அவைகளைக் கொண்டுபோய் வைத்தலே வழக்கம். கோபுரத்தின் உச்சியில் கழுகுகள் வந்து பிணங்களை உடனே தின்றுவிடுவதற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது.

மேலும் பார்சிகள் தீயையும், நீரையும், சந்திரனையும், சூரியனையும் வணங்குவதைக் காண்போர், இவையே அவர்களின் தெய்வங்களென்று எண்ணுவர். அவ்வாறில்லை. இவைகளை இறைவனின் சின்னங்களாகவே அவர்கள் வணங்குவர். இந்திய ஆரியர் எரியோம்பி வந்ததையும், அக்கினியில் பெய்த யாகப்பொருள்களை அக்கினிதேவன் குறித்த தெய்வங்களிடம் கொண்டு சேர்ப்பானென்று நம்பியதையும்போன்ற வழக்கங்கள் இவை. அக்கினி ஆண்டவனின் சோதியையும் பரிசுத்தத்தன்மையையும் விளக்குவதால், அதையே அவனுக்கு அறிகுறியாகப்

பார்சிகள் கொண்டாடுகின்றனர். மற்றைப்படி ஈரான் நாட்டினர் என்றுமே சிலைகளை வைத்து வணங்கியதில்லை.

ஆன்மா அழிவற்றது, மனிதன் மரித்த பின்பு அவனுடைய ஆன்மா, அவன் செய்த நன்மை தின்மைகளுக்குத் தக்கபடி, சுவர்க்கத்தையோ நரகத்தையோ அடையுமென்று ஜாரதுஷ்டிரர் உபதேசித்து வந்தார். ஆனால் சுவர்க்கத்தைப்பற்றியும் நரகத்தைப்பற்றியும் விரிவான கதைகளை அவர் கட்டிக் கூறவில்லை. உபவாசங்களால் உடலை வருத்தித் தவஞ் செய்யும்படி அவர் கூறவில்லை. 'கண்களாலும், நாவுகளாலும், காதுகளாலும், கைகளாலும், கால்களாலும், பாவம் செய்யாதிருத்தலே எங்களுக்கு உபவாசம்' என்று அவருடைய சமயநூல் ஒன்று கூறுகின்றது.

அஹுரமஸ்தாவாகிய இறைவன் உலகில் நற்செயல்களுக்கெல்லாம் காரணனாயிருப்பது போல் அஹ்ரிமன் (தேவர்களாகிய தீயவர்களின் தலைவன்) தீமைகளையெல்லாம் படைப்பவனென்று ஜாரதுஷ்டிர சமயம் கூறும்.

ஜாரதுஷ்டிரர் பெரிய கல்விமான். அவர் 30வயதில் சமயப் பிரசாரம் செய்ய முற்பட்டு, 77வயது வரை வாழ்ந்திருந்தார். அறவுரைகள் கூறிவந்ததோடு, வைத்தியத்திலும் அவர் கைதேர்ந்தவர். ஆண்டவனிடம் பக்தி—வெறிகொண்ட பெரியார் பலரைப் போலவே, அவரும் வாழ்க்கையில் பல இன்னல்களால் இடருற்றிருந்தார். ஒரு சமயம் சிறையிலும் இருந்தார். சிறையிட்ட மன்

ணனே பின்னுல் அவருக்குச் சீடனுன். அது முதல் அவர் சமயம் நாடெங்கும் பரவி வந்தது. முடிவில் அவர் கொலையுண்டு இறந்ததாக அவரைப்பற்றிய வரலாறுகள் கூறுகின்றன. அவர் தொழுதுகொண்டிருக்கையில் கொலைஞன் அவரைப் பலி வாங்கியதாகவும், அப்போது அவர் எறிந்த ஜபமாலை அவன் மேலே பட்டதும் அவனும் இறந்து வீழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

## கௌதம புத்தர்

கி. மு. ஆருவது நூற்ருண்டிலே இந்திய நாட்டில் சமயக்கிளர்ச்சிகள் பெரிய அளவில் நிகழ்ந்து வந்தன. புதுச்சமயங்களும் தத்துவங்களும் பிரசாரம் செய்யப் பெற்று வந்தன. முன்னுல் ஏற்பட்டிருந்த வேதங்களும், முக்கியமான சில உபநிடதங்களும் ஒரே சமயத்தையும், அதற்குரிய திட்டமான தத்துவங்களையும், விதிகளையும் வகுக்கவில்லை. பல முனிவர்கள் கூறிய பாடல்களும், தத்துவங்களும் அடங்கிய களஞ்சியங்களாகவே அவை இருந்தமையாலும், அவைகளிலே பல குரல்கள் ஒலித்துக்கொண்டிருந்ததில் மாறுபாடுகள் இருந்தமையாலும், அவை விவாதங்களுக்கு இடமாயின. வேதங்களை அறிந்தவர்களும் ஓதுபவர்களும் பிராமணர்களாகவே யிருந்தனர்; அவர்களே வேதியர். உபநிடதங்களிற் சில க்ஷத்திரியர்களாலே இயற்றப்பட்டவை. பிராமணர்கள் அவர்களிடம் சென்று பாடங்கேட்டு வந்தன ரென்றும் கூறப்பட்டிருக்கிறது. உபநிடத காலத்தில்

சமுதாயத்தில் பிராமணர் பெற்றிருந்த முதன்மையான நிலை சிறிதுமாறி, க்ஷத்திரியர் அந்நிலைக்கு வந்துகொண் டிருந்தனர். எனவே இந்த இரு வகுப்பாருக்குள்ளேயே முக்கியமான போட்டி நடந்து வந்தது. அக்காலத்தில் மற்ற இரு சாதிகளும் அதிகமாய்ப் பெருகியிருக்கவில்லை. பொதுவாக சாதிகள் பிற்காலத்தில் இரும்புச் சுவர்களைப் போல் இறுகிவிட்டதைப் போல அக்காலத்தில் இருக்க வில்லை.

அரசர்கள், பெருஞ் செல்வர்களின் மூலம் பிராம ணர்கள் யாகங்களை நடத்திவந்தனர். அஜமேதம், அசுவ மேதம் முதலிய யாகங்களில் பிராணிகள் வதைக்கப்பட் டன. இவைகளை வதைத்துத் தேவர்களுக்கு அளிப்ப தால் மனிதர்கள் செய்த பாவங்கள் கழியுமென்று நம்பப் பட்டு வந்தது. பிராமணர்கள் நிலங்களும், கால்நடை களும், மற்றைச் செல்வங்களும் பெற்றுச் சுகவாழ்வு நடத்திக்கொண்டிருந்தனர். நாடுகளை ஆண்டுவந்த அர சர்களும், அவர்களைச் சேர்ந்த க்ஷத்திரியர்களும், செல்வ மும், செல்வாக்கும் பெற்றிருந்தனர். உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் வாணிபம் செய்து பெரும் பொருளீட் டிய வர்த்தகர்களும் சமுதாயத்தில் உயர்ந்த நிலையிலிருந் தனர்.

கங்கை நதிபாயும் வளமான பிரதேசங்களிலே ஆரி யர்கள் அப்போது நிலையாக வாழ்ந்து வந்தனர். நாட்டின் பூர்வ மக்களோடு அவர்களுக்கு ஏற்பட்டிருந்த பூசல் கள் தீர்ந்து, இரு சமூகங்களும் இணங்கியிருந்ததால்.

அமைதி ஏற்பட்டிருந்தது. உணவுக்குப் பஞ்சமில்லாமல் எங்கணும் விளைநிலங்கள் தானியங்களை வாரி வழங்கின. பசுமையான வனங்களிலும் சோலைகளிலும் சுவையுள்ள தீங்கனிகள் நிறைந்திருந்தன. ஏராளமான பசுக்கள், காளைகள், ஆடுகளும் இருந்தன. செல்வம் மிகுந்த பெரிய நகரங்கள் பலவும், ஆயிரக்கணக்கான கிராமங்களும் அமைந்திருந்தன. உணவுக் கவலை யொழிந்திருந்ததால், மக்கள் தத்துவம் பேசவும், தத்துவப் போர்கள் புரியவும் காலமும் வசதியாயிருந்தது.

வேத, உபநிடதங்கள் அறிவாளரிடையே மட்டும் செல்வாக்குப் பெற்றிருந்தன. பெரும்பாலான பொது மக்கள், தொன்று தொட்டுத் தாங்கள் கடைப்பிடித்து வந்த முறைகளில், கடவுள் வழிபாடுகளைச் செய்து வந்தனர். சாத்திரங்கள் யாவும் சமஸ்கிருதத்திலேயே இருந்தன. ஜனங்கள் பழைய பிராகிருத மொழியிலே பேசிவந்தனர். கல்வியும் சமய அறிவும் சமுதாய மெங்கும் ஒரே படியாய்ப் பரவியிருக்கவில்லை. அங்கிலையில் வைதிக சமயத்தை எதிர்த்துச் சில அறிவாளர்கள் தோன்றிப் பிரசாரம் செய்ய முற்பட்டனர். சிலர் நாத்திகம் பேசினர், சிலர் பரம்பொருளைப் பற்றிச் சந்தேக வாதம் பேசினர், சிலர் தங்கள் மனம் போனவாறு கற்பனைகள் செய்து, மக்களுக்கு உபதேசம் செய்து, சீடர்களையும் சேர்த்து வந்தனர். இவர்களுள் **கோசாலி மக்கலி*** **புராண**

---

* தமிழில் இவர் 'மற்கலி' என்று கூறப்படுவர்.

**காசியபர், காத்தியாயனர், சஞ்சயர், அஜித கேச கம்பலர்** முதலியோர் முக்கியமானவர். இவ்வாறு ஒரு புறம் மோட்சத்திற்கு வழிகாட்டுபவர்களும், நகரத்திலி ருந்து மீட்பவர்களுமாகக் கூடி வேலைசெய்து வந்தனர். மற்றொரு புறத்தே இவ்வுலகிலே மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று போதிக்கப்பட்டது. வைதிக சமயத் தின் பாதுகாப்பாளராக இருந்து வந்த பிராமணர்கள், சாத்திர அறிவைத் தங்கள் ஏகபோக உரிமையாய்க் கொண்டிருந்ததாலும், உலக வாழ்வுக்கு அவசியமான செல்வங்களைப் பெற்றிருந்ததாலும், சமய சம்பந்தமாக அதுவரை கவலையற்றிருந்தனர். ஆனால் திடீரென்று பூகம்பம் ஏற்படுவது போன்ற அதிர்ச்சியுடன் வட இந்தி யாவில் பல இடங்களிலும் பல தத்துவங்கள் முளைத்து, தத்துவப்போர்களும் நடக்க ஆரம்பித்ததில், சமுதாயத் தின் அடிப்படையாக விளங்கிய சாதிக் கோட்டைகளும் குலுங்க ஆரம்பித்தன.

கடவுள் ஐம்புலன்களின் உணர்வுக்கும், பகுத்தறி வின் ஆராய்ச்சிக்கும் புலனாகாதவர். அவர் அறிவினுக்கு எட்டாதவரென்று சாத்திரங்களே கூறும். எனவே நம் பிக்கையின் மூலமே கடவுட் கொள்கை நிலை பெற்று இருக்கமுடியும். சமய வழிபாடுகளும் பெரும்பாலும் நம்பிக்கை மீதே அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே சமயங்களைப் பாதுகாப்போர், அவைகளின் பெயரா லேயே, எண்ணற்ற மூட வழக்கங்களையும் மக்களின்மீது சுமத்துவது எளிதாகின்றது. மனிதன் செயல்புரிவதற்கு

உற்ற துணையாயுள்ள அறிவு, உணர்ச்சி, நம்பிக்கை ஆகிய மூன்று ஆற்றல்களில், அறிவையும், உணர்ச்சியையும் கட்டி வைத்துவிட்டால், நம்பிக்கை மூலம் எதையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய முடியும். சமயத்தலைவர்கள் இந்த நம்பிக்கையையே துணையாகக்கொண்டு, உலகிலே நடத்திவந்த போர்கள், கலகங்கள், கொலைகள், அக்கிரமங்களுக்கு அளவேயில்லை. இவற்றையெல்லாம் ஆராய்வோர், சமூகத்திலுள்ள மூடப் பழக்க வழக்கங்களோடு நில்லாமல், சரித்திர வரலாறுகள், சமயங்களோடு, கடவுளையும் பற்றி ஆராயப் புகுவர், அதிலிருந்து நாத்திகம் அரும்பும்.

பழங்கால மக்கள் வனங்களில் திரிந்தும் நிலையான வீடுகள், கழனிகள் முதலிய வசதிகளின்றியும் வாழ்ந்த காலத்து, இடி, மின்னல், கதிர், மதி, காற்று, மழை. மலை, மரம்—எல்லாம் தெய்வங்களென்று பயத்தால் வணங்கி வந்தனர். வெகு காலத்திற்குப் பின்னால் ஏக தெய்வ வணக்கம் ஏற்பட்டது, மனிதன் தன்னைப்போலவே தன் கடவுளையும் படைத்துக் கொண்டான். மனித சமூகத்தின் இளமைப் பருவத்திலிருந்த மனத்தின் பலவீனமும் அதனால் ஏற்பட்ட மூட நம்பிக்கைகளும் சேர்ந்ததுதான் மதம் என்பர் பகுத்தறிவு ஆராய்ச்சியாளர்.

மனிதனின் மனம் வளர வளர மதமும் வளர்ந்து மாறும். ஆனால் மதத்தலைவர்களும், மதத்தின் துணையால் வாழ்க்கை நடத்துவோரும் மாற்றத்திற்கு இடம் கொடுப்பதில்லை. அப்படியே மாறினாலும். மதங்களின்

புறத் தோற்றங்களிலேயே அதிக மாறுதலிருக்கும். ஆட்சி புரிவோர்களும், புரோகிதர்களும், பெரும்பணம் படைத்த செல்வர்களும் மக்களை ஏமாற்றி அடக்கி வைக்க மதத்தையே அரிய கருவியாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். சில சமயங்களில் இம்முறைகளை எதிர்த்து நாத்திக இயக்கம் வளம்பெற்று வளர்வதுண்டு.

மேலே கூறிய காலத்தில் நாத்திகக் கருத்துக்கள் தீவிரமாகப் பரப்பப்பட்டு வந்தன. இந்தப் பிரசாரத்திற்குக் காரணமான பூதவாதக் கொள்கையுடையோர்களில் **அஜித கேச கம்பலர்** என்ற துறவி முக்கியமானவர். கண் முன்பு காணக்கூடியவையும், கருத்தால் அறியக் கூடியவையுமான பொருள்களைத் தவிர, ஆன்மா, ஆண்டவன், அழியா வாழ்வு, சுவர்க்கம், நரகம் மறு பிறப்பு முதலிய விஷயங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

'அறிவைவிட வேதத்தைப் பிரமாணமாகக் கூறுவது, உலகைத் தோற்றுவித்தவர் கடவுளென்று ஒப்புக் கொள்வது, தீர்த்தமாடுதலை மதச் சடங்காக்குவது, பிறப்பிலே சாதி வேற்றுமை காண்பது, பாபத்தைப் போக்கச் சரீரத்தை வாட்டுவது இவை ஐந்தும் மனிதர்கள் அறிவற்ற ஜடப் பொருளாகிவிட்டார்கள் என்பதற்கு லட்சணங்கள்' என்று பிற்காலத்தில் ஆசிரியர் **தருமகீர்த்தி** எழுதிய கருத்து அக்காலத்திலும் பல உருவங்களில் ஏற்பட்டிருந்தது.

மானிட அறிவையே கருவியாய்க்கொண்டு ஆராய்வோர் சமயங்களின் அடைப்படைகளையே தகர்க்க முன்வருவர். மேலும், முன்னால் ஏற்பட்டு நிலைத்துள்ள சமயங்களைப் பின்னால் தோன்றும் சமயவாதிகள் எதிர்த்துத் தாக்குதலும் உண்டு. ஆன்மீக வாழ்க்கையிலேயே ஈடுபட்டுப் பரம்பொருள் ஐக்கியத்தை நாடும் ஆன்றோர் சமயங்களின் உட்பொருளை மறைக்கும் புறவேடங்களைத் தாக்கி வருதலும் எக்காலத்திலும் வழக்கம்.

**'பார்ப்பனர்கள் கட்டிய பாழான வேதத்தைச்**
**சோதித்துத் தள்ளடிநீ—குதம்பாய்**
**சோதித்துத் தள்ளடி நீ!'**

என்றும்,

**'சாத்திரத்தைச் சுட்டுச் சதுர் மறையைப் பொய்யாக்கிச்**
**சூத்திரத்தைக்கண்டு சுகம் பெறுவதெக்காலம்'**

என்றும் பிற்காலத்தில் தென்னாட்டில் தோன்றிய கருத்துக்கள் முற்காலத்திலேயே கங்கைக்கரையிலும் முழங்கிய கருத்துக்களேயாம்.

நாத்திக வாதம், ஆஜீவக மதம், சாங்கியம் முதலிய பலதிறப்பட்ட தத்துவ நூலாராய்ச்சிகளின் நடுவே எழுந்து நிலைந்த இரு சமயங்கள் பௌத்தமும், சமணை

* குதம்பைச் சித்தர்.

† பத்திரகிரியார்,

மும். ** பௌத்த மதத்தை நிறுவியவர் **கௌதம புத்தர்.** சமண் சமயத்தை நிறுவியவர் **வர்த்தமான மகாவீரர்.** †† புத்தரும் மகாவீரரும் ஒரே காலத்தவரெனினும், மகாவீரர் மூத்தவர். இருவரும் அரச வம்சத்தைச் சேர்ந்தவர். இருவருடைய சமயங்களுக்கும் சில ஒற்றுமைகளிருந்தபோதிலும், அடிப்படையான வேற்றுமைகளும் இருந்தன. இச்சமயங்கள் வைதிகச் சூழ்நிலையிலிருந்தே தோன்றியவை யெனினும், இவை வேதங்களையும் வேத முதல்வனையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மகாவீரர் சமண் சமயத்தின் கடைசித் தீர்த்தங்கரர் என்றும், அவருக்கு முன்னும் அச்சமயம் இருந்து வந்ததென்றும் கூறுவர். அவர் பாடலிபுரத்திற்கு (இக்காலத்துப் பாட்னு நகருக்கு) 27 மைல் வடக்கேயிருந்த வைசாலி நகரைச் சேர்ந்தவர். அவர் துறவு பூண்டு, உடைகளையெல்லாம் கழற்றி யெறிந்து விட்டுத் திகம்பரராகத் தவமிருந்தார். அவர் கண்ட மார்க்கத்தைப் பதினொரு சீடர்களுக்கு உபதேசம் செய்திருந்தார். சுமார் கி. மு. 476 அல்லது 477ல், தமது எழுபத்திரண்டாவது வயதில், அவர் **பாவா** நகரிலே காலமானார்.

---

** சமணம் சமண், ஜைனமதம், அருகம், ஆருகதமென்றும் அழைக்கப்பெறும்,

†† மகாவிரர் விருஷப தேவரென்றும், நிகந்தநாத புத்தரென்றும் அழைக்கப்பெறுவர்; இவருக்கு வேறுபல பெயர்களுமுண்டு.

அவருடைய சமண் சமயத்தில் படைப்புக்கு ஆதி காரணமான முழுமுதற் கடவுளுண்மை கூறப்படவில்லை. உலகம் என்றும் இயற்கையாயுளதென்றும், மக்களின் இன்ப துன்பங்களுக்கு அவர்களே காரணமாவரென்றும் அச்சமயம் கூறும். இந்த அடிப்படையில் மக்களின் வாழ்வை உயர்த்தவும், ஒழுக்கத்தை வளர்க்கவும், அறங்களைச் சீர்திருத்தி அமைக்கவும் அச்சமயம் அரும்பாடு பட்டு வந்தது. பல பிறவிகளெடுப்பினும், நிறைந்த அறிவின் துணையால் **இருவினைகளையும் ஒழித்த உயிரே இறை** என்று கருதப்பட்டது. ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாக ஓம்பப்பட்டது. ஒழுக்கத்தில் கொல்லாமையும், அதனடியாக ஜீவகாருண்யமும் முதலிடம் பெற்றன.

**'தன்னிற் பிறிதில்லை தெய்வம் நெறிநிற்பில்,**
**ஒன்றுனும் தானெறி நில்லானேல்—தன்னை**
**இறைவனுகச்* செய்வானும் தானேதான் தன்னைச்**
**சிறுவனுகச்† செய்வானும் தான்'****

என்று அருக சமயத்து அறிஞர் **முனைப்பாடியார்** கூறுவது போல், மனிதன் தன்னை உயர்த்துங்கருவி தானேயாவன். ஒருவன் நன்னெறியில் நிற்கும்போது தெய்வமாகிறுன், அந்நெறியில் நில்லாதபோது அவனைவிடத் தாழ்ந்தது வேறில்லை. ஒருவனது உயர்வுக்கும் தாழ்வுக்கும், இம்மைக்கும் மறுமைக்கும் அவனது செயலே காரணமாம்.

* இறைவன்—தலைவன், † சிறுவன்—தாழ்ந்தவன்,
** அறநெறிச்சாரம்.

'தானே தனக்குப் பகைவனும் நட்டானும்,
தானே தனக்கு மறுமையும் இம்மையும்,
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி**

என்றும் 'அறநெறிச் சாரத்தில்' காணப்படுகின்றது.

ஞானம், காட்சி, ஒழுக்கமாகிய மூன்றையும் துணைக் கொண்டு, இரு வினைகளை நீக்கி, இன்பப் பேற்றையடை-யும் மார்க்கத்தைச் சமண சமயம் வலியுறுத்தும். இம் மூன்றையும் குறித்துச் 'சீவக சிந்தாமணி'† விளக்கி யுள்ளது.

'மெய்வகை தெரிதல் ஞானம், விளங்கிய
பொருள்கள் தம்மைப்
பொய் வகையின்றித் தேறல் காட்சி,
ஐம் பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா தொழுகுதல்
ஒழுக்கம்...'

சமணத்துறவிகள் ஈ, எறும்பு, பூச்சி, புழுக்களுக்குக் கூடத் தீங்கு செய்ய ஒருப்படார். கொல்லா விரதம் குவலயத்தில் ஓங்குவதற்கு அவர்களே மூல காரணராக விளங்கினர். மற்றும் உண்ணாவிரதமிருந்து உடல்களை வாட்டிக் கடுமையான நோன்புகளை அவர்கள் மேற்

** கரி—சாட்சி, சான்று.

† 'சீவக சிந்தாமணி' அருக சமயக்கவிஞர் திருத்தக்க தேவர் இயற்றியது.

கொண்டிருந்த வரலாறுகளைப் பல நூல்களிலும் காண லாம். சமணத்தைத் தொடர்ந்து கோசாலி மக்கலி நிறுவிய ஆஜீவக மதமும் அக்காலத்துச் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவ்விரு சமயங்களின் துறவிகளும் உடையின்றி அம்மணமாக இருந்து வந்தனர். ஆஜீவகம் பின்னால் மறைந்தொழிந்தது; ஆனால் சமணம் நெடுநாள் நிலைத்திருந்தது.

கௌதம புத்தர் இன்றைக்கு 2,500 ஆண்டுகட்கு முன்னே தோன்றியவராதலால், அவரைப் பற்றிய சரித் திரக் குறிப்புக்கள் போதிய அளவு கிடைக்காமலிருந்தன. அவர் அரச குலத்திலே பிறந்து, இராஜ்யத்தைத் துறந்து, தவம்செய்து, ஞானமடைந்து, எண்பது வருடம் இந்நாட் டில்வாழ்ந்து தருமஉபதேசம்செய்து எங்கும் புகழ்பெற்றி ருந்ததால், அவரைப் பற்றிய கற்பனைக் கதைகளே அதிக மாயிருந்தன. தெய்வங்களைப் பற்றிய புராணங்களைப் போல், அவரைப் பற்றியும் கதைகள் எழுந்தன. **அசுவ கோஷ** எழுதிய 'புத்தசரிதை' என்ற அழியாப்புகழுள்ள காவியமும், பிற சரித்திரங்களும், நாடெங்கும் அமைக்கப் பெற்ற பௌத்த ஆலயங்களும், விகாரைகளும், சேதி யங்களும், ஆராமங்களும், பல்லாயிரம் சிற்பங்கள், சிலை களும் அவருடைய எண்பது வருடத்திய வாழ்க்கையின் உண்மை வரலாறுகளை விவரமாய்த் தெரிந்துகொள்ள அதிக உதவியளிக்கவில்லை. சீனாவில் பௌத்தமதம் பர விய பின் இந்தியாவுக்கு வந்திருந்த பிரபல யாத்திரிகர்க ளான **ஹுயன்சாங், பாஹியான், இத்-ஸிங்** மூவரும்

மதித்தற்கரிய சரித்திரக் குறிப்புகள் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் பக்தி மிகுதியால் புத்தரைப் பரவிப் புகழ்திருக்கின்றனர், தாங்கள் வந்த காலத்தில் கேள்விப்பட்ட விஷயங்களை யெல்லாம் தொகுத்து எழுதியிருக்கின்றனர். அக்காலத்திலேயே புத்தர் தெய்வ புருடராகிவிட்டார், மக்கள் அவர் சிலைகளை வைத்து வணங்கி வந்தனர். போதிய சரித்திர ஆதாரங்கள் கிடைக்காத நிலையில், சில மேலை நாட்டு ஆசிரியர்கள் 'புத்தர்' என்று ஒருவர் இருந்ததேயில்லையோ யென்று சந்தேகமும் கொண்டனர்!

ஆனல் பாலி மொழியிலுள்ள திரிபிடகம் * என்ற பௌத்தத் திருமுறைகளிலே பல அச்சாகி வெளிவரவும், ஐரோப்பிய ஆசிரியர் சிலர் அரும்பாடுபட்டு அவைகளை ஆங்கிலம் முதலிய மொழிகளில் பெயர்த்து வெளியிடவும் வாய்ப்புக் கிடைத்தபோது, அத்திருமுறைகளிலிருந்து ஓரளவு சரித்திரத்தை அறிய முடிந்தது. இந்தியப் புதை பொருள் ஆராய்ச்சியின் மூலமும் சில உண்மைகள் தெரிந்துள்ளன. பர்மா, இலங்கை, திபேத்து முதலிய

---

* திரிபிடகம்—'பிடகம்' என்பது பெட்டி அல்லது கூடை; எனவே திரிபிடகம் என்பதற்கு மூன்றுவகைப் பெட்டிகள் அல்லது கூடைகள் என்று பொருள். மூவகைப் பிடகங்கள் **விநயபிடகம், சுத்தபிடகம், அபிதம்மபிடகம்.** விநயபிடகம் பௌத்த சங்கத்தின் ஒழுக்க விதிகளைக்கூறும். சுத்தபிடகம் (சுத்த—சூத்திரம்) உபதேசங்களையும் விளக்கங்களையும் கொண்டது; அபிதம்மபிடகம் பௌத்த தருமத்தின் நுணுக்கமான பிரிவுகளைக்கூறும்,

நாடுகளிலிருந்து கிடைத்த பாலிமொழி நூல்களிலிருந்தும், வடமொழி நூல்களின் சீனமொழி பெயர்ப்புக்களிலிருந்தும் பல விஷயங்களை அறிய முடிகின்றது. புத்தர் பிறந்ததிலிருந்து, ஞானமடைந்து, பல்லாண்டுகள் சமயப் பிரசாரம் செய்து வந்த பின்பு சுமார் 25 ஆண்டுகட்டு மட்டுமே வரலாற்று விவரம் தெரியவில்லை. அதற்கும் அப்பால், அந்திய காலத்தில், அவர் நாலந்தா, பாடலி காமம் * வைசாலி, அம்பகாமம், ஜம்புகாமம், போக நகரம் முதலிய நகரங்கள், கிராமங்களின் வழியே சென்று, **பாவா** நகரில் **சந்தன்** என்னும் பொற்கொல்லன் வீட்டில் விருந்துண்டு, முடிவில் குசீ நகரை அடைந்து இவ்வுலகை நீத்து மகா-பரி-நிருவாணம் எய்தியதும், இறுதியாக அவர் சீடர்களுக்குச் செய்த உபதேசங்களும் திருமுறைகளில் 'தீக நிகாயம்' என்னும் பகுதியில் மகா-பரி-நிருவாண சூத்திரத்தில் விவரிக்கப்பெற்றிருக்கின்றன.

புத்தர் பெருமான் எந்த இடத்தில் பிறந்தார்? புத்தரின் தந்தையாரான சுத்தோதன மன்னரின் தலைநகரான கபிலவாஸ்து நகரின் அருகே, **உலும்பினித்** தோட்டத்தில் அவர் பிறந்தார். அவர் பிறந்ததால், அது உலகத்திற்கே முக்கியமான தலமாயிற்று. பல நூற்றாண்டுகளாக மக்கள் ஆயிரக்கணக்கில் அத்தலத்திற்கு யாத்திரை சென்று வழிபட்டு வந்திருப்பர். ஆனால் காலப் போக்கின் மாறுதல்களால் கபில வாஸ்து நகரும், உலும்பினித் தோட்டமும் மாறிவிட்டன. ரோகிணி நதிக்கரையிலி

---

* பிற்காலத்துப் பாடலிபுரம்.

ருந்த கபிலவாஸ்து இப்போது பாழடைந்து கிடக்கின் றது. சுதந்திர இந்தியாவின் உத்தரப்பிரதேசம் என்னும் ராஜ்யத்தில் (பழைய ஐக்கிய மாகாணம்) **பிரிட்ஜ்மாங்குஜ்** என்ற புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள **பிப்ரஹவ** என்ற நகரே கபிலவாஸ்துவாக இருந்தது. இதிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ளது உலும்பினி. இப்போது அதன் பெயர் **ரும்மின்தே** எனப்படும். இடைக்காலத்தில் உலும் பினி எங்கிருந்தது என்ற விவரமே தெரியாத முறையில், அந்தப் பிரதேசம் முழுதுமே மணல் மேடிட்டிருந்தது. புதை பொருள் ஆராய்ச்சிக்காக அங்கே மண் தோண டப்பட்ட போது, பல நூற்றுண்டுகளாக, மண்ணுள் மறைந்திருந்த ஒரு கற்றூண் அகப்பட்டது. அது இடி யால் பிளக்கப்பட்டு கீழே சாய்ந்து, பூமிக்குள்ளேயே மூடப்பட்டிருந்தது. அத்தூண் அகப்பட்ட பின்னர் அதிலே பொறிக்கப் பெற்றிருந்த மாநிலமெல்லாம் மகிழத்தக்க செய்தியொன்று தெரியவந்தது. **'ஹிதபக வம் ஜாதேதி'** ('இங்கே பகவர் பிறந்தார்') என்பதே அதிற் கண்ட வாசகம். அகிலம் புகழும் **அசோக** சக்கர வர்த்தியால் நிறுத்தப் பெற்ற தூண் அது. புத்தர் மகா-பரி-நிருவாணமடைந்து சுமார் 225 ஆண்டுகட்குப்பின்பு அரியாசனத்தமர்ந்தவர் அசோகர். சக்கரவர்த்தியாகி இருபது வருடங்களுக்குப் பின்பு அவர் புத்தரிடம் கொண்ட பக்திப் பெருங்காதலால் பௌத்தத் திருப்பதி களுக்கெல்லாம் யாத்திரை சென்றார். அப்போது நடப் பெற்ற தூணே அது. அசோகருடன் அவருடைய பௌத்த குருவான **உபகுப்தரும்** சென்றிருந்தார். உப

குப்தர், 'வணங்கத்தகுந்த புனிதர் பிறந்த இடம் இதுவே!' என்று சுட்டிக் காட்டியிருப்பார். ததாகதரின் மாட்சியை யெண்ணிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்ற அசோகர், அந்த இடத்திலே அங்கமெல்லாம் தேயும்படி வீழ்ந்து வணங்கியிருப்பார். அந்த இடம் உலகுக்கெல்லாம் விளங்கித் தெரியும்படி அவர், தமது வழக்கம்போல், அழகிய தூணொன்றை அங்கே நட்டு வைத்தார். இந்தத் தூண் அகப்பட்டிராவிட்டால், உலும்பினியையும், அங்கு மாதரசி மாயாதேவி புத்தரைப் பெற்றெடுத்த இடத்தையும் நாம் தெரிந்திருக்க முடியாது.

அசோகருக்குப் 'பிரியதரிசி'* என்றும், 'தேவனும் பிரியதரிசி'† என்றும் பட்டங்களுண்டு. 'பிரியதரிசி' என்பதைப் 'பியதாஸா' என்று சாசனங்கள் குறிக்கும். உலும்பினித் தூணிலுள்ள அசோக சாசனம் வருமாறு:

> 'மாட்சிமை தக்கிய பியதாஸ மன்னர் தமது ஆட்சியின் இருபத்தோராம் ஆண்டில் நேரில் (இங்கு) வந்து வணங்கினார். சாக்கிய முனிவர் புத்தர் இங்கே பிறந்ததால், கல்லால் குதிரையொன்று செய்து ஒரு தூணின்மேல் நிறுத்தும்படி அவர் ஏற்பாடு செய்தார். வணங்கத்தகுந்த புனிதர் பிறந்த இடமாதலால், உலும்பினிக்கிராமம் இறைவை செலுத்தவேண்டியதில்லை யென்றும் மன்னரின் தயாள தருமங்களில் அதுவும் பங்கு கொள்ளும்படியும் உத்தரவிடப் பெற்றது.'

---

* பிரியதரிசி—பார்வைக்கு இனியவர்.

† தேவனும் பிரியதரிசி—தேவர்களின் காட்சிக்கு இனியவர்.

உலும்பினியிலுள்ள பெரிய ஆலயத்தில் புத்தரின் அவதாரச் சித்திரத்தை யாத்திரிகர்கள் கண்டு வியந்து பாராட்டுகின்றனர். 'ஒரு மரத்தின் கிளையைப் பிடித்த வண்ணம் மாயாதேவி புனிதக் குழந்தையின் பக்கத்தில் நிமிர்ந்து, நின்று கொண்டிருப்பது பார்க்க ஆச்சரியமாயுள்ளது.*

இனி, புத்தர் அவதரித்த ஆண்டைக் கவனிப்போம். ஆழ்வார்கள், நாயன்மார்கள், காலங்களைப் பற்றிக் கூறுவதில் பக்தர்கள் கலியுக ஆரம்பத்தையோ, அல்லது அதற்கு முந்திய யுகங்களையோ குறிப்பிடும் வழக்கத்தைப் போல், புத்தர் காலத்தையும் பக்தர்கள் 1,000 அல்லது 2,000-ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கூறுவர். சீனுவிலும், மற்ற வெளி நாடுகளிலும் மிகமிகப் புராதனமான காலமாகவே கணக்கிட்டு எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சரித்திர ஆசிரியர்கள் தம் ஆராய்ச்சியின் மூலம் ஓரளவு உண்மையான காலத்திற்கு அருகே வந்து விட்டனர். சிலர் புத்தர் பிறந்த ஆண்டு கி. மு. 623 என்றும், சிலர் கி. மு. 563 என்றும் கூறியிருக்கின்றனர். பெரும்பாலான பௌத்தர்கள் புத்தர் இன்றைக்கு 2500 ஆண்டுகட்கு முன்பு அவதரித்தவர் என்றும், கி. பி. 1956-ஆம் ஆண்டுடன் அவர் தோன்றி இருபத்தைந்து நூற்றுண்டுகள் முடிவடைவதால் இவ்வாண்டு மிகச் சிறப்புடையது என்றும் கருதுகின்றனர். ஆயினும் சில முக்கியமான

---

* திரு. எம். ராதாகிருஷ்ண பிள்ளை

காரணங்களைக் கொண்டு கி. மு. 573-ஆம் ஆண்டே புத்தர் அவதரித்த காலமாக இருக்க வேண்டுமென்று கருதலாம், இது நுணுக்கமான ஆராய்ச்சிக்கு உரிய விஷயம்.

புத்தர் பிறந்த நாள் வைகாசி பூர்ணிமை. இருபத்தி ஒன்பதாவது வயதில் அவர் துறவு பூண்டதும் வைகாசிப் பூர்ணிமையில். ஆறு வருடம் அருந்தவஞ் செய்து, முப்பத்தைந்தாவது வயதில் அவர் ஞானமடைந்து புத்தரான நன்னாளும் வைகாசிப் பூர்ணிமை. 45 ஆண்டுகள் அவர் யாத்திரைகள் சென்று, தருமப் பிரசாரம் செய்து, கடைசியாகத் தமது எண்பதாவது வயதில் மகா—பரி—நிருவாணமடைந்ததும் வைகாசிப் பூர்ணிமையன்று. எனவே அவருடைய வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள் நான்கும் வைகாசிப் பூர்ணிமையிலேயே நடந்தேறியிருக்கின்றன. பழைய திருமுறைகளிலும், வேறு நூல்களிலும், அவர் பிறந்த ஆண்டு மட்டும் துல்லியமாகக் குறிப்பிடப்படவில்லை. கி, மு. முதலாவது நூற்றாண்டிலிருந்து ஆறாவது நூற்றாண்டுவரை எந்த ஆண்டுகளிலும் மேலே குறித்த நான்கு வைகாசிப் பூர்ணிமைகளும் ஒத்து வருகின்றனவோ, அவையே வரலாற்றுக்குப் பொருத்தமானவை. கி. மு. 623, 563 முதலிய ஆண்டுகளில் அவர் பிறந்தாரெனக் கொண்டால், இந்த நிகழ்ச்சிகள் நான்கும் பொருந்தவில்லை.

'புத்தர் பெருமானைத் தமிழிற் காட்டும் ஒரு மணி நிலையம்' என்று புகழப்பெறும் 'மணிமேகலை' புத்தர் அவ

தரித்த ஆண்டு 1616-(ஈரெண்ணூற்றிரண்டு ஈரெட்டாண்டில்) என்று கூறியுள்ளது. இவ்வாண்டு எந்த சகாப்தத்தைச் சேர்ந்தது என்பது விளங்கவில்லை. மகாமகோபாத்தியாய திரு. உ. வே. சாமிநாத ஐயரவர்கள், 'கௌதம புத்தர் பிறந்த தினம் ஈசான சகாப்தம், 68-ஆம் வருஷம், வைகாசி மாதத்திற் பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய வெள்ளிக்கிழமையென்று சொல்லுவர்'* என்று குறித்துள்ளார்கள். ஈசான சகாப்தம் எப்போது, எவர் காலத்தில் ஆரம்பித்ததென்று தெரியவில்லை.

நெல்லை ஜில்லாவைச் சேர்ந்த தமிழறிஞரும், பஞ்சாங்க கணிதத்தில் விசேஷ ஆராய்ச்சியும் அநுபவமும் பெற்ற திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், மேலே குறித்த நான்கு நிகழ்ச்சிகளையும் ஆதாரமாய்க் கொண்டு, புத்தர் காலத்தைத் தீர்மானித்து வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆராய்ச்சியின்படி தெரிந்துள்ள தேதிகளும் விவரங்களும் வருமாறு:

1. புத்தர் பிறந்த நாள்—கி. மு. 573, வைகாசி மீ, 3-ஆம் தேதி, வெள்ளிக்கிழமை, பூர்ணிமை.

2. அவர் அரண்மனையை விட்டு வனம் சென்ற நாள்—கி. மு. 545, வைகாசி மீ, 24-ஆம் தேதி வெள்ளிக்கிழமை, பூர்ணிமை.

---

* 'புத்த சரித்திரம்'

3. அவர் புத்த கயையில் போதி மரத்தடியில் ஞானமடைந்த நாள்—கி. மு. 538, வைகாசிமீ, 6-ஆம் தேதி, புதன்கிழமை, பூர்ணிமை.

4. அவர் குசிநகரில் மகா-பரி-நிருவாணமடைந்த நாள்—கி. மு. 493, வைகாசி மீ, 19-ஆம்தேதி, செவ்வாய்க்கிழமை, பூர்ணிமை.

இந்த முடிபுகளைச் சரித்திரமும், இலங்கைத் 'தீப வம்ச'மும், 'மகா வம்ச'மும் அரண் செய்கின்றன. இவைகளை ஆதாரமாகக் கொண்டால், சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர் முதலியோருடைய ஆட்சிக் காலங்களைப் பற்றியும் துல்லியமாய்க் கணக்கிட முடியும்.

புத்தரென்றால் பூரண ஞானம் பொலியப் பெற்றவர் என்று பொருள். அவரது இயற்பெயர் சித்தார்த்தர், குடும்பப் பெயர் (கோத்திரப் பெயர்) கௌதமர். தவமிருந்து பேரறிவு பெற்ற பின்பு அவர் புத்தரானார். அவர் தம்மைப் பற்றிப் பின்னால் குறிப்பிடும் போதெல்லாம் புத்தரென்றோ, ததாகதரென்றோ குறிப்பிட்டு வந்தார். 'ததாகதர்' என்றால், முன்னோர் சென்ற வழியிலே செல்பவரென்று பொருள். அவருக்கு முன்னால் பண்டைக் காலத்தில் தோன்றிய புத்தர்களைப் பின்பற்றிச் செல்பவர் அவர். புத்தர் எவரென்பதை அவரே விளக்கியுள்ளார்: 'எவரும் வெல்ல முடியாத வெற்றியை யடைந்தவர் புத்தர், இந்த உலகில் எவரும் அணுகமுடியாத வெற்றியை

யடைந்தவர் புத்தர்; அவர் எல்லையற்ற உணர்வுடையவர். (பிறப்பும் இறப்புமாகிய) பாதையற்றவர்.'*

புத்தரும் மனிதரே. எனினும், அவர் தமது பேரறிவால் உலகத்தின் இயல்பையும், பிறவியெடுத்த எல்லா உயிர்களின் இயல்பையும் உணர்ந்து, நிலையில்லாத உலகில் நிலையான இன்ப நிலையில் திளைத்துக் கொண்டிருக்கும் வழியை அறிந்திருந்தார். ஆசைக் காட்டை அடியோடு அழித்துப் பிறவிக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார். ஆகவே, மானிட உருவிலிருந்துகொண்டே அவர் அழியாத பெரு வாழ்வாகிய புத்த நிலையை அடைந்திருந்தார். குயவன் திகிரியைச் சுற்றிக் கொண்டேயிருந்து கைகளை எடுத்துவிட்ட பின்பும், திகிரி முந்திய வேகத்தால் சிறிது நேரம் சுழல்வது போலவே, அவருடைய பிந்திய வாழ்வு இருந்துவந்தது. அவித்தையாகிய பேதைமை நீங்கி, வாழவேண்டுமென்ற ஆசையும் மற்ற ஆசைகளும் அடியோடு அழிந்துவிட்ட நிலையில், அவரது உடல் பிரபஞ்சத்தின் நியதிப்படி மூப்படைந்து மாற வேண்டியது மட்டுமே எஞ்சியிருந்தது. பிறவிக்குரிய வழியை அவர் பெருங்கல்லால் அடைத்துவிட்டார். அதுவே அவரது இறுதிப் பிறவி. ஆகவே அந்நிலையில் அவர் மனிதர், தேவர், நரகர் போன்றோரின் நிலையைக் கடந்தவராய் இருந்தார். அவர்கள் அனைவருக்கும் அவரவர் செயல்களுக்குரிய கருமம் உண்டு, நன்மை தீமைகளும், இன்ப துன்பங்களும் உண்டு. புத்தர் இந்த நிலை

---

* தம்மபதம்.

களைக் கடந்திருந்தார். **துரோணர்** என்ற அந்தணருக்கும் அவருக்கும் நிகழ்ந்த இழே குறித்துள்ள உரையாடல் அவர் நிலையை நன்கு விளக்கும்:

**துரோணர் :** தாங்கள் தேவரா ?

**புத்தர் ;** இல்லை.

**துரோணர் :** தாங்கள் கந்தர்வரா ?

**புத்தர் :** இல்லை.

**துரோணர் ;** தாங்கள் இயக்கரா ?

**புத்தர் :** இல்லை.

**துரோணர் :** தாங்கள் மனிதரா ?

**புத்தர் :** நான் மனிதனல்லன்.

**துரோணர் :** (பின்னைத்) தாங்கள் யாராயிருககமுடியும் ?

**புத்தர் :** ஆசைகள் முதலிய எந்தத் தீமைகளை அழிக்காமலிருந்தால், என்னை ஒரு தேவனுகவோ, கந்தர்வனுகவோ, யட்சனுகவோ, மனிதனுகவோ தனித்துக் குறிக்கும்படி ஏற்படுமோ, அந்தத் தீய தொடர்புகளை நான் முற்றிலும் அழித்து விட்டேன். ஆதலால் அந்தண, நான் புத்தரென்று அறிவாயாக !

'ததாகதரின் இயற்கையே தருமம்—அவர் உண்மையிலேயே தருமமாயிருக்கிருர்' என்று 'அக்கண்ண சூத்திரம்' கூறுகின்றது.

மக்களின் மனமாசுகளைப் போக்கி, அறியாமை இருளை அகற்றும் பெருஞ் சோதியாக விளங்கிய ததாக தரை 'மணிமேகலை' பால சூரியனாக வருணிக்கின்றது ;

'உயிர்கள் எல்லாம் உணர்வு பாழாகிப்
பொருள் வழங்கு செவித்துளை தூர்ந்து* அறிவிழந்த
வறந்தலை உல்கத்து அரும்பாடு சிறக்கச்**
சுடர் வழக்கற்றுத் தடுமாறுகாலை*** ஓர்
இளவள ஞாயிறு**** தோன்றியது என்ன'

அவதரித்ததாகக் கூறுகின்றது.

மற்றும் பண்டைத் தமிழ் மக்கள் அவரை எப்படிப் போற்றி வந்தனர் என்பதற்கு அவர்கள் அவருக்கு அளித்துள்ள பல பெயர்களில் சிலவற்றைப் பார்த்தாலே போதும். தருமராஜன், தயாவீரன், நாதன், பகவன் நற்றவமூர்த்தி, அருங்கலை நாயகன், அருளறம் பூண்டோன், அறத்தகை முதல்வன், அறவோன், அறிவன்

---

* பொருள் வழங்கு செவித்துளை தூர்ந்து—நற்பொருளைச் செவியால் கேட்கும் திறனை இழந்து.

** வறந்தலை உலகத்து அரும்பாடு சிறக்க--அறிவில் வறுமையுற்ற உலகத்தில் தருமம் நன்கு விளங்க.

*** சுடர் வழக்கற்றுத் தடுமாறுகாலை—(சுடர்-சூரியன்) சூரியன் தோன்றாது, எப்போதும் இருள் நிறைந்து, எல்லாம் தாறுமாறாக மயங்கும்போது.

**** இளவள ஞாயிறு--பாலசூரியன்.

ஆதி முனிவன், சாந்தன், சாக்கியமுனி, புண்ணிய முதல் வன், புத்த ஞாயிறு, போதிமாதவன், மன்னுயிர் முதல் வன்' முதலிய சிந்தைக்கும் செவிக்கும் இனிய பெயர்களை அவருக்குச் சூட்டியிருக்கின்றனர். அவரை வருணிக் கையில், 'சினந்தவிர்ந்தோன்' என்றும், 'தீமொழிக்கு அடைத்த செவியோன்' என்றும் 'துறக்கம் வேண்டாத் தொல்லோன்' என்றும், 'பிறவிப்பிணி மருத்துவன்' என் றும் பலபடப் புகழ்ந்திருக்கின்றனர். இவை வெறும் புகழ் மாலைகளல்ல; பொருள் நிறைந்த இத்தகைய அடை மொழிகளுக்கெல்லாம் அவர் உரித்தானவர் என்பது சிந்திப்பார்க்கு எளிதில் விளங்கும்.

புத்தர் எல்லாச் சமயங்களையும் சமமாகக் கருதினர். எல்லா மக்களிடத்தும், ஏனைய உயிர்களிடத்தும் அவர் கருணை கொண்டிருந்தார். சத்தியம், அஹிம்சை, ஈகை, இரக்கம் முதலிய பண்புப் பயிர்கள் மக்களிடையே பெருகி வளர அவர் மழையாக வந்து உதவினர். ஒவ் வொரு தனி மனிதனும், பெண்ணும், கட்டுப்பாட்டுடன் தன்னைத் தான் அடக்கிக்கொண்டு, நியமத்தோடு வாழ வேண்டும் என்பதை அவர் வாழ்நாள் முழுதும் வற் புறுத்திக்கொண்டேயிருந்தார். தனி மனிதர்களின் ஒழுக் கமே சமுதாய ஒழுக்கமாக மலரும். 'தம்மபத'த்தில் அவர் கூறியுள்ள இவ்வாக்கியங்கள் மனிதன் உண்மை யான இன்பத்திற்குரிய திறவுகோலைத் தன் வசமே பெற் றிருக்கிறன் என்பதை அறிவுறுத்துகின்றன:

'ஒருவன் தானுகவே பாவம் செய்கிறுன், தானே தனக்குக் கேடு தேடுகிறுன். ஒருவன் தானுகவே பாவத்தை விலக்குகிறுன், தானே தன்னைப் புனிதமாக்கு கிறுன். சுத்தமும் அசுத்தமும் அவன் செயலே. எவனும் பிறனைப் புனிதமாக்குவதில்லை.'

'விழித்தெழுக ! கருத்தில்லாமல் இருக்கவேண்டாம். தரும ஒழுக்கத்தைக் கடைப்பிடி. தரும வழியில் நடப்ப வனுக்கு இகத்திலும் சுகம், பரத்திலும் சுகம்.'

'பாவத்தை நல்வினையால் மறைக்கும் ஒருவன், மேகத் திலிருந்து விடுபட்ட சந்திரனைப் போல், இந்த உலகை ஒளிபெறச் செய்கிறுன்.'

அவரைக் கண்டவர்கள் காதலிப்பார்கள், அவரு டைய சொற்களைக் கேட்பவர்கள் செவியே வாயாகப் பருகுவார்கள், பின்பு அவரைப் பிரியவே மாட்டார்கள். அத்தகைய கம்பீரத் தோற்றமும், அழகும், அமுதம் போன்ற இன்சொல்லும் அவருக்கு வாய்த்திருந்தன. எல்லா வரலாறுகளும் அவர் குரலினிமையை வற்புறுத்தி எடுத்துக் காட்டுகின்றன. பட்ட மரமும் தளிர்த்துப் பசுமையாகும்படி இசை வெள்ளமாயிருந்தன அவர் உரைகள். அவர் சத்தியத்தின் சங்கொலி, சாந்தி பொழி யும் வான்முகில். அண்டினேரைப் புனிதமாக்கும் ஆற் றல் அவருக்கு இருந்தது. நாடு நகரை யெல்லாம் துறந்து, கையில் திருவோடெடுத்து அலைந்து கொண்டிருந்த அத் துறவி தங்கியிருந்த ஆராமங்களிலே அரண்மனைகளைப் பார்க்கிலும் அதிக ஜனக் கூட்டம் இருந்து வந்தது.

அறிவாளர் உள்ளங்களை அவருடைய அற உரைகள் கவர்ந்தன; ஆயிரக்கணக்கான பாமர மக்களும் அவரிடம் பக்தி பூண்டு அவரையே சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

அவரை எப்படியாவது கபிலவாஸ்துவுக்கு அழைத்து வந்து தம் கண்ணால் ஒரு முறை காணவேண்டு மென்று அவர் தந்தை விரும்பினார். அதற்காக எத்தனையோ தூதர்களை அனுப்பினார், மந்திரிகளை அனுப்பினார். சென்றவர் எவரும் தலைநகருக்குப் மீளவேயில்லை. படாடோபத்துடன் சென்றவர்கள் புத்தரின் பாதத்தடியில் அமர்ந்து பாடங் கேட்டுக் கொண்டிருந்தனர். அவரை அழைத்துவரச் சென்ற மந்திரிகள், தலைகளை முண்டிதம் செய்துகொண்டு, குதிரைகள் வாங்கச் சென்ற மணிவாசகப் பெருமானைப் போல, மரங்களின் நிழலில் தியானம் செய்து கொண்டிருந்தனர். கடைசியாக மன்னர் சுத்தோதனர் புத்தரின் தோழனை **உதாயி** என்பவனை அனுப்பினார். அவன் அவர் முன்பு செல்லு முன்பே, அவருடைய நல்லுரைகள் செவிகளிற் புகாதவாறு இரு செவிகளிலும் நன்ருகப் பஞ்சை வைத்து அடைத்துக் கொண்டான். அதனால் அவன் மட்டுமே மன்னருடைய செய்தியை அவருக்கு அறிவிக்க முடிந்தது! அவ்வளவு வசீகர சக்தியை அவருடைய வாய்மொழி பெற்றிருந்தது !

புத்தியால் எதையும் பரிசீலனை செய்தே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று புத்தர் போதித்து வந்த போதிலும், தத்துவ நூல் ஆராய்ச்சிகளை அவர் ஆதரிக்க

வில்லை. விவாதம், விவாதமென்று, இருக்கிற சொற்ப வாழ்நாளையும் தருக்கத்திலும் தத்துவ ஆராய்ச்சியிலுமே கழித்துக் கொண்டிருந்தால், வாழ்க்கையில் எதையும் செய்ய முடியாமற் போகும். எளிதிற் கண்டு பிடித்த உண்மைகளைக் கடைப்பிடிக்க முடியாமல், வாழ்நாள் முழுதுமே உண்மையைத் தேடிக் கொண்டிருத்தல் வாழ்க்கையை வீணாக்குவதாகுமென்று அவர் கருதினர். அறிவுக்கு எட்டாத விஷயங்களைப் பற்றி அவரிடம் கேட்டால், அவர் பதில் சொல்வதில்லை. ஆன்மா, பரமான்மா, மரணத்தின் பின் மனிதர் நிலை முதலிய விஷயங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்டால், அவர் அவையெல்லாம் அறிவுப் பெருக்கத்திற்கோ, ஒழுக்க வளர்ச்சிக்கோ உகந்த கேள்விகளாயில்லை யென்று ஒதுக்கிவிடுவது வழக்கம். மேலும் அவர் காலத்தில் நிகழ்ந்து வந்த முடிவில்லாத விவாதங்களின் நடுவே, அவர் கற்பனைக் கனவுகளில் தாம் மனத்தைச் செலுத்தாமலும், மற்றவர்கள் அவ்வழியே திரும்பாமலும் கவனித்து வந்தார். உமியைக் குற்றினல் கைதான் சலிக்கும்; தத்துவப் போர்களின் முடிவும் இதுபோல் தான்,

'குருடும் குருடும்
குருட்டாட்ட மாடிக்
குருடும் குருடும்
குழிவிழு மாறே'

என்பது போல் ஒருவரும் காணுத மெய்ப் பொருளைப் பற்றி வீண் விசாரணைகள் செய்ய அவர் விரும்பவில்லை.

கண் முன்புள்ள வாழ்க்கையைக் கவனித்தலே அவருக்கு முதல் வேலையாகத் தோன்றிற்று. அவரே உபதேசித்த அருமையான தத்துவங்களைப் பற்றிக் கூறுகையிலும், அவை நதியைக் கடத்தற்கு உதவியான ஓடமென்றும், கடந்து அக்கரை சேர்ந்த பின்பும் ஓடத்தைத் தலையிலே தூக்கி வைத்துக்கொண்டு செல்வது பரிகாசத்திற்கு இடமாகு மென்றும் கூறிவந்தார்.

புத்தர் மனிதனைப் பாவியாகவோ, தெய்வமாகவோ கருதாமல், மனிதனாகவே கருதி ஆராய்ந்து பார்த்தார். இது எளிதென்று தோன்றும். ஆயினும் மற்றும் பல மேதாவிகள் இவ்வாறு பார்ப்பதில்லை. அவர்களுடைய ஆராய்ச்சிகளில், பிரத்தியட்ச உண்மைகள் மறைந்து, வெறுந் தத்துவக் குவியல்களே மிஞ்சுவது வழக்கம். மனிதன் உண்மையை உணரமுடியாமல் தடுப்பது எது என்பதை அறிந்து, அவன் கண்ணை மறைக்கும் அந்த அஞ்ஞானத் திரையை அகற்றுவதையே தமது முறையாகக் கொண்டிருந்தார் புத்தர். பேதைமை அகன்றதும், மனிதனின் மனக் கோணல்கள் நிமிர்ந்து நேராகி விடும்; உண்மை அவனுக்கு விளங்கிவிடும். 'தேரி காதை'* என்ற நூலில் ஒரு ஸ்திரீயைப் பற்றிக் கூறப்

---

* தேரிகாதை—பௌத்த பிக்குணிகளின் பாடல்கள் அடங்கிய நூல்; பிக்குகள் பாடிய பாடல்களின் தொகுதி 'தேரகாதை' எனப்படும். இவை யிரண்டும் பௌத்தத் திருமுறைகளைச் சேர்ந்தவை.

தேரர்—மூத்தவரான பிக்கு; தேரி—மூத்தவரான பிக்குணி,

பட்டிருக்கிறது. அவர்களுடைய கணவன் ஒரு கூனன். அவள் அரிசி குற்றிக் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு தானும் உண்டு கணவனையும் பராமரித்து வந்தாள். பின்னுல் போதிவேந்தரின் பௌத்த தருமத்தை அவள் மேற்கொண்டதும், 'உரல், உலக்கை, என் கூனற் கணவன் ஆகிய மூன்று கோணல்களும் என்னை விட்டு ஒழிந்தன!' என்று ஆனந்தத்தோடு கூறினுள். இவளைப் போலவே ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் மனக் கோணல்களாகிய வாழ்வின் கோணல்களை நிமிர்த்துவதற்காகவே புத்தரை எதிர்பார்த்துக் கூடி வந்தார்கள்.

உலகில் மெஞ்ஞானம் பெற்று மக்கள் தங்கள் வாழ்வின் இலட்சியத்தை அடைவதற்கு அறிஞர்கள் காட்டி வந்த வழிகள் மூன்று வகையானவை. இவைகளை, 'மேற்பாதை', 'நடுப்பாதை', 'அடிப்பாதை' என்ற மூன்று பாதைகளாக **ஆல்டஸ் ஹக்ஸ்லி** குறிப்பிடுகிறுர்.

இவைகளில் மேற்பாதையிலே செல்வோர் தத்துவ ஆராய்ச்சியின் மூலம் உண்மையை நாடுவர். ஆழ்ந்த சிந்தனையாலும், தியானத்தாலும் காணும் விஷயங்களிலிருந்து, இவர் தம் யூகத்தினுல், எவை, எப்படியிருக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து கூறுவர்.

நடுப்பாதையிலுள்ளோர், காரண—காரிய ஆராய்ச்சி செய்துகொண்டிராமல், சாந்தமாகவும், மௌனமாகவும், மனுேதருமத்தால் உண்மை விஷயங்களை ஊடுருவிப் பார்க்க முயல்வர். இவர்கள் ஞானரதத்திலே ஆகாய

வீதியில் சஞ்சரிப்பார்கள். சில யோகிகள், இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்த ஸூபிகள் முதலியோர் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சாதாரண மக்களின் திட்டங்கள், முறைகளுக்கு அப்பாலிருந்துகொண்டு, தத்துவ ஆராய்ச்சியிலும் தலையிடாமல், கனவு கண்டு கொண்டிருப்பர்.

அடிப்பாதையில் செல்வோர், தத்துவப் போர்களை ஒதுக்கிவிட்டு, வான மண்டலத்திலே ஞானரதத்தில் சுற்றிக்கொண்டிராமல் பூமியில் கண்முன்பு காணும் பொருள்களையும் காரியங்களையும் கொண்டு, வாழ்க்கைக்குத் திட்டம் வகுத்துக் கூறுவர். இன்று, இப்போது, என்ன செய்யவேண்டும் என்பதே அவர்கள் கருத்தாயிருக்கும். மக்களின் உள்ளங்களில் பற்றியெரியும் அவா, அழுக்காறு, பேராசை, கவலை, காமக்குரோதங்கள் முதலிய நெருப்புக்களை அணைத்து, ஒழுக்கத்தைப் போதிப்பதிலேயே அவர்கள் நாட்டம் செலுத்துவார்கள். இந்தக் கடைசி வழியான அடிப்பாதையையே கௌதம புத்தர் மேற்கொண்டார். மற்றையோர்கள் எவ்வளவு உயரே பறந்துகொண்டிருந்தபோதிலும், அவர் இந்தப்பாதையை விட்டு வேறு திசையில் திரும்பிப் பார்க்கவும் மறுத்து விட்டார்; ஆயுள் முழுதும் ஒரே நிலையாக அதிலேயே சென்றுகொண்டிருந்தார்.

சிந்தனைக்கும் செயலுக்கும் உரிய விஷயங்களைப் பற்றியே புத்தர் சொல்லிவந்தார். அவருடைய தருமம் எவ்வளவு எளிதாக எவரும் புரிந்துகொள்ளத்தக்க முறை

யிலிருந்தது என்பதைக் கீழ்க்கண்ட வினா-விடை இனிது விளக்கும். இது புத்த பகவருக்கும் வேதியர் உருவில் வந்த ஒரு தேவனுக்கும் சிராவஸ்தி நகரில் ஜேத வனத்தில் நிகழ்ந்ததாக குறிக்கப்பெற்றுள்ளதன் சுருக்கம் :

**தேவன் :** நிகரற்ற கூர்மையுள்ள வாள் எது?

**புத்தர் :** கோபத்திலே பேசிய சொல்.

**தேவன் :** நிகரற்ற கொடிய விஷம் எது ?

**புத்தர் :** பேராசை,

**தேவன் :** நிகரற்ற கொடிய நெருப்பு எது ?

**புத்தர் :** காம(ஆசை) உணர்ச்சி.

**தேவன் :** நிகரற்ற இருளடர்ந்த இரவு எது ?

**புத்தர் :** பேதைமை.

**தேவன் :** நிகரற்ற நன்மை அடைபவன் எவன் ?

**புத்தர் :** மற்றவர்களுக்குத் தானம் செய்பவன்.

**தேவன் :** எவன் மிக அதிகமாக இழப்பவன் ?

**புத்தர் :** பதிலுக்கு உபகாரம் செய்யாமல், மற்றவர்களிடமிருந்து உதவிகள் பெறுவோனே மிக அதிகமாக இழப்பவன்,

**தேவன் :** எந்தக் கவசம் துளைக்க முடியாதது ?

**புத்தர் :** பொறுமை,

தேவன் : தலை சிறந்த ஆயுதம் எது ?

புத்தர் : ஞானம்.

தேவன் : மிகவும் அபாயகரமான கள்வன் எவன் ?

புத்தர் : எண்ணம்.

தேவன் : தலை சிறந்த பொக்கிஷம் எது ?

புத்தர் : ஒழுக்கம்.

தேவன் : பூமியில் மட்டுமின்றி சுவர்க்கத்திலும் பல வந்தமாகப் பறித்துக்கொள்ளும் தலைசிறந்த ஆற்றலுள்ளது எது ?

புத்தர் : ஆன்மா.

தேவன் : நிலையான புதையல் எது ?

புத்தர் : அமரத்துவம்.

தேவன் : எது அருவருப்பானது ?

புத்தர் : தீமை.

தேவன் : எது கவர்ச்சியுள்ளது ?

புத்தர் : நன்மை.

தேவன் : நிகரற்ற கொடிய வேதனை எது ?

புத்தர் : தீய மனச்சாட்சி.

தேவன் : நிகரற்ற இன்பம் எது ?

**புத்தர் :** விடுதலையே பேரின்பம்.

**தேவன் :** உலகின் அழிவுக்குக் காரணமானது எது ?

**புத்தர் :** பேதைமை.

**தேவன் :** நட்பு முறைகளை உடைப்பது எது ?

**புத்தர் :** பொறாமையும், சுயநலமும்.

**தேவன் :** மிகக் கொடிய காய்ச்சல் எது ?

**புத்தர் :** துவேஷம்.

**தேவன் :** தலைசிறந்த மருத்துவர் யார் ?

**புத்தர் :** புத்தர்.

**தேவன் :** நெருப்பிலே வேகாததும், நீரில் கரையாததும், காற்றில் சிதையாததும் உலகம் முழுவதையும் சீர்திருத்துவதும் எது ?

**புத்தர் :** நல்வினையின்பம் ! நெருப்பும் நீரும் ஒரு நற் செயல் விளைவிக்கும் இதத்தை (இன்பத்தை) அழிக்க முடியாது, அது அனைத்துலகையும் சீர்திருத்தும்.

உலகில் 'பிறத்தலும், மூத்தலும், பிணிபட்டு இரங்கலும், இறத்தலும்' ஆகிய எல்லாம் துக்கமயமாக இருப்பதைப் புத்தர் பார்த்தார். 29 வயது வரை கற்கவேண்டியவை அனைத்தையும் கற்று, துய்க்கவேண்டிய இன்பங்களனைத்தையும் துய்த்து வந்தவர், துக்கத்தைத் தவிர

உலகில் வேறு எதுவுமில்லையென்று கண்டார்; இன்பமாகத் தோன்றியவைகளும் துக்கத்தின் தோற்றங்களே யென்று உணர்ந்தார். ஆறு வருடம் அடவியிலே தங்கித் தவம் செய்து பார்த்தார். முடிவில் வைராக்கியத்தோடு உண்மையை அறிந்தாலொழிய எழுவதில்லை யென்று ஓர் அரச மரத்தடியில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். ஞானம் உதயமாயிற்று. துக்கத்தைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் புலனாயின. அதன் காரணம், அதை நீக்குதல், அதை நீக்கும்வழி ஆகியவை புலனாயின. இவற்றையே அவர் உலகுக்கு வெளியிட்டார். இவற்றைத் **துக்கம், துக்க காரணம, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம்** ஆகிய நான்கு வாய்மைகள் என்று அவர் குறிப்பிட்டார்.

துக்கம் என்ற நோயின் காரணம் யாது? மனிதனின் தன்மைகளையெல்லாம் சாரமாகப் பிழிந்து பார்த்தால், 'இது வேண்டும், அது வேண்டும்' என்ற ஆயிரக்கணக்கான தேவைகள் அவனுக்கு இருப்பதைக் காணலாம். முதலில் 'நான்' என்ற அகத்தைப் படைத்துக் கொள்கிறான். அந்த 'நான்' எத்தனையோ தேவைகளுள்ளது. வாழ வேண்டுமென்ற ஆசை முதலாக, அதன் சுயநலமான ஆசைகளும் வெறுப்புக்களும் (இராகத் துவேஷங்களும்) அளவற்றவை ஆசைகள் காரணமாகவே துக்கம் வந்து சேருகின்றது.

முதலில் 'நான்' என்ற ஆணவம் எத்தன்மையது என்பதைப் பார்ப்போம். உலகில் எந்தப் பொருளாவது

நிலையாக இருக்கிறதா? இல்லை, ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே யிருக்கிறது. தோற்றமும் மாற்றமும் மாறி மாறி நிகழ்ந்து கொண்டே யிருக்கின்றன. அழிவு, அல்லது மரணம் என்பதும் ஒரு மாற்றமே—ஒன்று, வேறொன்றாக மாறுகிறது. மரணத்தில் நமக்கு விளங்காத பெரும் மாறுதல் ஏற்படுகிறது. ஜீவன்களின் தோற்றத்திலிருந்து மரணம்வரை, மாறுதல் நிகழ்ந்து கொண்டே யிருக்கிறது. மனிதனின் உடலை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு கணத்திலும் அதிலுள்ள பழைய அணுக்கள் அழிந்து, புது அணுக்கள் தோன்றிக்கொண்டே யிருக்கின்றன. தோல், எலும்பு, சதை, உதிரம் எல்லாம் மாறிக்கொண்டே யிருக்கின்றன. நேற்றிருந்த உடல் இன்றில்லை, சென்ற கணத்திலிருந்த உடல் இந்தக் கணத்திலில்லை. மனிதன் குழந்தையாயிருந்து, பாலனாகி, மனிதனாகிறான். குழந்தை, பாலன், மனிதன்—மூவரும் ஒரே நபர்தானா? மூன்று பருவங்களிலும் ஒரே நபராக விளங்கியதாக நாம் கருதுகிறோம். இது நம் கருத்துப் பிழை. குழந்தை அழிந்து பாலன், பாலன் அழிந்து மனிதன் வருகிறான். மூன்று நிலைகளிலும் உருவம், குணங்கள், அறிவு, செயல்கள், யாவும் மாறிவிடுகின்றன. ஒவ்வொரு நிலையும் ஒரு புதுப் பிறப்பு. குழந்தைக்கும் பாலனுக்கும், பாலனுக்கும் மனிதனுக்கும் சம்பந்தமேயில்லை என்பது உற்றுப் பார்த்தால் விளங்கும். ஆனால் ஒரே குழந்தை வளர்ந்து முதிர்ந்து மனிதனாக இருப்பதாகத்தானே தோன்றுகிறது! அத்தோற்றத்தின் காரணம் மாறுதல்களின் தொடர்ச்சி.

ஒன்றிலிருந்து மற்றொன்று, அதிலிருந்து வேறொன்று என்று தொடர்ச்சியாக மாறிக்கொண்டே யிருப்பதைக் காணும்போது, நாம் ஒரே உருவம் மாறிக்கொண்டே வருவதாக எண்ணுகிறோம்.

ஓர் ஆற்றைப் பார்த்தால், நேற்றிருந்த ஆறே இன்றும் இருப்பதாகத் தோன்றுகிறது. நேற்றிருந்த தண்ணீரில் ஒரு துளியாவது இன்றில்லை யெனினும், நம் கருத்தில் அது நேற்றைய ஆறாகவே தோன்றுகிறது. ஒரு தீபம் எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தால், ஒரே சுடர் எரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றும். ஒரு கணத்திலுள்ள சுடரா மறு கணத்தில் இருக்கிறது? இல்லை; எனினும் சுடர் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து எரிவதால், எல்லாச் சுடர்களும் ஒன்றாகவே தோன்றுகின்றன. ஒரு தீபத்தின் சுடரால் மற்றொரு தீபத்தில் சுடரை ஏற்றி வைப்போம். இந்த இரு சுடர்களும் ஒன்றுதானா? ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றியிருப்பினும், இரண்டும் வெவ்வேறு சுடர்களல்லவா? இத்தகைய உபமானங்கள் பலவற்றைப் புத்தர் பெருமானே எடுத்துக் காட்டியிருக்கிறார். இவற்றால் மாற்றமே உலகின் இயற்கை யென்று தெளிவாகிறது. உலகில் 'பொருள்' என்று சொல்லும்படி நிலைத்துள்ளது எதுவுமில்லை. எதிலும் மாற்றமே நிகழ்ந்து வருகிறது; அதாவது ஒன்றிலிருந்து ஒன்றாக மாறிச் செல்லும் இயக்கமே உலகமெங்கும் இருந்து வருகிறது. இந்த இயக்கத்திற்கு இடையிலே ஏதாவது ஓய்வு இருக்கிறதா? இல்லை. ஓய்

வொழிவில்லாமல் அது இயங்கிக்கொண்டே யிருக்கின்றது.

எதையுமே முற்ற முடிந்த பொருளென்று குறிக்க முடியாத நிலையிலிருக்கும் போது, மனிதன் மட்டும்தான் நெடுநாள் நிலையாக இருப்பதாக எண்ணிக்கொண்டு, 'நான்' என்றும், 'எனது' என்றும் கற்பித்துக்கொண்டேயிருக்கிறான். அவனது வாழ்வு என்பது என்ன? அவன் சிந்தனா சக்தியுள்ளவன். அவனது சிந்தனையே வாழ்வின் சின்னம். மனத்தில் ஒரு கருத்து ஏற்படும்போதுதான் அவன் வாழ்கிறான். அந்தக் கருத்து முடிந்ததும், அவன் மாள்கிறான். மறுபடி ஒரு கருத்து முளைத்ததும் அவன் வாழ்கிறான், மறுபடி மரணம். பௌத்த சமயத்தில் இதற்கு உதாரணமாக வண்டிச் சக்கரம் கூறப்படுகிறது. சக்கரம் சுற்றுவதாலேயே வண்டி ஓடுகிறது. ஆனால் முழுச் சக்கரமும் எப்பொழுதாவது சுற்றுகிறதா? சக்கரத்தின் ஒரு சிறு பாகமே எப்போதும் தரையில் படுகிறது. மற்றப் பெரும்பகுதி தரைக்கு மேலேயே யிருக்கிறது. இப்படிப் பல பகுதிகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோய்ந்து செல்வதைப் பார்த்துச் சக்கரமே சுழல்வதாயும், வண்டி ஓடுவதாயும் சொல்கிறோம்.

வித்து, செடி, மரம்—இவை மூன்றும் ஒரே பொருளா? வித்திலிருந்து செடி வந்தது உண்மைதான், மரத்திற்குக் காரணமான உதவியாயிருந்தது வித்துத்தான். எனினும் மூன்றையும் ஒன்றாகக் கருத முடியாதல்லவா? இவைகளைப் போலவேதான் மனிதன் வாழ்வும்.

அவன் மனத்தில் மாறி மாறிச் சிந்தனைகள் தொடர்ச்சியாகத் தோன்றிக் கொண்டே யிருக்கின்றன. ஒவ்வொரு சிந்தனையும் நிகழும் காலத்தின் அளவே அவன் வாழ்கிறான்.

'கழிந்து போன கணத்தில் ஒரு சிந்தனையைப் பெற்றிருந்த ஜீவன் **வாழ்ந்திருந்தது**, ஆனால் இப்போது வாழவில்லை, இனியும் வாழாது.

'இனி வரப்போகும் கணத்தில் ஒரு சிந்தனையைப் பெறக்கூடிய ஜீவன் **இனி வாழும்**, ஆனால் முன்னால் வாழ்ந்திருக்கவில்லை, இப்போதும் வாழவில்லை.

இப்போது நிகழும் கணத்தில் ஒரு சிந்தனையைப் பெற்றுள்ள ஜீவன் **இப்போது, வாழ்கிறது**, ஆனால் முன்னால் வாழ்ந்திருக்கவில்லை, இனியும் வாழாது.

என்று 'விசுத்தி மார்க்கம்' என்ற விழுமிய நூல் எடுத்துரைக்கின்றது. சிந்தனையே வாழ்க்கை; சிந்தனையற்ற நிலையில் மனிதன் வாழவில்லை.

எனவே, கருவிலிருந்து கிழவன் வரை, ஒரே மனிதனாக நாம் காண்பது உண்மையில்லை, பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை ஒரே தொடர்ச்சியாக நாம் கருதுகிறோம். ஆகையால் மனிதன் வாழ்வு கருத்துக்களின் தொடர்ச்சியாகவே உள்ளது.

இனி, புத்தருடைய கருத்துப்படி சேதனமுள்ள ஜீவன்கள்—அறிவுள்ள பிராணிகள்—எவைகளின் சேர்க்

கையால் உண்டாகின்றன என்பதைப் பார்ப்போம். இவை ஐந்து கந்தகங்களின் சேர்க்கையால் உண்டாகின்றன. அவையாவன: 1) உருவு, 2) நுகர்ச்சி, 3) குறி, 4) பாவனை, 5) உள்ள அறிவு (ரூபம், வேதனை ஸம்ஜ்ஞை, ஸமஸ்காரம், விஞ்ஞானம் என்று ஐந்து ஸ்கந்தகங்கள்). *

---

* 1. **உருவு (ரூபம்)**: மண், காற்று, தீ, நீர் ஆகிய நான்கு பூதங்களும், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், ஆண்மை பெண்மையாகிய வித்தியாசங்களும், ஆக 28 தத்துவங்கள் சேர்ந்து உருவம் ஏற்படுகிறது. உருவு என்பதை உடலுக்குக் காரணமான சதை போன்ற மூலப் பொருளாகக் கொள்ளவேண்டும்.

2. **நுகர்ச்சி (வேதனை)**: பொறிகளுக்கும் புலன்களுக்குமுள்ள சம்பந்தத்தினால் ஏற்படும் உணர்வு. பௌத்தர்கள் ஐம்பொறிகளோடு மனத்தையும் ஆறாவதாகச் சேர்த்துக் கூறுவர். ஆறு பொறிகளின் வழியே வரும் உணர்வும் ஆறு வகைப்படும்.

3. **குறி (ஸம்ஜ்ஞை)**; ஆறு பொறிகளால் உண்டாகிற ஆறுவகை உணர்வுடனும் தொடர்புற்றுப் பெறும் அறிவினால் பொருள்களைப் பாகுபடுத்தி அறியக்கூடிய ஞானம்.

4. **பாவனை (ஸம்ஸ்காரம்)**: மனம், மொழி, மெய்கள் இயற்றும் தொழில்களால் அவைகளுக்கு ஏற்படும் குணங்கள்.

5. **உள்ள அறிவு (விஞ்ஞானம்)**: அறிவுக்கு ஆதாரமாயுள்ள நுண்ணறிவு.

மேலே விவரித்துள்ள ஐந்து கந்தங்களின் சேர்க்கையே மனிதன். மரணத்தில் இந்த ஐந்து கந்தங்களும் பிரிந்து விடுகின்றன,

இந்தக் கந்தங்கள் ஒன்று சேர்ந்து பிறவியெடுப்பதற்குக் காரணங்களாயிருப்பவை எவை? அவைகள் பன்னிரண்டு நிதானங்கள் (தத்துவங்கள் அல்லது சார்புகள்) என்று வகுக்கப் பெற்றிருக்கின்றன. அவையாவன : **பேதைமை, செய்கை, உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத்தொகுதி, தோற்றம், வினைப்பயன்** *

---

* நிதானங்கள் பன்னிரண்டின் விவரம் :

1. **பேதைமை (அவித்தை)** : அறியாமை ; முயலுக்குக் கொம்பு இருப்பதாக எண்ணி, அதைத்தேடுவது போன்ற மயக்கம்.

2. **செய்கை (ஸம்ஸ்காரங்கள்)** : நல்வினையும் தீவினையும்; இவை கருமத்தை உண்டாக்குபவை.

3. **உணர்ச்சி (விஞ்ஞானம்)** : இது பிரதிக்ஞை, தூங்கும் பொழுதும் தெளிவாயில்லாமல் உள்ளடங்கியிருக்கும் நுண்ணறிவு.

4. **அருவுரு (நாம ரூபங்கள்)** : உணர்ச்சி சார்ந்த உயிரும், உடம்பும் : இது மன நிகழ்ச்சிகளையும், தூல உடலையும் குறிக்கும்.

5. **வாயில் (ஷடாயதனங்கள்)** : ஐம் பொறிகளோடு மனத்தையும் சேர்த்து ஆறு பொறிகள்.

'பேதைமை, செய்கை, உணர்வே, அருவுரு,
வாயில், ஊறே, நுகர்வே, வேட்கை,
பற்றே, பவமே, தோற்றம், வினைப்பயன்'*

வாழ்க்கையின் துன்பத்திற்கு மூல காரணம் பிறப்பு. பிறப்புக்குக் காரணம் மேற்கண்ட சார்புகள். இந்தச் சார்புகளை அறுத்து நீக்கிவிட்டதால், பிறப்புமில்லை, இறப்புமில்லை. பிறப்பு இறப்பற்ற இன்பமே நிருவாண

---

* 'மணிமேகலை'

---

6. ஊறு (ஸ்பரிசம்): உள்ளமும், மற்றப் பொறிகளும் உலகப் பொருள்களோடு சம்பந்தப்படுதல்.

7. நுகர்ச்சி (வேதனை): உணர்வானது புலன்களை நுகர்வதால் ஏற்படுவது; ஆறு புலன்களின்மூலம் புறஉலக சம்பந்தம் ஏற்படுவதால் தோன்றும் உணர்ச்சிகளின் தொகுதி.

8. வேட்கை (திருஷ்ணை): நுகர்ச்சியை விரும்பி, அது நிரம்பாமல் மேலும் மேலும் விருப்ப மடைதல்; புலன்களின் மூலம் இன்பத்தை நாடிக்கொண்டிருத்தல்.

9. பற்று (உபாதானம்): ஒட்டிய அறிவு; இது தவறான கொள்கைகளைப் பற்றிக் கொள்ளக்கூடியது.

10. கருமத் தொகுதி (பவம்): பிறப்புக்கு மூலமான கருமங்களின் தொகுதி.

11. தோற்றம் (பிறப்பு): ஐந்து கந்தங்களும் சேர்ந்து, காரண காரியத் தொடர்புள்ள புது உருவங்களில் பிறத்தல்.

12. வினைப்பயன் (பிணி, மூப்பு, சாக்காடு): பலவகைத் துன்பங்களும், முடிவில் மரணமும்.

முக்தி. இந்தச் சார்புகள் ஒன்றையொன்று பற்றிக் கொண்டிருப்பவை. இவைகளின் தொடர்பை அறிந்து, மூலமானதை அறுத்தொழித்தால்தான் பிறவா இன்பம் கிடைக்கும்.

'பேதைமை மீளச் செய்கை மீளும்,
செய்கை மீள உணர்ச்சி மீளும்,
உணர்ச்சி மீள அருவுரு மீளும்,
அருவுரு மீள வாயில் மீளும்,
வாயில் மீள ஊறு மீளும்,
ஊறு மீள நுகர்ச்சி மீளும்,
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்,
வேட்கை மீளப் பற்று மீளும்,
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளும், கருமத்தொகுதி மீளத்
தோற்ற(ம்) மீளும், தோற்ற(ம்) மீளப்
பிறப்பு மீளும், பிறப்புப் பிணி மூப்புச்
சாக்கா(டு) அவல(ம்) அரற்றுக்கவலை
கையா(று) என்றிக் கடையி(ன்) துன்பம்
எல்லா(ம்) மீளு(ம்) இவ்வகையான் மீட்சி'*

அவா அல்லது ஆசையை முற்றுங் களைந்து துறந்து விட்டால், பேதைமை போகும்; பேதைமை போனால், செய்கை போகும். இவ்வாறே ஒன்றைத் தொடர்ந்து

---

* "மணிமேகலை"

ஒன்றுக, மற்றச் சார்புகளும் கெட்டொழிந்து, வினைப் பயனுக வரும் பிணி, மூப்பு, சாக்காடுகளும் நீங்கும். ஆகவே மீட்சிக்கு வழி அவா (திருஷ்ணை) என்பதை அறவே அழித்தல்.

உலக வாழ்க்கை துக்கம்; துக்க உற்பத்தி பிறப்பினுலும், பன்னிரண்டு நிதானங்களாலும் ஏற்படுகிறது; துக்க நோயை நீக்குவதற்கு அவா அல்லது ஆசையை வேரோடு நீக்கவேண்டும் என்ற விஷயங்களை மேலே பார்த்தோம். ஆசையை நீக்குவதற்கு வழி அல்லது மார்க்கம் எது? 'அஷ்டாங்க மார்க்கம்' என்ற எட்டு அங்கங்களுடைய வழியைப் புத்தர் காட்டியுள்ளார். அந்த எட்டு அங்கங்களையும் முறையாக நிறைவேற்றிச் சென்ருல் துக்கம் நீங்கி, மீட்சி, வீடு, விடுதலை, விமுக்தி, மோட்சம், பேரின்பம் என்று பல பெயர்களால் கூறப்படும் நிருவாணத்தை அடையலாம். பௌத்த தருமப் பயிற்சிக்கு இந்த அஷ்டாங்க மார்க்கமே அடிப்படை

**நற்காட்சி, நல்லூற்றம். நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்லூக்கம், நற்கடைப்பிடி, நல்லமைதி ஆகிய எட்டு உறுப்புக்களே அஷ்டாங்க மார்க்கம்.** †

---

† நற்காட்சி: துக்கம் முதலிய நான்கு வாய்மைகளையும் உணர்தல், பாவ புண்ணியங்களைப் பகுத்தறிதல், உலகின் நிலையாமையைக் கண்டு, உண்மைப் பொருளை நாடி அறிதல்.

நல்லூற்றம்: அவாவை அறுத்து, துவேஷம், கொடுமை முதலியவற்றிலிருந்து மனத்தைப் பாதுகாத்தல்.

நல்வாய்மை: பொய், புறங்கூறல், இன்னுச் சொல், வீண்

துக்கம் பற்றிய நான்கு வாய்மைகளையும், துக்கத்தை நீக்கும் வழியாகிய அஷ்டாங்க மார்க்கத்தையும் புத்தர் மக்கள் அனைவருக்கும் உபதேசித்து வந்தார். ஆனால் கோடிக்கணக்கான மக்கள் — வாழ்வின் பல படிகளிலுள்ள மக்கள்—யாவரும், ஆசைகளை அறவே களைந்து,

---

பேச்சு முதலியவற்றை நீக்கி வாய்மை, அடக்கம், இன் சொல், பயனுள்ள அற ஆராய்ச்சி முதலிய நற்பண்புகளை வளர்த்தல்.

**நற்செய்கை** : உயிர்க்கொலை, களவு, பிறர்மனை விழைதல் பொறாமை, வெகுளி முதலிய தீமைகளை விளக்கி, நல்லொழுக்கத்துடன் வாழ்தல்.

**நல்வாழ்க்கை** : வாழ்வுக்கு வேண்டிய பொருள்களைத் தீயநெறியில் அல்லாமல் நீதி நெறியில் உழைத்துப் பெறுதல்.

**நல்லூக்கம்** : நன் முயற்சி. இம்முயற்சி நான்கு வகைப் படும். மனத்தில் தீய எண்ணங்கள் எழாமற் காத்தல், முன்னால் எழுந்த இழிவான எண்ணங்களை அடக்கி வெல்லுதல், நல்லெண்ணங்கள் உதிப்பதற்கு ஏற்ற வழிகளிலே கருத்து வைத்தல், உதித்த நல்லெண்ணங்களைப் பேணி வளர்த்தல்.

**நற்கடைப்பிடி** : கருத்துடைமை, உடலைப்பற்றியும் உள்ளத்தைப் பற்றியும், உலக இயற்கை பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து, ஆராய்ந்து, உண்மையை உணர்ந்து, அதை இடைவிடாது போற்றுதல்.

**நல்லமைதி** : உள்ளத்தை ஒருநிலைப் படுத்தல். உண்மையை அறிவதைத் தடுக்கும் ஆசை, துவேஷம் முதலிய தடைகள் யாவும் இதனால் நீங்கும் : இன்பமும் தியானமும் நிலைத்து நிற்கும் : உள்ளம் அமைதி பெறும் ; விருப்பு வெறுப்புக் களற்ற சித்த நிறைவு ஏற்படும் : பின்னர் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அப்பாற்பட்ட விடுதலையான பேரின்ப நிலை ஏற்படும்.

ஏகாந்தமான இடம் தேடித் தியானித்தல் முடியாது என்பதால், அவர் பொது ஜனங்கள் எளிதாகப் பின்பற்றக் கூடிய ஒழுக்க விதிகளை வேறாக வகுத்தார்; வாழ்வு முழுதையுமே ஞானமார்க்கத்திலே கழித்து முக்தியடைய விரும்புவோருக்குக் கடுமையான ஒழுக்க விதிகளையும் அமைத்தார். சமய வாழ்வுக்காக வீட்டைத்துறந்து வெளியேறும் பௌத்தத் துறவிகளுக்குப் பிக்குகள் (பிக்ஷுக்கள்) என்று பெயர். பிக்குகள் யாவரும் சகோதர பாவத்துடன் ஒன்று சேர்ந்து சங்கமாக வாழ்ந்தனர். புத்தரே அவர்களுடைய குருதேவர்; அவர் உபதேசித்த அறவுரைகளின்படி நடப்பதே தருமம்; அத்தருமத்தை முழுமனத்தோடு ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்கும் துறவிகளின் கூட்டமே சங்கம். புத்தர், தருமம், சங்கம் ஆகிய மூன்றும் 'மும்மணிகள்'. பௌத்த தருமத்தை ஏற்றுக்கொள்பவர் ஒவ்வொருவரும் புத்தருக்கும், தருமம், சங்கம் ஆகியவற்றிற்கும் கூறும் மூன்று சரணங்களும் 'திரிசரணம்' எனப்படும்.

பிக்குகளுக்கு நான்கு படிகள் அமைக்கப்பெற்றிருந்தன. முதற்படியிலுள்ளவர்கள் நெடுங்காலம் தருமத்தைக் கைக்கொண்டு, ஆணவத்தை விலக்கி, ஐயம், திரிபு, மயக்கங்கள் நீங்கியிருப்பர். இவர்கள் நிருவாண மடைவதற்கு முன் ஏழு பிறவிகள்வரை எடுக்கவேண்டியிருக்கும். இரண்டாம்படியிலுள்ளவர்கள், மீண்டும் ஒரே பிறவிதான் எடுக்கவேண்டியிருக்கும். மூன்றும் படியிலுள்ளவர்களுக்கு இனிப்பிறவியில்லை. நான்காம் படியி

லுள்ளவர்கள் இந்த ஜன்மத்திலே நிருவாண மடைவார்கள். இந்நான்கு படிகளிலுமுள்ளவர்களுக்கு முறையே சுரோதபன்ன, சக்ரிதகாமின், அநாகமின், அருகத்ரு என்று பெயர்.

மனிதன், தன்முயற்சியாலும், தற்பயிற்சியாலும், ஒழுக்கத்தில் நிலைநின்று உண்மையை நாடி, தியானத்தின் மூலம் ஞானம் பெற வேண்டுமென்பதற்காகப் பௌத்த தருமத்தில் விரிவான விதிகள் வகுக்கப் பெற்றிருக்கின்றன. நல்வினைகள் எவை, தீவினைகள் எவை என்பதற்கும், மனவிகாரங்களின் முறைகளைப்பற்றியும், அவைகளை அடக்கி உறுதி பெறுவது பற்றியும் நுணுக்கமாக ஆராய்ந்து குறிக்கப்பெற்றிருக்கின்றன.

ஆனால், பௌத்த தருமம் இறைவன் ஒருவன் இருக்கிறானென்றோ, அவன் சித்தப்படியோ, கட்டளைப் படியோ உலகம் நடைபெறுகிறதென்றோ கூறவில்லை. காணமுடியாத, கருதமுடியாத கடவுளைப்பற்றி மனிதன் என்ன தெரிந்துகொள்ள முடியும்? எல்லையற்றதும், எங்குமுள்ளதும், எல்லாம் வல்லதுமான ஒரு மூலப் பொருளைப்பற்றி, எல்லையுள்ள, குறித்த இடம் விட்டுப் பெயரமுடியாத, சொற்ப வல்லமையுள்ள மனிதன் எப்படி அறிய முடியும்? எனவே மானிட அறிவுக்கு எட்டாத விஷயத்தைப்பற்றி 'உண்டு' என்றோ, 'இல்லை' என்றோ உறுதியாகக் கூறிக்கொண்டிராமல், அதில் தலையிடாமல் மௌனமாயிருப்பதே மேலாகும். இதையே புத்தர் பெருமான் மேற்கொண்டிருந்தார்.

படைத்தவன் ஒருவன் இல்லாமல், பிரபஞ்சம் எப்படித் தோன்றமுடியும் என்று சமயவாதிகள் கேட்பார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு படைப்பாளியிருக்கவேண்டுமென்றால், இறைவனைப் படைத்தது யார் என்ற கேள்வி எழும். இறைவன் தானாக—சுயம்புவாக—உள்ளானென்றால், பிரபஞ்சமும் அவ்வாறே சுயம்புவாக இருக்க முடியாதா என்ற கேள்வி எழும். இறைவனே உயிர்களை ஆட்டிவைக்கிறானென்றால், உயிர்கள் ஒரு முயற்சியும் செய்ய வேண்டாமா என்ற கேள்வி எழும். மனிதர்களின் நன்மை தீமைகளுக்கு ஆட்டிவைப்பவன்தானே பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும்? உடல்களில் ஆன்மாக்களைப் படைத்து மனிதர்களைப் பூவுலகுக்கு அனுப்பும் போது, சிலரை வறுமை நிறைந்த குடிசைகளுக்கும், சிலரைச் செல்வமிகுந்த மாளிகைகளுக்கும் அனுப்புவானேன்? எல்லாம் இறைவன் திருவுள்ள மென்றால், அவனுடைய படைப்புக்களுக்கு விதி—சட்டம்—எதுவுமில்லையா? உலகு, உயிர்களையெல்லாம் படைக்கு முன்னால், இறைவன் என்ன செய்து கொண்டிருந்தான்? அவனைத்தவிர வேறு ஒரு பொருளும் இல்லாதிருக்கையில், அவன் பிரபஞ்சத்தை எந்தப் பொருளைக்கொண்டு படைத்தான்? படைத்தல், காத்தல் அழித்தல் எல்லாம் இறைவனுடைய 'விளையாட்டு' என்றால், இந்தத் திருவிளையாடலால் கோடி கோடியான உயிர்கள் உலகிலே படும் அவதிகளைப் பார்ப்பவர்கள், அவனைப்பற்றி என்ன கருதுவார்கள்? இப்படி எத்தனை எத்தனையோ கேள்விகள் எழுகின்றன. எனினும், இங்கு

முக்கியமாகக் கருதத்தக்க விஷயம், மனிதன் எல்லைக்குட்பட்ட தன் மன, மொழி, மெய்களால் எல்லையற்ற பரம் பொருளை அறிந்து தெரிந்துகொள்ள முடியாது என்பதே.

அறியமுடியாத பொருளிடம் அன்பு கொள்வது எங்ஙனம்? எல்லாம் நம்பிக்கை மூலமே நடக்கவேண்டியிருக்கிறது. நம்பிக்கைக்கு ஆதாரமாயுள்ளது எது? பகுத்தறிவன்று; மனிதனின் கற்பனை, அல்லது அவனே எழுதிய சரித்திரம், அல்லது இறைவனே அருளியதாகக் கூறப்படும் நூலே ஆதாரம். அறிவுக் கதவை அடைத்துவிட்டு, நம்பிக்கைக் கதவைத் திறந்துவிட்டால், அதன் வழியாக எல்லாம் நுழைந்துவிடும். பல தெய்வங்கள், பேய்கள், பூதங்கள், சிறு தெய்வங்கள், சிலைகள்—இவ்வாறு மனிதன் நம்பக்கூடாத விஷயம் எதுவுமே இல்லாமற் போகும்.

புத்தர் பிரத்தியட்ச வாழ்க்கையை ஆராய்ந்து, அந்த முடிவின் மீதே தமது தருமத்தை அமைத்தார். உலக வாழ்க்கை துக்கம்; அந்தத் துக்கத்தை உயிர்கள் தமது முயற்சியாலேயே நீக்க முடியும்; துக்கமற்ற நிலையே நிருவாணம் என்று அவர் போதித்தார். எனவே அவருடைய தருமத்தில் இறைவன் அல்லது பதி என்று கூறப்படும் பரம்பொருளுக்கு அவசியமுமில்லை, இடமுமில்லை.

இறைவன், அல்லது பரமான்மாவைப் பற்றிய கொள்கை போன்றதே ஜீவான்மா விஷயமும். ஒவ்

வோர் உயிரும் தனி ஆன்மா என்ருே. அகண்டமான பரசிவ வெள்ளத்தில் உயிர் ஓர் அமிசம் அல்லது துளி என்ருே நம்பிக்கை கொள்ளலாம். பரமான்மாவும் ஜீவான்மாவும் ஒன்றே யென்றும், உலக வாழ்விலிருந்து விடுதலைபெறும் ஜீவான்மா பரமான்மாவோடு இரண்டறக் கலந்து விடுகிறதென்றும் நம்புதல் ஒரு கொள்கை. சில மதங்கள், ஒவ்வொரு மனிதனும் ஒரு தனி ஆன்மா வுடன் வருகிருன், இறக்கும்போது இந்த ஆன்மா, தன் வினைகளுக்குத் தக்கபடி சுவர்க்கத்திற்கோ, நரகத்திற்கோ அனுப்பப்படுகிறது என்றும், அங்கேயே அது நிரந்தர மாக இருந்துவருமென்றும் கூறும்.

பௌத்த தருமத்தில் இத்தகைய கோட்பாடுகளில்லை அதில் எதையுமே நம்பி மேற்கொள்ள வேண்டியதில்லை. எதையும் ஆராய்ந்து, அறிவுக்குப் பொருத்தமாயிருந் தால்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். புத்தர் சொன் ஞர் என்பதற்காகக்கூட எதையும் ஒப்புக்கொள்ளக் கூடாதென்று அவரே பலமுறை சீடர்களுக்குச் சொல்லி யிருக்கிருர். ஆராய்ச்சியின் மூலம் பௌத்த தருமம் கண்ட உண்மைகள் என்ன ? அவைகளைப் பற்றிப் புத்தர் என்ன கூறியிருக்கிருர்?

உலகம் நிலையற்றது, துன்பமுடையது, அநான்ம மானது (ஆன்மா இல்லாதது) என்பதைப் புத்தர், '**அநித்தம், துக்கம், அநான்மா**' என்று குறிப்பிட்டிருக்கிருர். முன்னல் விவரித்தபடி உலகில் எதுவும் நிலையாயில்லை,

ஒவ்வொரு கணத்திலும் எல்லாம் மாறிக்கொண்டேயிருக்கின்றன, எல்லாம் அநித்தியமானவை.

இந்த அநித்தியக் கொள்கையோடு தொடர்புள்ளது அநான்மக் கொள்கை, அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் நித்தியமான தனி ஆன்மா ஒன்று இல்லை யென்ற கொள்கை. உலகில் எல்லாப் பொருள்களும் மாறிக் கொண்டே யிருக்கின்றன எனினும், இந்த மாற்றங்கள் யாவும் ஒரு முறைப்படி—விதிப்படியே—நடந்து வருகின்றன; ஒன்றுக்கொன்று தொடர்புடன் காரண—காரிய விதிப்படி நடந்து வருகின்றன. ஒரு குறித்த வித்திலிருந்து அதற்குரிய செடி உண்டாகிறதேயன்றி, வேறு வகைச் செடி உண்டாவதில்லை. மாங் கொட்டையிலிருந்து பலாச் செடி முளைப்பதில்லை. மேலும் ஒரு வித்து முளைத்துச் செடியாவதற்கு மண், தண்ணீர், காற்று, ஒளி முதலிய பல துணைக் காரணங்களும் வேண்டும். வித்திலிருந்து செடி வருவதுபோலவே அறிவுள்ள மனிதப் பிறவிக்கு உணர்வு (விஞ்ஞானம்) என்ற வித்துக் காரணமாயிருந்து, அவன் 'அருவுரு' என்ற நாமமும் உருவமும் பெற்றுத் தோன்றுகிறான்.

உலகம் சம்பவங்களின் பிரவாகம், அல்லது நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாகவே இருந்து வருகிறது. ஏதுவும் நிலையில்லை; எல்லாம் இந்த வெள்ளத்திலே கலந்து போய்க்கொண்டே யிருக்கின்றன. மாற்றங்கள் காரண—காரியத் தொடர்போடு ஏற்பட்டுக்கொண்டே யிருக்கின்றன. இவற்றில், மூல காரணம், ஆதிகாரணம்

என்று ஒன்றைத் தேடவேண்டிய அவசியமேயில்லை. விஞ்ஞான* ஆராய்ச்சியில் ஆதி காரணம் என்ற ஒன்று கிடையாது; பொருள்களின் மாற்றங்களுக்கு என்ன காரணம் என்பதையே அது ஆராய்ந்து கூறுகிறது. பொருள்களின் மாற்றங்களுக்குக் காரணம் அவைகளின் சுபாவம்—இயற்கை. 'முள்ளைக் கூர்மையாக்கியது யார்? மானின் இனங்களுக்கும், பறவை இனங்களுக்கும் அவைகளின் பல வகைப்பட்ட உருவங்கள், நிறங்கள், பழக்கங்களை அளித்தது யார்? சுபாவமே! எவருடைய இச்சை காரணமாகவும் இவை ஏற்படவில்லை; இச்சையோ, கருத்தோ இல்லாதபோது, இச்சைப்படுவோனே, கருதுவோனே இல்லாமற் போகிறான்.'†

மனிதன் ஆன்மாவா, அநான்மாவா ? அவன் உடல் அழியுந்தன்மையது என்பதை எல்லோரும் அறிவர். ஆயினும் அவனுள் அழியாத ஆன்மா ஒன்று இருப்பதாக அவன் எண்ணுகிறான். அதுவும் அடுத்தவனுடைய ஆன்மாவைப் போலில்லால், தனித்திருப்பதாக எண்ணுகிறான். உடல் அழிந்து, மனம் அழிந்து, பிரக்ஞையும் அழிந்த பிறகு, எதுவும் மிஞ்சியிருக்கவில்லை என்றும், மனிதனை உருவாக்க ஒன்று சேர்ந்த கந்தங்கள் ஐந்தும் பிரிந்து விடுகின்றன என்றும் பௌத்த தருமம் கூறுகின்றது. மனிதன் 'நான்' என்று கருதும் உடல், மனம், பிரக்ஞை எதுவும் நிலையில்லாதபோது, 'நான்'

---

* விஞ்ஞானம்—இங்கு 'ஸயன்ஸ்' (**Science**)

† அசுவகோஷரின் 'புத்த சரிதை'.

என்பதும் இல்லையென்று தெளிவாகிறது. மனிதன் தன் குழந்தைப் பருவத்தில் 'நான்' என்று கருதியதற்கும், முதுமைப் பருவத்தில் 'நான்' என்று கருதியதற்கும் உருவங்களிலோ, குணங்களிலோ சிந்தனைகளிலோ, செயல்களிலோ ஒற்றுமையே யில்லை, என்பது மேலே கூறப்படுகின்றது. ஆகவே 'நான்' என்ற பெயர்—சொல்—மட்டுமே மூன்று நிலைகளிலும் பொதுவாக இருக்கிறதேயன்றி, அது குறிப்பிடும் பொருள் மாறிவிட்டது.

நாம் அறிந்துள்ள சகல பொருள்களும் அநித்திய மாயும், எல்லைக் குட்பட்டும் இருப்பதைக் கொண்டு, இதற்கு நேர்மாறான, உண்மையானதும், எல்லையற்றதும்; நித்தியமானதும் எதுவுமே இருக்க முடியாது என்று எப்படி முடிவு கட்டுவது? போலியாகத் தோன்றும் இந்தப் பிரபஞ்சத்தை நிழலாகக் கொண்டால் அந்த நிழல் எதனுடையதோ, அது உண்மையாகத்தானே இருக்கவேண்டும்? ஆனால் அத்தகைய எல்லையற்ற, நித்தியமான ஒன்றைக் கட்டுப்பாட்டில் அமைந்து கிடக்கும் நாம் எப்படி அறிவது, அதன் விவரங்களை எப்படிக் கூறுவது? அது விளக்கிக் கூற முடியாததாகவே யிருக்க முடியும். புத்தர் அதைப்பற்றி எதுவும்கூற மறுத்து அதைப்பற்றிய ஆராய்ச்சியும் பயனற்றதன்று என்று கூறிவிட்டார். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் அவர் கூறியுள்ள விஷயங்களைக்கொண்டு அவர் கருத்தை ஓரளவு நாம் தெரிந்துகொள்ளலாம.

> 'ஓ பிக்குகளே! பிறப்பற்ற, ஆரம்பமற்ற, சிருஷ்டிக்கப்படாத, உருவாகாத ஒன்று இருக்கிறது. அப்படி ஒன்றில்லையானல், பிறப்புள்ள, ஆரம்பமுள்ள, சிருஷ்டிக்கப்பட்ட, உருவுள்ள உலகிலிருந்து தப்பித்துக்கொள்ளவே முடியாமற் போகும்' †

என்று அவர் கூறியுள்ளார். அந்த உண்மையான ஒன்றை அந்த நிலையை — யாரும் விளக்கியுரைக்க முடியாது. புத்தரும் அந்த விளக்கத்தை மேற்கொள்ளவில்லை.

> 'ஒருவன் தானே தனக்குத் தலைவன். வேறு யார் தலைவனுயிருக்க முடியும்?'

> 'ஒருவன் தனக்குத்தானே தலைவன், தனக்குத் தானே புகலிடம்; ஆதலால், வணிகன் உயர்ந்த குதிரையை அடக்கிப் பழக்குவது போல், உன்னை நீயே அடக்கிப் பழகவும்'

என்று அவர் 'தம்மபத'த்தில் கூறியுள்ள வாக்கியங்களை ஊன்றிப் பார்த்தால், 'தானே தனக்குத் தலைவன்' என்பதில் முதல் 'தான்' யார், இரண்டாவது 'தான்' யார் என்பதன் கருத்து விளக்கமாகும். இரண்டும் ஒருவனுக இருக்கமுடியாது. நசித்துப் போகக்கூடிய 'நான்' என்ற அகத்தை—அகங்காரத்தை — நசித்துப் போகாத மேல் நிலையிலுள்ள ஒன்ருல் அடக்க வேண்டுமென்றே அவர் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று அறிஞர் **ஆனந்தா குமாரசாமி** அபிப்பிராயப்படுகின்ருர்.

---

† உதானம், இதி—உத்தகம்.

தேரவாத பௌத்தர்கள் ஆன்மாவே இல்லையென்று தான் 'அநான்பம்' என்பதற்குப் பொருள் கூறுவர். புத்தருடைய கருத்துப்படி மாறுதலேயில்லாத நித்திய மான ஆன்மா இல்லையென்றும், மற்ற உயிர் வெள்ளத்திலிருந்து பிரிந்து தனிப் பண்புள்ள தனி ஆன்மா ஒன்று இல்லை யென்றுமே பொருள் கொள்ளவேண்டும். தன்னைத்தான் அடக்குதல், தானே தனக்குச் சரணாலயம், தன் முயற்சியாலேயே நிருவாண நிலை பெறுதல் முதலியவைகளைப் பற்றிப் பெருமான் கூறியவற்றுள் 'தான்' என்று எதைக் குறிப்பிடுகிறார்? ஒவ்வொரு மனிதனுடைய உள்ளுணர்வையே — விஞ்ஞானத்தையே — (Consciousness) அவர் கருதியிருக்கிறார். இதுவும் நித்தியமானதன்று, மாறுதலடைந்துகொண்டே வருவது. ஒரு பிறவியிலிருந்து மறு பிறப்புக்குத் தொடர்புடையது.

வெளி உலகைப்பற்றிய கொள்கையைப் போலவே பௌத்த தருமத்தில் அக உலகைப்பற்றியும் (ஒழுக்கம் பற்றியும்) கொள்கை அமைந்திருக்கிறது. மனிதனையும் அவன் சேர்ந்துள்ள சமுதாயத்தையும் கொண்டே ஒழுக்க விதிகள் அமைந்திருக்கின்றன, மனிதன் மற்ற மனிதர்களோடு சேர்ந்தே வாழ்ந்து வருவதால், அவன் வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் பொருந்திய முறையில் அவன் வாழக் கடமைப்பட்டிருக்கிறான். நீதி, நேர்மை, இரக்கம், அன்பு முதலிய பண்புகள் இல்லாவிட்டால், சமுதாயத்தில் வாழ முடியாது, சமுதாயமே சிதறி அழிந்துபோய் விடும். மனிதன் சமுதாயத்தின் ஓர்

அங்கமாக இருந்துகொண்டு, அதன் ஒழுக்க விதிகளின் படி நடந்து வந்தால்தான், இன்பமடைய முடியும்.

புத்தர் பெருமான் தாம் மேற்கொண்ட காரியத்தை நன்கு அறிந்திருந்தார். தாம் உலகுக்கு அளிக்க விரும்பிய சுபமான செய்தியைத் திட்டவட்டமாகச் சிந்தித்துத் தயாரித்து வைத்திருந்தார். எனவே அதற்கு விபரீதமான எதிலும் மக்களின் மனத்தைத் திருப்ப அவர் விரும்பவில்லை. திருப்பினால் அவர்கள் அவசியமானதைப் புறக்கணித்து விட்டுத் தேவையற்றவைகளையே நாடி விவாதம் செய்துகொண்டிருப்பார்கள். அதனால்தான் அவர், 'நான் உபதேசிப்பது ஒரே விஷயந்தான், துக்கமும்—துக்கத்திலிருந்து விடுதலையும்!' என்று திரும்பத் திரும்பக் கூறி வந்தார்.

> 'ஓ பிக்குகளே! மகாசமுத்திரம் உப்பின் உவர்ப்பை மட்டுமே கொண்டிருப்பது போல, இந்தத் தருமமும் **விடுதலை** என்ற ஒரே ருசியைக் கொண்டிருக்கிறது.*

என்று அவர் வற்புறுத்தி வந்தார். மனிதன் ஆசையை அரிந்து தள்ளி, 'நான்' என்னும் அகந்தையை அழித்தலே அவனுடைய முக்திக்கு—அழியாத இன்பத்திற்கு—வழி என்று அவர் காட்டியுள்ளார்.

> 'ஓ பிக்குகளே! ஒரு மரத்தை மட்டும் வெட்டினால் போதாது, ஆசைக் காட்டையே அரிந்து தள்ளுங்கள்! ஆசைக் காட்டிலிருந்தே அபாயம் வருகிறது.

---

* 'உதானம்.'

காட்டையும் புதர்களையும் வெட்டி வீழ்த்திய பிறகு, நீங்கள் விடுதலை பெறுவீர்கள்.'**

'எந்த மனிதன் ('நான்' என்ற) தனித் தன்மையை ஒழிக்கும் வகையில் தன் இதயத்தைச் செலுத்துகிறானோ, அவன், கங்கையின் பெருவெள்ளத்தில் ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு அபாயமின்றி நீந்திச் சென்ற பலவானைப்போல், இன்பமாயும், களிப்புடனும், உற்சாகத்துடனும் இருப்பான்.'***

புத்தர் மறுபிறப்புப் பற்றியும் தேவர்களைப் பற்றியும், வானுலகம், சுவர்க்கம், நரகம் முதலியவை பற்றியும் கூறியிருக்கிறார். இவ்விஷயங்களில் அவர் கருத்துக்கும் இந்து சமய முறையில் இருந்துவரும் கருத்துக்கும் மிகுந்த வேற்றுமையுண்டு. புத்தர், ஒரு மனிதன் இறந்த பின்பு அவனே மற்றோர் உருவில் பிறப்பதாகச் சொல்லவில்லை. மனிதனுடைய மரண காலத்தில் அவன் உடலாகவும் குணங்களாகவும் ஒன்று சேர்ந்து திகழ்ந்த ஐந்து கந்தங்களும் உலைந்து பிரிந்துபோய் விடுகின்றன. அவன் உயிரோடிருக்கையில் செய்த நல்வினை, தீவினையாகிய கருமங்களெல்லாம் உணர்ச்சி (விஞ்ஞானம்) யென்னும் கந்தத்தில் ஒரு விதைபோல் அடங்கி யிருக்கின்றன. அவனுடைய மரணத்திற்குப் பின் மற்ற நான்கு கந்தங்களோடு உணர்ச்சியும் சேர்ந்து மீண்டும் உலகில் பிறக்கும்படி செய்கின்றது. ஆகவே புதிய பிறப்புக்குக் காரணமா

---

** 'தம்மபதம்.'

*** 'மாலுங்கிய புத்த சூத்திரம்.'

யிருப்பவை செயல்கள்—கருமங்களின் கூட்டமே. ஒரு விளக்கின் சுடரிலிருந்து மற்றொரு விளக்கு ஏற்றப்படுவதுபோல், பழைய கருமத் தொகுதி புதிய உருவத்தில் பிறப்பெடுக்கும்படி செய்கிறது.

பிரும்மா, இந்திரன் முதலிய தேவர்களைப் பற்றிப் புத்தர் கூறியுள்ளார். ஆனால் தேவர்களாயினும், நரகர்கள், யட்சர்கள் யாவராயினும், என்ன பெயர்களையுடையவராயினும், உலக விதிகளை மீறிச் செல்ல முடியாது. அவர்களுக்கும் பிறப்பும் இறப்பும் உண்டு. அவர்கள் மனிதர்களைப் பார்க்கினும் கூடுதலான காலம் வாழ்வதாக இருக்கலாமே தவிர, வேறு வேற்றுமையில்லை, அவர்களுடைய கருமங்களை அவர்களும் அநுபவித்தாக வேண்டும். சுவர்க்கம், நரகம் முதலியவைகள் சாதாரண மக்கள் எளிதில் விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காகக் கூறப்பட்டனவேயன்றி வேறில்லை. அவை எங்கோ இருக்கின்றன என்றோ, மரணத்திற்குப் பின் மனிதர்கள் அவைகளில் ஒன்றில் எக்காலத்திலும் இருந்துவருவரென்றோ கருத வேண்டியதில்லை. இவை போலவேதான் புத்தர் கூறிய கதைகளும்; அவரைப் பற்றிய கதைகளும்; பொது ஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய நீதிகளை அவை கதைகளின் உருவத்தில் பெற்றிருப்பதாகவே கொள்ள வேண்டும்.

பௌத்த சமயத்தில் சாதிகள் இல்லை; எல்லா மக்களும் சமமான சகோதரர்கள். மானிட சமூகத்தின் பரப்பு எவ்வளவு இருக்கிறதோ, அந்த அளவுக்கு அதுவும் விசா

லமாயுள்ளது. மதங்களிலே பௌத்த மதம் ஒரு குடியரசு. அதிலே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையுண்டு. அதிலே ஆண்டான் அடிமை யென்ற பேதமில்லை. ஏழைகள் மட்டுமின்று, செல்வர்களுடைய துக்கத்தையும் எல்லா உயிர்களின் துன்பத்தையும் மாற்றவே அது தோன்றியுள்ளது.

அதில் எத்தனையோ தத்துவங்களிருப்பினும், இவைகள் எல்லாம் ஒரே தத்துவத்தில் அடங்கி விடுகின்றன. உயிர்கள் யாவும் துக்கத்தை ஒழித்து விடுதலை பெறவேண்டுமென்பதே அதன் குறிக்கோள். நெருப்பு எரிவதற்கு விறகு காரணமாயிருக்கிறது; விறகு தீர்ந்தவுடன் நெருப்பும் தீர்ந்து போகிறது. இதுபோல் துக்க நெருப்பு எரிவதற்கு ஆசையென்னும் விறகே காரணம்; ஆசை தீர்ந்ததும், துக்கமும் தீர்ந்து போகும். இதையே அந்த அருளறம் போதிக்கின்றது.

ஒழுக்கமே உயிரைவிட மேலானது. ஒழுக்கம், திடீரென்று நினைத்தவுடன், ஒரே நாளில் அமைந்து விடாது.பல நாள், பல்லாண்டுகளாக, அதைப் பயிற்சி செய்து வரவேண்டும். ஒழுக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு உலகிலே தோன்றிய சமயம் பௌத்தம் ஒன்றுதான்.

சத்தியத்தின் முன்னுல் கடவுள்களும், பிசாசுகளும், தேவர்களும், அசுரர்களும் 'நான்' என்னும் ஆணவமுள்ள மனிதர்களும்—யாவர்களும் விலகின்று வழிவிட

வேண்டியவர்களே. சத்தியமே வெல்லும் என்று அச் சமயம் பறை சாற்றுகின்றது.

பௌத்த சமயம் கூறும் நரகம் பேராசையும் துவேஷமும் நிறைந்த உள்ளமே; சுவர்க்கம் கருணையும் களிப்பும் நிறைந்த உள்ளமேயாம்.

பௌத்த சமயம் பிற சமயம் எதையும் தூஷிப்பதில்லை. சமயங்களின் நடுவே சாந்தியைப் பரப்பும் சமயம் அது. மனித சமூகத்தினிடையே, மக்களின் உதிரத்தில் ஒரு சொட்டுக்கூடச் சிந்தாத முறையில், அன்பு வழியிலே பிரசாரம் செய்யப்பெற்ற சமயம் அது. கோசலத்திலே பிறந்து, மகத நாட்டில் பரவி, மாநிலத்தையே அளாவியுள்ள சமயம் அது. சுமார் 50 கோடி மக்கள் அதன் அரவணைப்பில் ஆதரவு பெற்று வருகின்றனர்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிபுகளோடு முற்றிலும் பொருத்தமாயுள்ளன அதன் கோட்பாடுகள். பௌதிக ஆராய்ச்சியும், மனோதத்துவ ஆராய்ச்சியும் வளர்ச்சி பெறாத பண்டைப் பழங்காலத்திலே—2,500 ஆண்டுகட்கு முன்பே—புத்தர் பெருமான் கண்டறிந்து கூறிய உண்மைகளை இன்றைய விஞ்ஞானிகளும் கண்டு அதிசயிக்கின்றனர்.

பௌத்த சமயம் வைதிக சமயங்களைச் சீர்திருத்தியது; கொலைக்குக் காரணமான யாகங்களை ஒழித்தது; மூடப் பழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. சமயப்

பிரசாரத்திற்காகவும், தருமப் பாதுகாப்புக்காகவும் அதுவே உலகில் முதன் முதல் சங்கம் நிறுவியது. அது புரோகிதரும் குருக்களும் இல்லாத சமயம். தருமந்தான் அதன் கடவுள்; அதன்படி ஒவ்வொருவருடைய தற்பயிற்சியே பிரார்த்தனை; தன்னலத் தியாகமே தொழுகை.

வேத, வேதாந்தங்கள் தோன்றிய நாட்டிலே, வைதிகர்களின் நடுவிலே தோன்றி, இத்தகைய புதிதான அருளறத்தைப் பிரசாரம் செய்த புத்தர் பெருமானின் அறிவையும், தைரியத்தையும், நிதானத்தையும், அன்பையும் அளவிட்டுரைக்க முடியாது. எல்லையற்ற பெருமை அவருக்கு ஏற்பட்டிருந்ததால், அவரைப்பற்றி ஏராளமான கதைகள் தோன்றுகின்றன. முன் ஜன்மங்களில் அவருடைய வாழ்க்கை எப்படியிருந்தது என்று இக்கதைகள் கூறும். இவைகளுக்கு 'ஜாதகக் கதைகள்' என்று பெயர். இவற்றுள் ஒன்றில் புத்தராய்ப் பிறக்குமுன் போதிசத்துவர்* உயர்ந்த அறிவுள்ள ஒரு கிளியாக இருந்தாராம். அப்போது ஒவ்வொரு நாளும் அந்தக் கிளி, வயல்களிலுள்ள நெற்கதிர்களை உண்டுவிட்டுத் தன் அலகில் ஒரு கதிரை எடுத்துக்கொண்டு கூட்டுக்குத் திரும்புவது வழக்கம். அந்தக் கதிரிலுள்ள தானிய மணிகள் எவர்களுக்காக என்று கேட்டதற்குக் கிளி பதில் கூறிற்று. 'ஒரு கடனைச் செலுத்துகிறேன்; மேற்கொண்டு கடனும் கொடுக்கிறேன்; சேமநிதியும் சேர்த்து வைக்கிறேன்' என்பதே அந்தப் பதில். அதன் பெற்

---

* போதிசத்துவர்—புத்த நிலையை அடைவதற்குரியவர்.

ஞோர்களுக்கு உணவளிப்பது கடனைச் செலுத்துதல்; குஞ்சுகளுக்கு உணவளிப்பது கடன் கொடுத்தல்—பின்னல் அவை திரும்பச் செலுத்துவதற்காக; தாமே இரை தேட முடியாத கிளிகளுக்கு உணவளித்தலே சேமநிதி—பிற்காலத்திற்கு உதவியான நற்கருமம் அல்லது தருமம். புத்தர் உலக மக்களாகிய குஞ்சுகளுக்குத் தம் அலகில் கொண்டுவந்து அன்போடு அளித்த கதிரே அவருடைய பௌத்த தருமமான சேமநிதி என்று கொள்ளலாம்.

## லாவோத்ஸே

மகா ஞானிகளில் மூவர் ஒரே காலத்தில் வாழ்ந்திருந்து உலக சரித்திரத்திலேயே ஒரு விசித்திரமான சம்பவமாகும். இந்தியாவில் புத்தர் அறஆழியை உருட்டிக்கொண்டு, நாடும் நகரும் நடந்து சென்று நல்லுரை புகன்று வந்த அதே காலத்தில், பழம் பெரும் நாடாகிய சீனவில் **லாவோத்ஸேயும், கன்பூஷஸும்** மக்களுக்கு ஞானம் போதித்து வந்தனர். லாவோத்ஸே கி.மு. 279ல் தோன்றியிருக்க வேண்டுமென்று சில சரித்திர ஆசிரியர்கள் கருதுகின்றனர். கன்பூஷஸ் கி. மு. 551-ல் பிறந்து, 73-வயது வாழ்ந்திருந்தார். லாவோத்ஸே உலகைத் **துறந்து** வாழச் சொன்னரென்றும், கான்பூஷஸ் உலகில் **இருந்து** வாழச் சொன்னரென்றும் அறிஞர் கூறுவர். இருவருக்குமுள்ள முரண்பாட்டை இக்கருத்து தெளிவாகக் காட்டுகின்றது.

இந்தியாவைப் போல் சீன முற்காலத்தில் தத்துவ ஆராய்ச்சியிலும் சமய வாழ்விலும் மூழ்கி யிருக்கவில்லை. சீனர்கள், மறுவுலகைப் பார்க்கினும், இவ்வுலக வாழ்க்கையையே அதிகமாய்க் கவனித்து வந்தனர். இயற்கையோடு இயைந்து, விவசாயத்தையே மூலத்தொழிலாய்க் கொண்டு வாழ்ந்து வந்த அம்மக்கள், வையக வாழ்விலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, அதை உயர்ந்த ஓர் கலையாக வளர்த்து வந்தனர். இத்தகைய மக்களிடையே இந்தியாவில் உபநிடதங்களை உரைத்த முனிவர்களைப் போன்றோர் தோன்றுவது அரிது. அப்படி அரிதாய்த் தோன்றியவரே லாவோத்ஸே என்ற ஞானி.

உலகம், உயிர், இறை ஆகிய விஷயங்களைப் பற்றி, யாக்ஞவல்ஜியர், உத்தாலகர் முதலிய மகரிஷிகளைப் போலவே, அவரும் துணிந்து ஆராய்ந்தார். அவர் கண்ட உண்மைகள் ‘டாவோ – தெ – கிங்’ என்ற நூலில் இருக்கின்றன. அவர் அமைத்த சமயத்தின் பெயர் ‘டாவோ’. சீன மொழியில் ‘டாவோ’ என்றால் மார்க்கம் அல்லது வழி என்று பொருள். லாவோத்ஸேயின் தத்துவ ஞானம் பெரும்பாலான பொதுமக்களிடையே பரவி நிலைக்கும் முறையில்லை. ஆனால் அறிவாளரும், ஆழ்ந்த சிந்தனையாளருமான பலர் அதை மேற்கொண்டனர். நங்கள் குருநாதர் உரைத்த முறைப்படி அவர்கள் உலகைத் துறந்து முனிவர்களாக ஒதுங்கி வாழ்ந்து வந்தனர்.

‘அறிந்தவன் பேசுவதில்லை;
பேசுவோன் அறிந்தவனில்லை,

'அதிகமாக யாத்திரை செய்பவனுக்கு உள்ள அறிவும் சுருங்கிவிடும்.

'செயல் புரிபவன் அழிக்கிறான்; பற்றிக் கொள்பவன் இழக்கிறான். ஆதலால் முனிவன் செயல்புரிவதில்லை; அதனால் அழிப்பதுமில்லை; அவன் (எதையும்) பற்றுவதில்லை; அதனால் இழப்பதுமில்லை.

'பிறரை அறிந்தவன் படிப்பாளி: தன்னை அறிந்தவனே ஞானி.

'பிறரை வெல்பவன் சதைப் பலமுள்ளவன்; தன்னை வெல்பவனே (உண்மையான) பலவான்.

'கலங்கிய தண்ணீரை யாரால் தெளியவைக்க முடியும்? ஆனால் அது அசையாமலிருக்கும்படி வைத்திருந்தால், தானாகவே மெல்ல மெல்லத் தெளிந்துவிடும். பூரணமான சாந்தியைப் பெற யாரால் முயற்சி செய்ய முடியும்? ஆனால் காலம் செல்லட்டும், மெல்ல மெல்லச் சாந்தி ஏற்படும்.

'நித்தியமான தருமத்தை (விதியை) அறிவதே மெய்ஞ்ஞானம்.'

இத்தகைய உபதேசங்களால் லாவோத்ஸே உலக வாழ்வில் மூழ்கியிருந்த மக்களை அவர்கள் போக்கிலேயே சென்று கரையேற்ற வேண்டுமென்று உழைத்து வந்தார். உலகப் போக்கை எதிர்த்து நிற்கக்கூடாது என்று அவர் சொல்வதுண்டு. உயர்ந்த மனிதர்கள் தண்ணீரைப்போல் எல்லார்க்கும் உபகாரிகளாயிருந்து, தண்ணீரைப்

போலவே போட்டியிடாமல் ஒதுங்கியிருக்க வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார். உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும், எங்கும், ஒரே உயிர்த் தத்துவம் பரவியிருப்பதாகக் கருதுவது அவர் கொள்கை.

'பெயரற்ற ஒன்றிலிருந்தே வானமும் பூமியும் தோன்றின:

பெயருள்ளதுதான் பல்லாயிரம் ஜந்துக்களைப் பாதுகாத்து அதனதன் இனப்படி வளர்க்கிறது.

'உண்மையின் ஆசையை * அகற்றுபவனே சத்தாயுள்ளவைகளைக் காணமுடியும்; ஆசையை ஒரு போதும் அகற்றாதவன் வெளித்தோற்றமான பரிணாமங்களையே பார்க்க முடியும்.'

இத்தகைய உபதேசங்கள் உலக வாழ்வில் மக்களுக்கு அசிரத்தையை உண்டாக்கியதில் வியப்பில்லை. இவைகளின் மூலம் அறிவாளர்கள் தம் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கும் திறனைப் பெறுவதற்குரிய வழிகளை அறிந்து கொண்டனர். பொதுமக்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் தலைகீழாகப் பாய்ந்துகொண்டிருக்கையில், சற்றே நின்று, தங்களையும் தங்கள் சூழ்நிலையையும், உலகத்தையும் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்படி இவைகள் தூண்டின.

---

* மற்ற ஆசைகளைக் கைவிடுதல் போல உண்மை மீதுள்ள ஆசையையும் உதறவேண்டும் என்று கூறுகிறார்.

டாவோ சமயத்தின் கொள்கையைப் பிற்காலத்தில் விரிவாக விளக்கியுள்ள அறிஞர் **சுவாங்த்ஸு**, 1,600 ஆண்டுகட்கு முன்பு இவ்வாறு எழுதியுள்ளார் :

'அந்தத் தத்துவம் இதிலுளதா, அதிலுளதா என்று கேளாதீர். அது உயிர் அனைத்திலுமுளது. .......... எல்லாப் பொருள்களும் அளவுக்குட் பட்டிருக்கவேண்டும் என்று அது விதித்துளது. ஆனால் தான் மட்டும் அளவற்றதாய், எல்லையற்றதாயுளது. அதுவே காரணங்களுக்கும், காரியங்களுக்கும் கருத்தாவாயுள்ளது ; ஆனால் அது காரணங்களும் காரியங்களுமன்று........ எல்லாம் அதிலிருந்தே தோன்றுகின்றன, அதன் ஆதிக்கியத்திலேயே உள்ளன.'

## கன்பூஷஸ்

கன்பூஷஸ், கண்முன்புள்ள வாழ்க்கையைத் தவிர, காணாத விஷயங்களில் கருத்தைச் செலுத்திக் கற்பனை செய்யவில்லை. வாழ்வுக்கு அடிப்படையான விசுவாசம், மரியாதை, நிதானம், கற்பு, பலாத்காரத்தை அழித்து அன்பு கொள்ளுதல் முதலிய ஒழுக்கங்களையும் அறத்தை அடிப்படையாகக்கொண்ட அரசியலையுமே அவர் முக்கியமாகக்கொண்டார். அவர் எந்த மதத்தையும் உண்டாக்கவில்லை, ஆனால் அவருடைய உபதேசங்களை ஜனங்கள் பின்பற்றி வந்ததில், அவையெல்லாம் சேர்ந்து ஒரு சமயமாகிவிட்டது. மக்களின் ஒழுக்கமே — வாழ்க்கை முறையே—கடவுளின் நியதியென்று அவர் கருதினார். பிள்ளைகள் பெற்றோருக்கு அடங்கி நடத்தலையும், பெற்

ரோர் காலமான பின்னரும் அவரை வணங்கிப் போற்று தலையும், சகோதரர்கள் உள்ளன்புடன் ஒத்துவாழ்தலை யும் அவர் வற்புறுத்தினர்.

கன்பூஷஸ் சீனாவிலுள்ள லூ என்ற சிறு ராஜ்யத் தில் தோன்றியவர். இளமையிலேயே சரித்திரம், இலக் கியம், பழங்காலப் பழக்க வழக்கங்கள் முதலியவற்றை நன்கு கற்றுத் தேர்ந்தார். இருபத்திரண்டு வயதிலேயே அவர் உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டார். அவரைச் சுற்றி ஏராளமான மாணவர்கள் கூடிவிட்டனர். பின்னர் அவர் ஐம்பதாவது வயதில் அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று, நீதி இலாகா மந்திரியாகித் தம் தத்துவங்களை யெல்லாம் செயல்முறைக்குக் கொண்டு வந்தார். அதிலும் அவருக்குத் திருப்தி யேற்படவில்லை. பதவியை உதறி விட்டு, நாடு நாடாகச்சென்று, அரசர்களுக்கும், அவர்கள் குமாரர்களுக்கும் உபதேசம் செய்துவந்தார். அவருடைய உபதேசங்கள் நூல்வடிவாகச் சேர்த்து வைக்கப்பெற்றி ருக்கின்றன. அவருடைய நன்மொழிகள், லாவோத் ஸேயின் உபதேசங்களைப்போல் அறிவாளரிடம் மட்டும் தங்கியிராமல், நாடெங்கும் பரவியிருக்கின்றன. 2,500 ஆண்டுகட்குப் பின்பு இப்போதுகூடச் சீனமக்கள் அவர் கூறிய நல்லுரைகளைத் திரும்பச் சொல்வது வழக் கம். 'ரிக்ஷா' இழுப்பவனும், 'கன்பூஷஸ் முனி சொல் லியபடி...' என்று கூறுவான். சென்ற 25 நூற்றாண்டு களாகச் சீனாவின் கல்வி முழுதுமே அவருடைய இலக் கியத்தின் மீது அமைக்கப் பெற்றிருந்தது.

ஒரு சமயம் அவர் தம் சீடர்களுடன் **தெய்** என்ற மலைக்குச் சென்றிருந்தார். அங்கே சோகத்தால் சாம்பி, வற்றுமல் கண்ணீர் வடித்துக் கதறிக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டார். அவள் ஏன் அழுகிருளென்று அவர் விசாரித்தார். அவள், 'என் கணவரின் தந்தையை இங்கே ஒரு புலி அடித்துக் கொன்றுவிட்டது; பின்னுல் என் கணவரும் புலிக்கு இரையானுர்; இப்போது என் மகனையும் புலி புசித்துவிட்டது!' என்ருள். அத்தனை துயரங்களுக்குப் பின்னும், அவள் அந்த இடத்தை விட்டுச் செல்லாமல் ஏன் அங்கே தங்கியிருந்தாள் என்று கேட்டதற்கு, அவள், 'இங்கே நல்ல ஆட்சி நடைபெறுகிறது. அதனுல் இதைவிட்டுச் செல்ல மனமில்லை!' என்று கூறினுள். உடனே கன்பூஷஸ் சீடர்களைப் பார்த்து, அவள் கூறிய கதையின் கருத்தைக் கவனிக்கும்படி சொன்னுர். தீய அரசாங்கத்தை—நீதியற்ற கொடுங்கோலை மக்கள் புலியைக் காட்டினும் அதிகமாக அஞ்சுவதை எடுத்துக் காட்டினுர்.

குற்றமற்ற சீலர்களாக மக்கள் வாழவேண்டுமென்பதே அவர் கொள்கை. பகலில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு வாலிபனைப் பார்த்து, 'உளுத்துப்போன இந்த மரக்கட்டையில் எந்த உருவத்தைச் செதுக்க முடியும்? எருக்குழி மண்ணுல் எழுப்பிய சுவருக்கு எப்படி வெள்ளையடிக்கமுடியும்?' என்று அவர் பரிதவித்தாராம்! **காங்—சி** என்ற பிரபு ஒருவர், நாட்டில் திருடர் பயமிருப்பதைக் கண்டு, கன்பூஷிஸிடம் ஒரு சமயம் யோசனை

கேட்டார். 'நீங்களே பணத்தில் ஆசை வைக்காம லிருந்தால், ஜனங்கள் திருடமாட்டார்கள்; திருடுவதற்கு நீங்கள் பரிசு கொடுப்பதானாலும், அவர்கள் செய்ய மாட்டார்கள்!' என்று கன்பூஷஸ் கூறினர். அவர் கூறியுள்ள உபதேசங்களில் மற்றும் சில வருமாறு :

'தனக்குத் தெரிந்தது இது, தெரியாதது இது என்று தெரிந்துள்ளவனே அறிவாளி.

'"என்ன செய்யவேண்டும்? என்ன செய்யவேண்டும்?" என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்ளாத மனிதனை என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை.

'பணக்காரனுயிருந்து கர்வமில்லாமலிருப்பது எளிது; ஏழையாயிருந்து முனகாமலிருப்பது கஷ்டம்.

'கண்ணியமான கனவான் தன்னைத்தான் குறை சொல்லிக் கொள்வான், சாதாரண மனிதன் பிறரைக் குறை சொல்வான்.

'மேலான மனிதன் தன் ஆன்மாவை நேசிப்பான்; தாழ்வான மனிதன் தன் சொத்தை நேசிப்பான்.'

இத்தகைய உரைகளைக் கேட்டு வாழ்க்கையிலும் அவைகளையே பின்பற்றி வந்த சின மக்கள் கன்பூஷஸை ஞான முனிவராகவும், நல்லாசிரியராகவும், சீர்திருத்த வாதியாகவும் போற்றி வருவதில் ஆச்சரியமில்லை. அவர் கூறிய சீர்திருத்தக் கருத்துக்களிற் சில இக்காலத்திய உலகில் சமுதாய வாழ்வைப் பற்றிய கருத்துக்களுக்கும் முற்போக்கானவை. அவர் பெயரால் ஒவ்வொரு நகரி

லும் ஆலயங்கள் அமைத்திருக்கின்றனர். அவருடைய சமாதி இன்று வரை சீனாவின் முதன்மையான புண்ணியத் தலங்களில் ஒன்றாக விளங்கி வருகின்றது.

லாவோத்ஸேயும், கன்பூஷஸும் ஞானம் புகட்டிய நாட்டிலே, பின்னால் இந்தியாவிலிருந்து சென்ற பௌத்த தருமம் பரவி நிலைத்துவிட்டது. கோடிக் கணக்கில் மக்கள் புத்தர்பிரானுடைய அருட் சமயத்தைப் பின்பற்றி வரினும், அவர்கள் தங்கள் ஆசிரியர்கள் இருவரையும் மறக்கவேயில்லை. எனவே சீனாவிலுள்ள பௌத்தம் லாவோத்ஸே, கன்பூஷஸ், புத்தர் ஆகிய மூவருடைய பொன்மொழிகளும் கலந்து ஒருருக் கொண்டதுபோல் விளங்குகின்றது. இம்மூவரும் அந்நாட்டின் கலைப் பண்பையும் நாகரிகத்தையும் உருவாக்கியிருக்கின்றனர். பௌத்தமும் அந்நாட்டின் இயல்புக்குத் தகுந்தபடி மாறியமைந்தது. சீன மக்கள் சமய வாழ்வில் பௌத்த தருமத்தையும், உலக வாழ்வில் கன்பூஷஸ் போதனைகளையும், தத்துவ ஆராய்ச்சியில் லாவோதஸேயின் உபதேசங்களையும் கடைப்பிடிப்பதில் முரண்பாடு எதையும் காண்பதில்லை.

★

# தேவகுமாரரும் திருநபியும்

' சால வேஉலகம்—துயரால்
தளர்ந்து வாடுதையா !
மாலை மாலையாய்...கண்ணீர்
வடிய விடுதையா '

—ஆசிய ஜோதி

## ஏசு கிறிஸ்து

'**அ**ன்பு காட்டாதவன் ஆண்டவனை அறியான், ஏனெனில் ஆண்டவனே அன்பு,' என்ற நற்செய்தியுடன் உலகில் அருட்சமயத்தைப் பிரசாரஞ் செய்து வந்தவர் ஏசு. அவர் **நாசரத்** நகரைச் சேர்ந்த ஒரு யூதர். யூதர்கள் அவரை 'ஜொஷுவா' என்று அழைத்து வந்தனர்.

கிரேக்கர்கள் இப்பெயரை 'ஜீஸஸ்' என்று கூறினர். அவரைத் தீர்க்க தரிசியாகவும் தேவகுமாரராகவும் போற்றிப் பின்னால் 'ஜீஸஸ் கிறைஸ்ட் ஏசுகிறிஸ்து' என்றே குறிப்பிடுதல் மரபாகிவிட்டது. 'ஏசு' மனிதரைக் குறிக்கிறது, 'கிறிஸ்து' அவர் பட்டத்தைக் குறிக்கிறது.

ஏசு அன்பு காட்டும்படி கூறினார். அன்பு மட்டுமே அறமாகுமா? அன்பு நெறியில் தவறே நேராதா? இம்மாதிரிக் கேள்விகளுக்கு ஆசிரியர் **ஆல்டஸ் ஹக்ஸ்லி** ஒரு மறுமொழி கூறியிருக்கிறார்:

> நாம் தெரிந்துள்ள பொருள்களிடமே அன்பு கொள்ள முடியும்; நாம் அன்பு கொள்ளாத பொருள்களை முழுதும் தெரிந்து கொள்ளவும் முடியாது. அறிவைப் பெருக்கிக் கொள்ளும் முறை. அந்த அன்பு போதிய அளவு சுயநலமின்றியும், திவிரமாயும் இருந்தால், நாம் பெறும் அறிவு ஐக்கியப் பான்மையை வளர்க்கும் அறிவாகிறது, இதனால் அதில் தவறு இருக்க முடியாமற் போகிறது' *

இதனால் தான் அன்பு மெய்யறிவுக்கு உற்ற துணையாகவும், உயிர்களின் ஐக்கியத்திற்கும், உயிர்–உலகு–இறை ஐக்கியத்திற்கும் வழிகாட்டும் கருவியாகவும் கொள்ளப்படுகிறது. அன்பின் அரும்பிலிருந்துதான் தருமம் மலர்கிறது.

ஏசு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் பாலஸ்தீனத்தில் யூதர் வகுப்பில் அவதரித்தார். அவரு

---

* **Aldous Huxley— 'Perennial Philosophy.'**

டைய அன்னை **மேரி**, தந்தை **ஜோஸப்.** அக்காலத்தில் யூதர்களுடைய ராஜ்யம் 'இஸ்ரேல்', 'ஜூடர்' என்று இருபிரிவுகளாகப் பிரிந்திருந்தது. யூதர்கள், புத்தர் தோன்றிய சாக்கிய வகுப்பினரைப்போல், குலப் பெருமையில் கர்வமுள்ளவர்கள், செல்வாக்குள்ளவர்கள். உலக சரித்திரத்தில் அவர்களைப் போல் துன்புற்ற வேறு வகுப்பினரில்லை. ஆதியில் அவர்களுக்கு அறமுரைத்த பெரியார் **மோசே** (Moses). பின்னால் ஏசுநாதர் தோன்றிப் பிரசாரம் செய்த புதிய தருமத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்து, அவரையும் ஒதுக்கித் தள்ளியதிலிருந்து, அவர்கள் துயரம் பன்மடங்கு பெருகிவிட்டது. நாடிழந்து, நலமிழந்து, வந்தவர் போனவர்க்கெல்லாம் அடிமைகளாகி, அவர்கள் எப்போதுமே துன்பக் கடலில் மிதப்பவர்களாயிருந்து வருகின்றனர். ஆயினும், தங்களுடைய வகுப்பைப்பற்றிய பெருமையும், ஆண்டவனருளால் தாங்கள் ஒரு காலத்தில் உலகில் முதன்மையுற்றிருப்பார்கள் என்ற நம்பிக்கையும் அவர்களை விட்டு அகலவேயில்லை.

ஏசுநாதர் காலத்தில் அவரது நாட்டிற் பெரும்பகுதி ரோமாபுரச் சக்ரவர்த்தியான **டைபிரியஸ் ஸீஸருக்கு** அடிமைப்பட்டிருந்தது. ஸீஸரின் பெயரால் **பாண்டியஸ் பைலேட்** (பிலாத்து) என்பவர் ஆண்டுவந்தார். ஏசு தமது முப்பதாவது வயதிலேதான் தமது கொள்கையைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். மற்றைத் தீர்க்கதரிசிகளைப்போல், அவர் நெடுங்காலம் வாழ்ந்து, பல்லாண்டுகள் பிரசாரம் செய்யவில்லை. மக்களுக்கு அவர் அற

முறைத்த காலம் மூன்று ஆண்டுகளே. அவருக்குச் சீடர் பன்னிருவரே இருந்தனர். ஞானத்தில் அவர்கள் ஆசிரியரைவிடப் பன்மடங்கு தாழ்ந்த படியிலிருந்தனர். ஆசிரியராக விளங்கிய ஏசு, சமயத்திலும் சமுதாய வாழ்விலும் புரட்சிகரமான மாறுதலைச் செய்ய முயன்றதில், அவருடைய செய்திகளை அந்தச் சீடர்கள் கூடத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியவில்லை. இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு, இன்றைக்குக்கூட, அப்பெரியார் நம் 'சின்ன உள்ளங்களுக்கு' எட்டாதவராகவே யிருப்பதில் வியப்பில்லை யென்று ஆசிரியர் **எச். ஜி. வெல்ஸ்** குறிப்பிட்டுள்ளார்.

ஏசு மக்களிடையே பரம ஏழையாகவே வாழ்ந்துவந்தார். சாதாரண மக்களுக்குப் புரியக்கூடிய சிறு சிறு கதைகள், உபமானங்களைக் கூறித் தமது தருமத்தைப் போதித்து வந்தார். கடைத்தெரு, கோயில், கடற்கரை, குன்றுகள் முதலிய இடங்களில் நின்றுகொண்டு, அவர் திரள்திரளான மக்களுக்குப் போதித்தார், புத்தரைப் போல், மக்களைத் தம்மிடம் இழுத்துக் கொள்ளும் கவர்ச்சி அவரிடம் அளவற்ற முறையில் அமைந்திருந்தது. ஏழைகள் ஒதுக்கப்பட்டவர்கள், பிணியாளர்கள் முதலிய யாவர்க்கும் அவர் ஆறுதல் கூறினர்; பல பிணியாளர்களின் நோய்களைத் தீர்த்து வைத்தார், மக்கள் நேசப்பான்மையுடன் வாழவேண்டு மென்றும், வாளெடுத்தவர் வாளாலேயே மடிவரென்றும், அன்பே கடைத்தேறுவதற்குரிய தெப்பமென்றும் தாம் விரும்பாததை

மற்றவர்களும் விரும்பலாகா தென்றும், தீமையை எதிர்த்தல் கூடாதென்றும், கொடுமை செய்தோரைக் கருணையால் அணைத்துக்கொள்ள வேண்டுமென்றும், குழந்தைகள் போல் சூதுவாதற்றவர்களுக்கே முக்தியாகிய பரமண்டலம் கிட்டுமென்றும், ஆண்டவனின் பரமராஜ்யத்தை இவ்வுலகிலேயே—இப்போதே—அமைக்க முடியுமென்றும் அவர் உபதேசித்தார். ஊசியின் துவாரத்தில் ஒட்டகை நுழைய முடியாததுபோல், செல்வர்கள் பரமண்டலத்துள் நுழைய முடியாது என்றார். 'ஒவ்வொருவனும் தன் சொந்த முயற்சியால் இறைவனின் இராஜ்யத்தை அடைய முடியும், ஏனெனில் அந்தப் பரமராஜ்யம் உங்களுக்குள்ளேயே (அகத்தில்) இருக்கிறது' என்று கூறினர், 'உழைத்துக் களைத்திருப்பவர்களும், பெரும் பாரங்களைச் சுமப்பவர்களும், எல்லோரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு ஓய்வு தருகிறேன்!' என்று அவர், சாதி, சமயம், குலம் முதலிய வேற்றுமைகளின்றி, எல்லோரையும் விரும்பியழைத்தார்.

ஏசுநாதரின் அறவுரைகளிற் பலவற்றை வேறு சமய நூல்களிலும் காணலாம். ஆயினும் அவர் தமக்கே உரிய பாணியில், கல்லையும் கனிவிக்கும் கருணை நிறைந்த சொற்களால், ஆணித்தரமாக அவைகளைக் கூறினர். 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பதுபோல, அவர் அரசர்களுக்கு அஞ்சவில்லை; தம்மை எதிர்த்து நின்ற தம் இனத்தாரான குருமார்களுக்கும் அஞ்சவில்லை. தமது பிரசாரத்தால் குருமார்களின் கொடும்பகை ஏற்படு

மென்று தெரிந்திருந்தும், அதன் முடிவு எதிலே கொண்டு சேர்க்குமென்று அறிந்திருந்தும், அவர் துணிந்து எருச லேம் நகருக்குச் சென்று பிரசாரம் செய்தார்.

குருமார்கள் அவர்மீது குற்றஞ்சாட்டி விசாரித் தனர். அவர்களின் தலைவராயிருந்த **கயாபஸ்**, முடிவில் தண்டனை விதிப்பதற்காக, ரோமாபுரியின் பிரதிநிதியான பான்டியஸ் பைலேட்டிடம் அவரை அனுப்பி வைத் தார். பைலேட் ஒரு பாவமும் அறியாத ஏசுவைத் தண் டிக்க விரும்பவில்லை. ஆனால் குருமார்கள் விடவில்லை; ஏசு சக்கரவர்த்திக்குப் போட்டியாக வந்த 'இராஜத் துரோகி'யென்று வாதாடினர்; ரோமாபுரி ஆட்சிமுறை யில் வழக்கத்திலிருந்த சிலுவையில் அறைந்து கொல்லும் தண்டனையை ஏசுவுக்கும் அளிக்க வேண்டுமென்று வேண்டினர். முடிவில் பைலேட்டும் இணங்கினர். ஏசு சிலுவையிலேற்றப்பட்டார். கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அறையப்பட்டன. உத்தமரின் உதிரம் வடிந் தது. செந்தாமரை போன்ற அவர் திருவதனம் வாடித் தொங்கிவிட்டது.

பைலேட் தமது ஆட்சிக்காலம் முடிந்து ரோமா புரிக்குச் சென்ற பின்பு தம்மால் தண்டனை விதிக்கப் பெற்ற ஏசுவைப்பற்றி என்ன எண்ணியிருப்பார்? இந்தக் கேள்வியை ஆதாரமாக வைத்துக்கொண்டு புகழ்பெற்ற ஆசிரியர் ஒருவர் ஓர் அழகிய கதை எழுதியுள்ளார். பைலேட்டின் நண்பர் ஒருவர் அவரிடம் பேசுகையில், முன்பு எருசலேமில் 'ஏசு' என்ற ஒருவரைச் சிலுவையி

லறைந்தது அவருக்கு ஞாபகமிருக்கிறதா என்று வினவினர். பைலேட், 'எத்தனையோ பேர்களுக்கு அத்தகைய தண்டனைகள் விதித்திருக்கிறேன், ஏசுவா?......ஏசு...... அந்தப் பெயரே ஞாபகத்திலில்லையே!' என்று மறுமொழி கூறியதாக அக்கதையில் காணப்படுகிறது. பைலேட்டே ஏசுவை மறந்துவிட்டார்! ஆனால், ஒரு பைலேட்டால் மறக்கப்பெற்ற ஏசுகிறிஸ்துவை உலகில் இன்று அறுபது கோடிக் கிறிஸ்தவர்கள் தெய்வமாகப்போற்றி வருவதுடன், அவருடைய சிலுவையையும் போற்றி வருகின்றனர்!

சித்திரங்களிலும், சிலைகளிலும் காணப்பெறும் கிறிஸ்து தூய உடைகளணிந்து, நவநாகரிகக் கனவானைப் போல விளங்கிய போதிலும், உண்மையான ஏசுநாதர் ஆண்டிகளோடு ஆண்டியாக வாழ்ந்திருந்ததாகவே சரித்திரம் கூறும். புத்தர் கந்தல்களை யணிந்து, மயானத்துப் பிணங்களிடையே வாழ்ந்ததாகவும், தனியேயிருந்து மௌனமாகச் சிந்தித்துத் தியானத்திலிருக்கும் வழக்கம் அவருக்கு இருபத்தொன்பது வயது முதல் எண்பது வயது வரை இருந்ததாகவும் தெரிகிறது. இதுபோலவே ஏசுநாதரும் சாதாரண உடையுடன் எளிய வாழ்க்கையே கொண்டிருந்தார்; ஏகாந்தமாகத் தியானம் செய்தலும், இறைவனைத் தொழுதலும் அவரது இயற்கைப் பண்பு களாயிருந்தன. வாழ்க்கையில் முக்கியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர் ஆண்டவனை நேரில் அழைத்துப் பேசுதல்போல, அவனிடம் முறையிட்டு, உள்ளத் தெளி

வும், உறுதியும் பெற்றிருக்கிறார். சிலுவையிலே தொங்கிய போதும், 'என் இறைவ, என் இறைவ! நீ ஏன் என்னைக் கைவிட்டுவிட்டாய்?' என்று கடைசியாகக் கேட்டார். தம்மைச் சிலுவையிலே இழிமரணமடையும்படி விடாமல், ஆண்டவன் குறுக்கிட்டு இனிது காப்பானென்று அவர் முன்னால் எண்ணியிருந்தார். ஆனால் அவருடைய ஆண்டவன், அவர் நினைத்த வழியிலன்றி, அவர் மரணத்தின் மூலமே அவரை நித்தியமான தேவகுமரராக்க எண்ணியிருந்தான்போலும்! முடிவில் 'ஏசுநாதர், 'முடிந்துவிட்டது! தந்தாய், உன் திருக்கரங்களில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்!' என்று கூறினார். மரக் கட்டையிலே உடலாகிய கூட்டைத் தொங்க, விட்டுவிட்டுப் பறவை பறந்து போய்விட்டது! ஆயினும் 'என் தந்தாய்! உனது திருவுளப்படியே நடக்கட்டும்; என் எண்ணப்படியன்று, ஆனால் உனது திருவுளமே''. என்று கிறிஸ்து கூறிவந்த பிரார்த்தனை மட்டும் உலகில் ஒலித்துவிட்டது. இவ்வரலாறுகளிலிருந்து அவருடைய கடவுள்-வெறி-பக்தி-தெளிவாய்த் துலங்குகின்றது.

ஏசுநாதரின் உபதேசங்களிற் சில வருமாறு:

'நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே, உங்கள் ஆண்டவரை உங்கள் முழு இதயத்தாலும், முழு ஆவியினாலும், முழு உள்ளத்தாலும், முழு வலிமையாலும் நேசியுங்கள்! இவைகளைவிட உயர்ந்த கற்பனை எதுவுமில்லை.

'கடவுளின் இராஜ்யம் கண்ணுக்குப் புலனாகும் உருவத்தில் தோன்றுமென்று எண்ணாதீர்கள், பரம ராஜ்யத்

தைப் பார்க்கமுடியாது. அது இங்கே யிருக்கிறது, அல்லது அங்கே யிருக்கிறது என்று உங்களிடம் சொல்வார்கள்; அதைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். பரமராஜ்யம் ஒரு குறித்த காலம் அல்லது இடத்திலில்லை. அது எங்கும் உளதாயும், இலதாயு முள்ளது—ஏனெனில் அது உங்களுக்குள்ளேயே, உங்கள் ஆன்மாக்களிலேயே அமைந்திருக்கிறது.

'......கடவுள் மனிதர்களிடையே தமது சக்தியைக் கொண்டு பரமராஜ்யத்தை அமைப்பதில்லை, ஆனால் ஜனங்கள் தாங்களாகவே அதை அமைத்துக் கொள்ளும்படி விட்டுவிடுகிறார்.

'எல்லா மனிதர்களும் ஒரே தந்தையின் மக்கள்; எல்லோரும் சகோதரர்கள்; ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரையும் சமமாக நேசிக்கவேண்டும்.'

* * *

'தீமையைத் தீமையால் எதிர்க்காதீர்கள்!'

* * *

'பொறியிலே சிக்கிய தன் பாதத்தை நரி கடித்துத் துண்டாக்கித் தப்பித்துக் கொள்வது போல, ஒவ்வொரு மனிதனும் ஆசைத் தூண்டுதலுக்குப் பணிவதைப் பார்க்கினும், தன் உடலின் வேதனையைத் தாங்குதல் நலமாகும். தீமைக்கு இடங்கொடுத்து, அதையே விரும்பக்கூடிய அளவுக்கு வருவதைப் பார்க்கினும், ஒரு கையோ, பாதமோ மட்டுமன்றி, உடல் முழுதுமே அழிந்து போதல் நலம். ஆசைத் தூண்டுதல்களே உலகுக்குத் துக்கத்தை

அளிக்கின்றன. ஆசையின் காரணமாகவே உலகில் எல்லாத் தீமையும் வருகிறது.'

* * *

'ஒரே காலத்தில் நீங்கள் இரண்டு யசமானர்களுக்கு ஊழியஞ் செய்யமுடியாது: கடவுளும் செல்வமும், பரம பிதாவின் சித்தமும் உங்கள் எண்ணமுமே (அந்த இரு யசமானர்கள்). இரண்டில் ஒருவரை நீங்கள் தேர்ந் தெடுத்துக் கொள்ளவேண்டும், ஒருவருக்கு அல்லது மற்றவருக்கே ஊழியம் செய்யவேண்டும்.'

புத்தர் தம் 61 சீடர்களை முதன்முதல் தருமப் பிர சாரத்திற்கு அனுப்புகையில் அவர்களுக்கு ஓர் அரிய உபதேசம் செய்தார். 'பல பேர்களுடைய நன்மைக் காக, பல்லோருடைய இன்பத்திற்காக—உலகின்மீது கொண்ட கருணையுடன்—தேவர்கள், மானிடர்கள் எல் லோருடைய க்ஷேமத்திற்காகவும், நன்மைக்காகவும், இன் பத்திற்காகவும், சகோதரர்களே, நீங்கள் உங்கள் யாத் திரையை மேற்கொள்ளுங்கள்! இரண்டு பேர்கள் சேர்ந்து போகாதீர்கள். தொடக்கத்திலும், நடுவிலும், முடி விலும் நலம் நிறைந்துள்ள தருமத்தைப் பிரசாரம் செய் யுங்கள்......மக்கள் கண்களில் இந்திரிய உணர்ச்சியென்ற மாசு (மண்) சிறிது மறைத்து நிற்கிறது. தருமத்தை அறியாமல் அவர்கள் நசித்துப் போகிறார்கள். (உண்மை யைச்) சிலராவது உணர்ந்து கொள்வர்!' என்று அவர் சொல்லியனுப்பினர்.

ஏசுநாதர் தம் 12 சீடர்களுக்கும் சொல்லியனுப்பிய செய்தி வருமாறு: 'அநேக மக்கள் உண்மையான வாழ்க்கையின் இன்பத்தை அறியாதிருக்கின்றனர். அவர்கள் அனைவருக்குமாக நான் இரங்குகிறேன், எனக்குத் தெரிந்ததை அவர்களுக்குக் காட்ட விரும்புகிறேன், ஒரு யசமானன் தன் வயலில் தனியே வேலை செய்ய முடியாமல், அறுவடைக்குத் தொழிலாளர்களை அழைப்பது போல், நான் உங்களைத் துணைக்கு அழைக்கிறேன். வெவ்வேறு நகரங்களுக்குச் சென்று, எங்கும் பரம ராஜ்யத்தைப் பற்றிய உபதேசத்தைச் சொல்லுங்கள். பரம ராஜ்யத்தின் கற்பனைகளை மக்களுக்குச் சொல்வதோடு, நீங்களும் ஒவ்வொரு விஷயத்திலும் அவைகளை நிறைவேற்றுங்கள். ஓநாய்களின் நடுவே ஆடுகளை அனுப்புவதுபோல, உங்களை அனுப்புகிறேன். பாம்புகளைப் போன்ற புத்திக் கூர்மையுடனும், புறாக்களைப் போன்ற பரிசுத்தத்துடனும் இருங்கள். முதலாவதாக, உங்களுடையவை யென்று எதையும் வைத்துக் கொள்ளாதீர்கள், பை, ரொட்டி, பணம் எதையும் உங்களோடு எடுத்துச் செல்லவேண்டாம்: உங்கள் தேகங்களில் கட்டியுள்ள துணிகளோடும், கால்களிலுள்ள செருப்புக்களோடுமே செல்லுங்கள்... ஜனங்கள் நீங்கள் சொல்வதைக் கேட்டு உங்களை வெறுப்பார்கள், உங்களைத் தாக்கி ஊரூராகத் துரத்துவார்கள், ஆனால் கலங்கிவிடாதீர்கள்... ஜனங்கள் உங்கள் உடலைத்தான் கொல்லமுடியும், உங்கள் ஆன்மாவை ஒன்றும் செய்ய முடியாது, ஆதலால் மனிதர்களைக் கண்டு பயப்படாதீர்கள்!'

ஏசுவாவது கட்டிய துணிகளோடும் காலிலுள்ள செருப்புக்களோடும் செல்லும்படி சொல்லியிருக்கிறார். புத்தர் தமது பிக்குகளின் சங்கத்தை ஆரம்பித்த காலத்தில், பிக்குகள் பிணங்களுக்குப் போர்த்திய துணிகளையும், மக்கள் கழித்து நீத்த கந்தல்களையுமே அணியவேண்டுமென்று கூறியிருந்தார், பாதரட்சை அணிவதையும் முதலில் அவர் அங்கீகரிக்கவில்லை. பிறர் கொடுக்கும் துணிகளைப் பெற்றுக் கொள்ளலாமென்றும், பாதரட்சை அணியலாமென்றும் பின்னால்தான் அவர் அநுமதித்தார்.

ஏசுநாதர் தம் உபதேசங்களெல்லாம் உடனே உலகில் பரவி மக்களெல்லாரும் தேவர்களாகிவிடுவார்கள் என்று கற்பனை செய்து கொண்டிருக்கவில்லை. அவ்வுபதேச விதைகளிற் சில கற்பாறைகளிலும், பண்படாத பாழுந் தரையிலுமே விழுமென்பதை அவர் அறிந்திருந்தார்.

> 'ஆண்டவன் அன்பினாலான ஆலயத்தை விரும்புகிறார்: மக்கள் கற்களைத் தூக்கிக்கொண்டு ஓடுகின்றனர்!'

என்று மகாகவி தாகுர் கூறினார். இது ஏசுவுக்கும் தெரியும். இத்துடன் மதகுருக்களின் மாய்மாலங்கள், மக்களின் பூசல்கள், போர்களைப்பற்றியும் அவர் அறிந்திருந்தார். மக்களின் இதயங்களில் ஆண்டவனின் அருளாலயம் எப்போது ஏற்படுமென்று கேட்டதற்கு, 'உடனே ஏற்படாது. வெகு காலத்திற்கு மக்கள் மற்றவர்களை ஏமாற்றுவதற்கு என் உபதேசத்தையே உபயோகிப்பார்

கள், இதனுல் யுத்தங்களும், குழப்பங்களும் ஏற்படும்' நெறி முறைகள் சிதறி, அன்பு அருகிப்போகும். ஆனல் ஒவ்வொருவரும் உண்மையான உபதேசத்தை (தரு மத்தை) உணர்ந்து கொண்டபின், தீமையும் ஆசைத் தூண்டுதல்களும் அகன்றெழியும்' என்று அவர் கூறி யுள்ளார்.

கிறிஸ்து தாம் சொல்லிய வண்ணமே செய்து காட் டினர். அவருடைய செய்தி உலகுக்குப் புதுமையாக வும் புரட்சியாகவும்இருந்தது. செல்வங்களைக் கைவிட்டு, ஏழை பணக்காரரென்ற பேதங்களை ஒழித்து, எல்லோ ரும் சுதந்திரமாக அன்பு பூண்டு, சமத்துவமான சகோ தரர்களாக வாழ்தல் என்பது அன்றுபோல் இன்றும் புரட்சிகரமாகவே யுள்ளது. இரண்டு யசமானர்களுக்கு ஊழியஞ் செய்ய முடியாதென்று அவர் கூறினர். வாயால் ஒரு யசமானரை—கடவுளைப்—புகழ்ந்துவிட்டு, வயிற்றுக்காக மற்றொருவருக்கு—சயித்தானுக்கு—ஊழி யம் செய்வதையே பெரும்பாலான மக்கள் மேற்கொள் கின்றனர். இதைக் கண்ட அறிஞர் ஒருவர் உலகில் ஏசு ஒருவரே உண்மையான கிறிஸ்தவரா யிருந்தா ரென்று கருதினர். 'உலகிலே ஒரே கிறிஸ்தவர் இருந் தார், அவரும் சிலுவையிலே மாண்டு போனர்!' என்று அவர் குறித்துள்ளார். உலகப் புகழ்பெற்ற பெர்னர்ட்ஷா வும் இதுபோலவே அபிப்ராயப்பட்டிருக்கிருர். 'இந்த மனிதர் (கிறிஸ்து) இன்னும் தோல்வி பெறவில்லை, ஏனெ னில் அவர் வழியைப் பரீட்சை செய்து பார்ப்பதற்குக்

கூட புத்தியுள்ள ஒரு நபர் இதுவரை தோன்றவில்லை!' என்று அவர் கூறினார்.

ஆனால் நம் காலத்திலேயே ஒரு மனிதர் ஏசு வழியைப் பரிட்சை செய்து பார்த்துவிட்டார்! '...காந்தியை நினைக்கும் போது, நான் ஏசு கிறிஸ்துவையே நினைக்கிறேன். இவர் அவர் வாழ்க்கையையே வாழ்கிறார், அவர் வார்த்தையையே பேசுகிறார், (அவரைப்போலவே) துயரப்படுகிறார், இடைவிடாது முயற்சி செய்கிறார், **பூமியிலே அவருடைய ராஜ்யத்திற்காக என்றாவது ஒரு நாள் சிறப்பாக மடிவார்**' என்று அமெரிக்கப் பாதிரியாரான **ஹோம்ஸ்*** பல்லாண்டுகட்கு முன்னரே குறிப்பிட்டிருந்தார். 'என்றாவது ஒரு நாள்' என்று அவர் குறிப்பிட்ட நாள் கி. பி. 1948, ஜனவரி, 30ஆம் தேதியாக முடிந்தது! 'சிறப்பாக மடிவார்' என்று அவர் கற்பனையாகக் கூறியது உண்மையிலேயே நடந்தது. காந்தியடிகள் நெஞ்சிலே குண்டுகளைத் தாங்கி மடிந்தார்! ஜார துஷ்டிரர் தொழுகையிலிருக்கும்போது கொலையுண்டார், ஏசு நன்றாகத் தொழுதுவிட்டு மரண யாத்திரைக்குத் தயாராகப் புறப்பட்டுச் சென்றார், மகாத்மா தொழுகைக்குச் செல்லும் பாதையிலேயே சுடப்பட்டார்!

கிறிஸ்தவ சமயத்தில் பின்னால் ஏற்பட்ட 'சர்ச்' ஸ்தாபனங்கள் விரிவான தத்துவ நூல்களையும், விதிகளையும் அமைத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளில் ஏசு

---

* Rev. J. H. Holmes, New York.

நாதரின் சீரிய சீலங்களுக்கும் கொள்கைகளுக்கும் இட மில்லையென்றும், அவைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் கோட்பாடுகளை மக்கள்மீது திணிப்பதற்காக அன்பு நெறி யைக் கைவிட்டுப் பலாத்காரத்தின் மூலம் கோடிக்கணக் கான மக்களைச் சித்திரவதை செய்தும், கொன்றும், நெருப்பிலிட்டு வதைத்தும் வந்திருக்கின்றனர் என்றும்* ரஷ்ய ஞானியான டால்ஸ்டாய் போன்ற அறிஞர்கள் கூறியுள்ளனர். . இவை எவ்வாறேனும் இருக்கட்டும். பிரபஞ்சம் இறைவனின் படைப்பென்றும், இறைவன் தந்தையாயும், தேவகுமரனாயும், பரிசுத்த ஆவியாயும் மும்மூர்த்தங்களாக இருப்பதாயும், ஒவ்வோர் ஆன்மா வும் உலகுக்கு வருமுன்பு புதிதாய்ப் படைக்கப்பெறுவ தாயும், சுவர்க்கமும் நரகமும் எப்போதுமிருப்பதாயும், ஆன்மாக்களின் நன்மை தீமைகளுக்குத் தக்கபடி அவை இரண்டில் ஒன்றை அடைவதாயும், மக்கள் பிறப்பி லேயே பாவமுடையவர்களென்றும், கிறிஸ்துநாதர் மூலம் பாவமன்னிப்பு ஏற்படுகிறதென்றும், கிறிஸ்தவ சமயம் கூறும். இச்சமயத்துள் பின்னால் பல பிரிவுகள் ஏற்படினும், மேலே கூறியவை அவைகளின் பொது வான கொள்கைகள்.

---

* 'They laid down the truth and punished those who did not accept it. Millions and millions of people have been tortured, killed, and burnt for not accepting it.' —*Leo Tolstoy*.

# முகம்மது நபி

உலகில் ஆயிரக்கணக்கான மசூதிகளிலிருந்து **'அல்லாஹு அக்பர்!** (ஆண்டவன் மிகப்பெரியவன்!)' என்ற கோஷம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. தினம் ஐந்து வேளைத் தொழுகைக்கு அவைகளில் பாங்கு* கூறப்படுகிறது. இருபத்தைந்து கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்கள், **'லா இலாஹா இல்லல்லாஹ்! முகம்மதர் ரசூலுல்லாஹ்!** (உண்மையான அல்லாவைத் தவிர வேறு ஆண்டவனில்லை! முகம்மது அல்லாவின் தூதர்!)' என்று ஒரே அல்லாவையும், அவருடைய ரசூலாகிய நபியையும் ஏற்றுக்கொண்டு பல நாடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களுடைய மார்க்கம் இஸ்லாம்.† முகம்மதுநபி ஆண்டவன் தூதராக வந்து கி. பி. ஏழாம் நூற்றுண்டில் அரேபியாவில் இச்சமயத்தை நிறுவினர். இஸ்லாமுக்கு அடிப்படையாக விளங்குபவை குர்ஆன் வேதமும்**, முகம்மது வாழ்ந்து காட்டிய முறையாகிய சுன்னத்தும். குர்-ஆன் 114-சூராக்கள் (அதிகாரங்கள்) கொண்ட நூல். இது ஆண்டவனுல் நபிகள் நாயகத்திற்கு 23 ஆண்டுகளாக அருளப்பெற்றது என்பர். 'உண்மை, பிர காசம், ஆண்ட வன் நூல்—அல்ஹக், அந்நூஈ, கிதாப்

---

* பாங்கு—சப்தம், அழைப்பு.

† இஸ்லாம்-சாந்தி, சமாதானம், வழிபடுதல்.

** குர்ஆன் — வாசிக்கப்படுவது, வாசிக்கவேண்டியது என்று பொருள்படும்.

புல்லாஹ்)' என்ற பெயர்களாலும் குர்ஆனைக் குறிப்பிடு வதிலிருந்து அதன் பெருமை நன்கு விளங்கும்.

ஒரே கடவுள், அவருடைய தூதர்களில் கடைசி யானவர் முகம்மது நபி என்று ஒவ்வொரு முஸ்லிமும் நம்பிக்கை கொள்ளவேண்டும். இத்துடன் இன்னும் நான்கு கடமைகளுண்டு. பிரார்த்தனை, உபவாசங்கள், 'ஸக்காத்', 'ஹஜ்', ஒவ்வொரு நாளும் ஐந்து வேளைத் தொழுகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உபவாசங்களில் முக்கியமானது ரமலான் மாதம் முழுதும் பகலில் எவ்வித உணவோ பானமோ உட்கொள்ளக்கூடாது என்பது. 'ஸக்காத்'†† என்பது தருமம் கொடுத்தல், 'ஹஜ்' என் பது ஒரு முறையாவது மக்காவுக்கு யாத்திரை செய்தல். இது பொருள் வசதியுள்ளவர்களுக்கு மட்டுமே விதிக்கப் பெற்றுளது. **மக்கா** முஸ்லிம்களுக்குப் புனித நகரம்; நாயகம் பிறந்து, வளர்ந்து, அறமுரைத்த தலம் என்ப துடன், அங்கே அவர்களுடைய முதன்மையான க்ஷேத் திரமான கஅபா இருக்கிறது.

மனிதர்களில் ஆண்டான், அடிமை என்ற வேற்று மைகளில்லை என்பதும், எல்லோருக்கும் ஆண்டான்

---

†† ஒவ்வொருவனுடைய செல்வத்திலும் நாற்பதில் ஒரு பகுதியைத் தானம் செய்யவேண்டுமென்று விதி. மற்றும் நன் செய், புன்செய் வருமானங்களுக்கும், வர்த்தகம், தொழில்கள் முதலியவற்றின் வருமானங்களுக்கும் இதேபோல் விகிதங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

ஆண்டவனே, எல்லோரும் அவன் ஒருவனுக்கே அடிமைகளென்பதும் இஸ்லாத்தின் கொள்கை. அதன்படி சர்வ ஜனங்களும் சமத்துவமுள்ள சகோதரர்களே. உயர்ந்தோர், தாழ்ந்தோரென்ற சாதிப்பிரிவினைகள் அதிலில்லை. மனிதர்கள் தத்தம் செயல்களுக்குத் தாங்களே பொறுப்புள்ளவர்கள். கருமத்தைச் செய்ய வேண்டியதே மக்களின் கடமை; அவற்றின் பலனை ஆண்டவன் நாட்டத்திற்கே விட்டுவிட வேண்டும். இறந்த பின்பு தீர்ப்பு நாளில் மக்கள் உலகிலே செய்த நன்மை தீமைகளுக்குத் தகுந்த வெகுமதியோ, தண்டனையோ அளிக்கப்படும். நன்மை செய்தோர் சுவர்க்கத்தையும், தீமை செய்தோர் நரகத்தையும் அடைவர். உலகைத் துறக்கவோ, உடலை வருத்தும் **தவங்களை** மேற்கொள்ளவோ இஸ்லாம் கூறவில்லை, மனம் பரிசுத்தமாயிருக்க வேண்டும். கருத்தே செயலை விட மேலானது. சிந்தனை, சொல், செயல் மூன்றும் தூய்மையா யிருக்கவேண்டும். மரணத்திற்குப் பின்பு ஏற்படும் முடிவில்லாத ஒரு வாழ்வில் பேரின்பம் பெறுவதே மானிட வாழ்வின் இலட்சியமாயிருக்க வேண்டும்.

இஸ்லாம் மதத்தின் ஸ்தாபகரான முகம்மது * கி. பி, 571-ல் ரபீயுல் அவ்வல் மீ, 12-தேதி திங்கட் கிழமையன்று, அரபி நாட்டுக் குறைஷி வமிசத்தில் பிறந்

* முகம்மது—புகழ்பெற்றவர்.

தவர். அவருடைய சரித்திரம் அரபி மொழியிலும், பிற மொழிகளிலும் குறித்துவைக்கப் பெற்றிருக்கிறது. 'உலகில் அவதரித்த பல பெரியார்களில் நபி பெருமானின் சரித்திரம் மிக விரிவானது, நம்பத் தகுந்தது, சந்தேகத்திற்கு இடமில்லாததென்று பலராலும் அங்கீகரிக்கப்பட்டது' † அவர் காலத்தில் அரேபியா மிகவும் பிற்போக்கு நிலையிலிருந்தது. மக்களிடையே கல்வி பெருகியிருக்கவில்லை. அவர்கள் இரவும் பகலும் சூதாடுவதும், சாராயம் குடிப்பதும் வழக்கமாயிருந்தது. ஒழுக்கம் சீர்குலைந்திருந்தது. பெண்களின் நிலை பரிதாபமாயிருந்தது. ஆடவர் விருப்பம் போல் எத்தனை பெண்களை வேண்டுமாயினும் விவாகஞ் செய்துகொண்டு, வேண்டாதபோது அவர்களை விரட்டி விடலாம். சண்டைகளில் 'யுத்த தருமம்' என்று கிடையாது. எதிரிகளிலே சிறைப்பட்ட பெண்கள், குழந்தைகள்கூடக் கொலைசெய்யப் பெற்றனர், அல்லது தீயிலே தள்ளப்பட்டனர். அடிமைகள் விலங்குகளைப் போல் நடத்தப்பட்டனர். விலங்குகளும் இரக்கமின்றிக் கொடுமையாக நடத்தப்பட்டன. ஜனங்கள் உண்மையான சமயவாழ்க்கையில் ஈடுபடவில்லை. பெயரளவில் யூத மதமும் கிறிஸ்தவ மதமும் அங்கே இருந்து வந்தனவேயன்றி, மக்கள் கண்ட சிலைகளையெல்லாம் வணங்கி வந்தனர். நாடு முழுதும் மூடக்கொள்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களும் நிறைந்திருந்தன.

---

† ஜனாப் மு. ந. ஹாஜி முகம்மத் சாஹிப் — 'திருநபி சரித்திரம்'.

இத்தகைய மக்களை ஒன்று சேர்த்து, ஒழுக்கத்தை நிலைநாட்டி, விக்கிரக வணக்கத்தை ஒழித்து, ஒரே தெய்வத்தின் வணக்கத்தை ஏற்படுத்தி, எல்லோரும் சமம், எல்லோரும் சகோதரர்கள் என்ற கொள்கையைப் பிரசாரஞ் செய்து, பெண்களுக்குச் சொத்துரிமையும், பிற உரிமைகளும் அளித்து, குர்ஆன் வேதத்தையும் தம் அறவுரைகளையும் கொண்டு ஒரு புது வாழ்வை உண்டாக்கியவர் முகம்மது நபி. இவற்றிற்காக அவர் பட்டபாடுகளும், அடைந்த துன்பங்களும் அளவற்றவை. ஆனால் முடிவில் மக்கள் அவரை ஏற்றுக்கொண்டு, அவரையே வழிகாட்டியாகக் கொண்டனர்.

அவருடைய தாய் **அமீனா**, தந்தை **அப்துல்லா**. அவர் பிறக்கு முன்பே தந்தையை யிழந்து, ஆறுவது வயதில் அன்னையையும் இழந்தார், அவருடைய பாட்டனார் **அப்துல் முத்தலிப்** அவரை அன்போடு வளர்த்துவர ஏற்பாடு செய்திருந்தார். சிறுவயது முதலே முகம்மது எல்லோரிடத்திலும் அன்புகொண்டு நேர்மையோடு வாழ்ந்து வந்தார். மூன்று வயதிலிருந்தே அவர் ஆடுகள் மேய்க்கச் சென்றுவந்தார். பின்னால் தமது குலத்தினர் செய்துவந்த வியாபாரத் தொழிலை மேற்கொண்டார்.

தம் நாட்டவரை எப்படி மேல்நிலைக்குக் கொண்டு வருவது என்ற எண்ணம் அவருக்குப் பல வருடங்களாக இருந்து வந்தது. அவர் ஏகாந்தமாயிருந்து பிரார்த்தனை செய்யும் பொழுது இதைப்பற்றி ஆண்டவனிடம் முறையிடுவாராம். மக்கா நகருக்கு மூன்று மைல் தூரத்தி

லிருந்த ஹிரா என்னும் குகையிலேதான் அவர் தனியே யிருந்து சிந்தனை செய்வது வழக்கம். ஒவ்வொரு வருடமும் ரமலான் மாதம் முழுதும் அங்கேயே தங்கித் தியானத்திலிருப்பாராம். அந்தக் குகையிலேதான், அவருடைய நாற்பதாவது வயதில், குர்ஆன் வேதத்தின் முதற் பகுதி ஆண்டவனால் அவருக்கு அறிவிக்கப்பெற்றது. அதன் பின்புதான் அவர் இஸ்லாம் மார்க்கத்தைப் போதிக்க ஆரம்பித்தார்.

முதலில் அவருடைய மனைவி கதீஜா நாயகி அவரை ஆண்டவன் தூதராக ஏற்றுக்கொண்டார். பின்பு முகம்மது தம் நெருங்கிய உறவினர்களுக்கு அறிவித்தார். மூன்று வருடம் அவர் ஒதுக்கமாயிருந்து செய்து வந்த பிரசாரத்தில் 40 பேர்களே இஸ்லாம் மார்க்கத்தை மேற் கொண்டனர். நான்காவது ஆண்டு முதல் அவர் வெளிப் படையாகப் போதிக்க முற்பட்டார். இதனால் அவருடைய குலத்தினராகிய குறைஷியர் அவருக்கும், புதிதாய்ச் சேர்ந்த முஸ்லிம்களுக்கும் பல கொடுமைகளைச் செய்து வந்தனர். அவர், எதற்கும் அஞ்சாமல், எவருடனும் சண்டையிடாமல், தமது கடமையைச் செய்து கொண்டேயிருந்தார்.

நபியின் பிரசாரம் ஆடம்பரமற்ற, அடக்கமான முறையில் அமைந்திருந்தது. கூட்டங்களிலே விவாதம், தத்துவச் சண்டைகள் முதலியவற்றை அவர் ஒரு போதும் விரும்பவில்லை. அவர் ஊர் ஊராகச்சென்று தம் செய்திகளை மக்களுக்கு அறிவித்துவந்தார். திருவிழாக்கள்

நடக்கும் இடங்களுக்குச்சென்று அவர் இஸ்லாத்தைப்பற்றி போதித்து வந்தார். அவருடைய தோற்றமும், எளிய வாழ்க்கையும், நற்குணங்களும் மக்களின் மனத்தைக் கவர்ந்தன. குறைஷியர் செய்த கொடுமைகளை அவர் பொறுமையோடு தாங்கி வந்ததைக் கண்டும், பலர் அவரோடு சேர்ந்தனர். மேலும் அவருடைய மார்க்கத்தில் சேர்ந்தவர்களுடைய வாழ்க்கை நன்மையான முறையில் மாறியிருப்பதைக் கண்டும், பலர் அவரை அண்டி வந்தனர். அவருடைய உபதேசங்கள் வேரூன்ற ஆரம்பித்ததும், குறைஷிகள் அவரை அமைதியாக வாழ விடவில்லை. இஸ்லாம் மார்க்கத்தால் அவர்களுடைய சிலைவணக்கம் முதலிய பழைய வழக்கங்கள் அழிந்து ஒழியுமென்று பயந்தனர்; நபியை ஒழித்துவிட்டால், புதிய மார்க்கம் பரவாதென்று கருதினர். அவரைக் கொலை செய்யவும் ஏற்பாடு செய்தனர். எனவே முகம்மது நகரைவிட்டு வெளியேற நேர்ந்தது. நகரையும், நகர மக்களையும் பிரிந்து செல்லவே அவருக்கு மனம் வரவில்லை. அந்நகரை ஆவலோடு நோக்கி, 'மக்கா! உலகனைத்திலும் நீயே எனக்குப் பிரியமான இடம், ஆனால் உன் மக்கள் என்னை இங்கே வசிக்கவிடவில்லையே' என்று அவர் கூறி இரங்கினார். வேறு வழியின்றி அவர் அங்கிருந்து **அபூபக்கர்** என்ற தோழருடன் **மதினா** நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். குறைஷியர் அனுப்பிய கொலைஞர்களும் அவரைத் தேடித் தொடர்ந்து சென்றனர்.

மதினாவில் அவருக்கு மக்களின் ஆதரவு கிடைத்தது. அங்கே சென்றதும், அவர் தொழுகைக்காக ஒரு கட்டடம் கட்ட ஏற்பாடு செய்தார். அவருடைய ஒட்டகம் முதலில் எந்த இடத்திலே நின்றதோ, அங்கேயே அக்கட்டடம் அமைக்கப்பெற்றது. வணக்கத்தலம் என்றால் வானளாவிய ஸ்தூபிகளும், சலவைக் கல்லால் அமைந்த படிகளுமுள்ள பெரிய மசூதியென்று எண்ண வேண்டாம். இஸ்லாத்தின் ஸ்தாபகர் அமைத்த அக் கட்டடம், சுடாத மண்செங்கலால் கட்டிய சுவர்களின் மேலே பேரீச்ச இலைகளால் அமைந்த கூரையுடனேயே விளங்கியது! 'அவர்கள் கற்பிக்க வந்த மார்க்கத்தைப் போலவே அக்கட்டடமும் ஆடம்பரம் ஒன்றுமின்றி வெகு சாதாரணமாகவே இருந்தது.'* அந்தப் பள்ளியிலேயே அவர் ஐந்து வேளைத் தொழுகையை நடத்தியதோடு, அங்கேயே மக்களுக்கு உபதேசமும் செய்து வந்தார். பள்ளியை ஒட்டியிருந்த இரு அறைகளிலேயே அவர் குடும்பத்துடன் வசித்து வந்தார். ஒவ்வோர் அறையும் 10 முழ நீளம், 6 முழ அகலம் இருந்ததென்றும், கையை உயரே நீட்டினால் கூரையைத் தொடலாமென்றும் குறித்து வைக்கப்பட்டிருக்கிறது.

மக்காவிலிருந்து நபிபெருமான் மதினாவுக்குச் சென்றதை 'ஹிஜரத்' (நாட்டை விட்டுச் செல்லுதல்) என்பர். இந்த ஹிஜரத் நிகழ்ந்த மாதத்திலிருந்தே இஸ்லாமிய

---

* 'திருநபி சரித்திரம்.'

சகாப்தமான ஹிஜ்ரி ஆரம்பமாகிறது. மக்காவிலிருந்து வேறு பல முஸ்லிம்களும் மதினாவுக்குச் சென்றிருந்தனர். முஸ்லிம்களுக்கு மக்கா ஒரு சோதனைத் தலமாக இருந்தது. எதிரிகளின் இடையூறுகளை ஏற்று, இஸ்லாத்துக்காக எதையும் தியாகஞ்செய்து, இன்னல்களை இன்பமெனக்கொண்டு, அவர்கள் சோதனையில் வெற்றிபெற்று விளங்கினார்கள். எனவே மதினத்து மக்கள் அவர்களையும் அவர்களுடைய நபியையும் இருகரங்களாலும் வரவேற்றுத் தாங்களும் அவர்களுடைய சமயத்தைத் தழுவினார்கள். நாளுக்குநாள் அங்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வந்தது.

மக்காவிலிருந்த குறைஷிகள் நாயகத்தையும், முஸ்லிம்களையும் மறக்காமல் துவேஷித்து வந்தனர். மதினா மீது படையெடுக்கவும் ஏற்பாடு செய்துகொண்டு புறப்பட்டனர். 1,000 குறைஷி வீரர்களுக்கும், நாயகத்தின் தலைமையிலுள்ள சுமார் 300 மதினத்து வீரர்களுக்கும் பதர் என்ற இடத்தில் போர் நடந்தது. நாயகமே வெற்றி பெற்றார். பின்னர் யூதர்கள், சில அரபிக் கூட்டத்தார்களையும், குறைஷியரையும் சேர்த்துக்கொண்டு, 24,000 படையினருடன் மதினாவை முற்றுகையிட்டனர். முகம்மதுநபி முன்னதாகவே அவர்கள் வருகையை எதிர்பார்த்து, நகருக்கு வெளியே பெரிய அகழ் வெட்டிப் போருக்கு ஆயத்தமாயிருந்தார். சுமார் ஒருமாத முற்றுகையில் அவரும் முஸ்லிம்களும் பலநாள் உணவின்றித் துயருற வேண்டியிருந்தது. முடிவில் போருக்கு வந்த

வர்களிடையே பிணக்குகள் விளைந்து, முதலில் யூதர்களும் அடுத்தாற்போல் குறைஷியரும், பின்னர் மற்றையோரும் முற்றுகையைக் கைவிட்டுப் போய்விட்டனர். இதன் பின்னும் யூதர்களின் தொல்லை பொறுக்கமுடியாமல், நாயகம், அவர்கள் கோட்டை கொத்தளங்களோடு செழிப்புடன் வசித்து வந்த **கைபர்** பிரதேசத்திற்குச் சென்று போராடி வென்றார். இதனால் யூதர்களின் வலிமை முறிந்தது. இதன் பின்பு மக்காமீது படையெடுப்பு நடந்தது. அதிலும் முகம்மது வெற்றி பெற்று, கஅபாவிலிருந்த 360 விக்கிரகங்களையும் உடைத்தெறிந்து விட்டு, மக்கத்து மக்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தை உபதேசித்தார். கஅபா தொன்றுதொட்டே அரபி மக்களின் வணக்கத் தலம். அதையே எல்லா முஸ்லிம்களும் முதன்மையான வணக்கத் தலமாகக் கொள்ள வேண்டுமென்றும், அவர்கள் எங்கேயிருந்தாலும் கஅபா இருக்கும் திசை நோக்கியே வணங்க வேண்டுமென்றும் நாயகம் ஆறு ஆண்டுகளுக்கு முன்பே—ஹிஜ்ரி இரண்டாவது வருடத்தில்—ஏற்பாடு செய்திருந்தார். மக்காவின் வீழ்ச்சிக்குப் பின்னும் சில அரபி வகுப்பினர் முஸ்லிம்களை எதிர்க்கத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தனர். நாயகம் 15,000 வீரர்களுடன் **ஹுனைன்** பள்ளத்தாக்கில் அவர்களை முறியடித்தார்.

இவ்வாறு தற்காப்புக்காகவும், முன்னெச்சரிக்கைக்காகவும், இஸ்லாத்தின் இளமைப் பருவத்திலேயே முஸ்லிம்கள் போராட நேர்ந்தது. நாயகம் போர்களைத்

தலைமை வகித்து நடத்தியதோடு, யுத்த தருமம் பற்றிய புதிய நீதிகளையும் எதிரிகளுக்கும் தம் இனத்தாருக்கும் கற்பித்தார், அவசியம் நேரும்போது இஸ்லாத்தின் பாது காப்புக்காக முஸ்லிம்கள் 'ஜிஹாத்' என்னும் அறப்போர் புரிவது கடமையென்றும் போதித்தார். முஸ்லிம்கள் போர்களில் அடைந்த வெற்றிகளால் அரபி நாட்டில் எதிர்ப்பில்லாமற் போகவே, இஸ்லாம் மிக விரைவில் வளர்ந்து பெருக ஆரம்பித்தது. அத்துடன் நாடு முழு வதற்கும் அரசியல், பொருளாதார முறைகளிலும் நாய கமே வழி காட்டும் பொறுப்பும் ஏற்பட்டது.

தனி மனிதருடைய சமய வாழ்க்கைக்காக மட்டும் இஸ்லாம் ஏற்படவில்லை. மனிதர்கள் ஒருவரோடொரு வர் பழகுவதற்கும், பல வகுப்பினர்கள் சேர்ந்து வாழ் வதற்கும், பொதுவாகச் சமுதாய வாழ்க்கை அனைத்திற் குமே அதில் விதிகள் இருக்கின்றன. சமய வாழ்க்கை வேறு, மற்ற உலக சம்பந்தமான இலௌகிக வாழ்க்கை வேறு என்ற வேற்றுமை அதிலில்லை. மானிட வாழ்க்கை முழுதுமே சமய வாழ்க்கைதான். மனிதனுடைய செயல்கள் யாவும், ஒரே அடிப்படையில், ஒரே லட்சியத் தோடு நடைபெறவேண்டும், மனிதனை அரசியல் மனி தன், பொருளாதார மனிதன், சமயசம்பந்தமான மனிதன் என்று கூறிட்டுப் பார்க்கமுடியாது. அவனுடைய அர சியல், பொருளாதார விஷயங்கள் எவையும் சமய அடிப் படையிலேயே அமைந்திருக்கவேண்டும். ஆன்மீக வாழ் வுக்கு மட்டும் இறைவனை வைத்துக்கொண்டு, உலகச்

சார்பான விஷயங்களில் அவனையும், அவனால் விதிக்கப் பெற்ற ஒழுக்க முறையையும் ஒதுக்கிவிட இஸ்லாம் இடங்கொடுக்கவில்லை. உலக வாழ்வுக்கு அவசியமான செயல்களிலும், இவை பாவமானவை. (ஹராம்), இவை புனிதமானவை (ஹலால்) என்று இஸ்லாமிய விதிகள் கூறுகின்றன. எனவே, அருளாளனும், அன்புடையோனும், எல்லாப்புகழும், எல்லா வல்லமையுமுள்ள அல்லாவின் பிரியத்தை நாடியே முஸ்லிம்கள் தங்கள் வாழ்வு முழுவதையும் அமைத்துக் கொள்ளவேண்டும். இக் காரணம் பற்றியே நபிகள் நாயகமும், அரபி மக்களின் அரசியல், சமுதாய வாழ்வு முதலிய எல்லாத் துறைகளிலும் தலையிட்டுப் பரிசீலனை செய்து அவைகளைத் தமது மார்க்கத்திற்கு ஏற்ற புதிய முறையில் அமைத்து வைத்தார். இதனாலேயே இஸ்லாமிய சரிதையில் அரசர்களே சமயத் தலைவரான 'கலிபா' ஆகவும் இருந்து வந்தனர்.

நாயகம் நபிப்பட்டம் பெற்ற பிறகு 13 வருடம் மக்காவிலும், 10 வருடம் மதினாவிலும் தங்கியிருந்தார். ஹிஜ்ரி 11ஆவது ஆண்டில்—கி. பி. 632 ரபியுல் அவ்வல்மீ, 12உ திங்கட்கிழமை, அவர் தமது 63 ஆவது வயதில் பூதவுடலை நீத்தார்.*

அஞ்ஞான இருளிலும், அநாகரிக நிலையிலும் இருந்த அரேபிய நாட்டில் முகம்மது நபி ஞானச் சுடராக விளங்கினார் என்றே அவரைப் பற்றிய வரலாறுகள் விவரிக்

* நாயகம் பிறந்ததும் இதேமீ. இதே தேதி, இதே நாளில்.

கின்றனர். இனி, அவர் வாழ்க்கை எவ்வாறிருந்தது என்பதைக் கவனிப்போம்.

ஆண்டவனிடத்தில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். 'இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்' என்ற வாக்கியம் அவருக்கு முற்றிலும் பொருந்தும். அவர் மக்காவிலிருந்து மதினாவுக்குச் செல்லும்போது வழியில் '**தௌர்**' என்ற குகையில் தங்கியிருந்தார். அவருடன் **அபூபக்கர்** என்ற தோழரும் இருந்தார். அவர்களைப் பிடிப்பதற்காக நூற்றுக் கணக்கான கொலைஞர்கள் பின் தொடர்ந்து தேடிக் கொண்டிருந்தனர். குகைக்கு வெளியே காலோசைகள் கேட்டன. அபூபக்கர், 'நாம் இருவர் மட்டுமே இருக்கிறோம். அவர்கள் நிச்சயமாக நம்மைக் கொன்று விடுவார்கள்!' என்று கூறினார். அப்போது நாயகம், அவர்கள் இருவரைத் தவிர மூன்றாவது **நபர்** ஒருவரும்கூட இருந்ததை அவருக்கு ஞாபகப்படுத்தி, ' பயப்படவேண்டாம்! நம்முடன் ஆண்டவனும் இருக்கின்றானன்றோ!' என்று கூறினார். அவனன்றி ஓரணுவும் அசைவதில்லை யென்ற இந்த நம்பிக்கையே உருவாக அவர் விளங்கினார்.

'பெருமானின் குண ஒழுக்கம் திருக்குர்ஆனா யிருந்தது' என்று அவருடன் மிகவும் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்த மனைவியாரான **ஆயிஷா** நாயகியார் கூறியிருக்கிறார். நபியின் ஒழுக்கம் குர்ஆனாயிருந்தது, குர்ஆனின் விமரிசனம் நபியின் வாழ்க்கையா யிருந்தது

என்பதைப் பார்க்கினும் சிறப்புரை வேறு இருக்க முடியாது.

எளிய வாழ்க்கை. ஓயாத உழைப்பு, எதையும் தாமே செய்தல், மௌனம், தியானம், உள்ளத் தூய்மை, அன்பு, அடக்கம், நிதானம், முகமலர்ச்சி, சுயநலமறுப்பு, வீரம், பொறை முதலிய குணங்கள் அவருடைய அணிகலன்களாக விளங்கின, சிறுவயதில் அவர் கடைக்குப் போகும் போது, ஏழைகளின் வீடுகளுக்குப் போய் அவர்களுக்கு ஏதேனும் வாங்கி வரவேண்டுமா என்று கேட்பாராம். முதுமையில் தாம் வாங்கிய சட்டையைக்கூட மற்றொரு நண்பர் தூக்கி வரச் சம்மதிக்கவில்லை. 'நானும் ஓர் அடிமை; அடிமை போல உண்கிறேன், அடிமை போலவே அமர்கிறேன்' என்று அவர் சொல்லுவார். வீட்டைப் பெருக்குவது முதல் பால் கறத்தல், ஒட்டகத்தைப் பேணுதல், கிழிந்த உடைகளைத் தைத்தல், செருப்பைச் செப்பனிடுதல் முதலிய எந்த வேலையையும் அவர் இழிவாய்க் கருதியதில்லை.

மதினாவில் அவர் வீட்டில் ஒரு நாற்கட்டில், ஒரு தலையணை (உள்ளே ஈஞ்சு இலைகளுள்ளது), தோல் விரிப்பு, தண்ணீர் வைக்கும் தோல் கூசாக்கள் ஆகியவைகளே இருந்தன. ஒரு சமயம் அவற்றைக் கண்ட ஹஸ்ரத் உமர் கண்ணீர்விட்டு அழுதார். ரோமாபுரிச் சக்கரவர்த்தியும், பாரசீகச் சக்கரவர்த்தியும் ஆடம்பரமான இன்ப வாழ்க்கையில் ஆழ்ந்திருக்கும் போது, ஆண்டவனுடைய தூதர் அவ்வாறு வறுமையில் வாழ

லாமா என்று அவர் கேட்டார். அதற்கு முகம்மது, ' அவர்கள் இந்த உலகை அடையவும், நான் மறுமையை (பேரின்பத்தை) அடையவும் உங்களுக்குப் பிரிய மில்லையா ?' என்று பதில் கேள்வி கேட்டார்.

அவர் தாம் உபதேசித்தப் படியே, தான தருமங்கள் செய்து வந்தார். ஒரு சமயம் அவர் மேலாடை இல்லா திருந்ததால், ஒரு பெண்மணி ஓர் ஆடையைக் கொண்டு வந்து கொடுத்தாள். சிறிது நேரத்திற்குள் அந்த ஆடை அங்கு வந்த வேறொருவர் கைக்குப் போய்விட்டது. நாயகம் கேட்டதை மறுப்பதில்லை யென்று தெரிந்திருந் தும், அவருடைய ஒற்றை மேலாடையையும் அவ்வாறு வாங்கிக் கொள்ளலாமா என்று ஆடை வாங்கியவரை நண்பர்கள் கடிந்து கொண்டார்கள். நாயகத்தைப் பார்க்கினும் அந்த ஆடை அவருக்கு அவசியமாயிருந்தது. தாம் இறந்தபிறகு தம் உடலைப் பெருமானுடைய ஆடை யில் பொதிந்து அடக்கம் செய்யவேண்டுமென்று அவர் விரும்பியிருந்தார் !

குழந்தைகளிடத்தில் நாயகத்திற்குப் பிரியம் அதிகம். அவர்களைக் கையிலெடுத்து முத்தமிட்டு விளையாடுவார். அநாதைக் குழந்தைகளிடம் அவருக்கு அளவற்ற அன் புண்டு. ' இரண்டு விரல்கள் ஒன்றையொன்று தொட் டுக் கொண்டிருப்பது போல், அநாதைக் குழந்தையைப் பாதுகாப்பவனும் நானும் மறுவுலகில் ஒரே யிடத்தில் இருப்போம் ' என்று அவர் கூறிவந்தார்.

இத்தகைய நேர்மையான வாழ்க்கையும், சாந்தியும், சமாதானமும் விளக்கும் உபதேசங்களும் மக்களைப் பண்படுத்தியதில் வியப்பில்லை. அவர் முயற்சியால் கல்வி பெருகிற்று. பல முஸ்லிம்கள் வெளி நாடுகளுக்கும் சென்று கல்வி பயின்றனர், தாங்களும் கல்வியைப் பரப்பி வந்தனர். நாணயத்திற்கு வட்டி வாங்குதல் விலக்கப் பட்டது. மதுபானமும், சூதாட்டமும் ஒழிக்கப்பட்டன. மனித உருவங்கள், விலங்குகளின் உருவங்கள்கூட வீடு களில் சித்திரங்களாகவோ, சிலைகளாகவோ இல்லாமல் விலக்கப்பட்டன. வேடங்கள் புனைந்து நாடகமாடு தலும் தடுக்கப்பட்டது. இக்காலத்திய பேசும் படங் களைக் கண்டால் நாயகம் என்ன செய்திருப்பார் என் பதை நாமே யூகித்துக் கொள்ளலாம்.

அவர் காலத்தில் ஏராளமான யூதர்களும், கிறிஸ்தவர்களும் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். மத விஷயத்தில் எவரையும் வற்புறுத்தவோ, கட்டாயப் படுத்தவோ கூடாதென்பது அவர் கொள்கை. 'உங்களுடைய ஆண்டவனுடைய பாதையில் எவரையும் அழைப்பதானால், அறிவான வார்த்தைகளா லும், அழகிய போதனைகளாலும் அழையுங்கள். அவர் களுடன் நீங்கள் விவாதம் செய்ய வேண்டியிருந்தால் அழகிய முறையிலே விவாதம் செய்யுங்கள்' என்பது குர்ஆன் வாக்கியம்.

மனிதர் ஒவ்வொருவரும் தம் செயல்களுக்குத் தாமே பொறுப்புள்ளவர் என்பதை அவர் ஒவ்வொரு சமயத்தி

லும் வற்புறுத்தி வந்திருக்கிறார். ஒரு சமயம் அவருடைய அருமைப் புதல்வி **பாத்திமா** நாச்சியார், தாம் நாயகத்தின் குமாரி யென்பதால் தமக்கும் அந்த விதியுண்டா என்று கேட்டதற்கு, அவருடைய (பாத்திமாவுடைய) செயல்களைத் தவிர கியாமத்து (தீர்ப்பு) நாளில் வேறெதுவும் அவரைக் காக்க முடியாதென்று நாயகம் கூறினார்.

நபிகள் நாயகம் அருளிய நல்லுரைகள் பலவற்றை 'ஹதீஸ்' என்ற பெயருடன் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவைகளில் சில வருமாறு:

'அறிவு மனிதனுடைய தவறிப்போன பொருள்; அதை எங்கு கண்டாலும், பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்.

'சீனாவுக்குச் சென்றாயினும் கல்வியைத் தேடுங்கள்.

'கல்வியைத் தேடுதல் முஸ்லிமாகிய ஆண், பெண் அனைவர் மீதும் கடமையாகும்.

'ஒரு மணி நேரம் ஆராய்ச்சி செய்தல், ஒரு வருடம் வணங்குவதைவிட மேலானது.'

*  *  *  *

'தருமகுணமுள்ளவன் ஆண்டவனை நெருங்கியிருப்பவன், சுவர்க்கத்தை நெருங்கியிருப்பவன், மனிதர்களிடம் நெருங்கியிருப்பவன், அவன் நரகத்தை விட்டுத் தொலைவிலிருக்கிறான்.

'எவன் ஜனங்களிடம் இரக்கம் காட்டவில்லையோ, அவனிடம் ஆண்டவன் இரக்கம் காட்டமாட்டான்.

'தன் சகோதரனுடைய தேவையை எவன் பூர்த்தி செய்வானோ, அவன் தேவையை ஆண்டவன் பூர்த்தி செய்வான்.

'அண்டை வீட்டுக்காரன் பட்டினியாயிருக்கையில் தான் வயிறு நிறைய உண்பவன் மூமினல்லன்.*

'உங்களிடையே குணத்தில் சிறந்தவனே எனக்குப் பிரியமானவன்.

'ஆடையற்றவர்க்கு ஆடையளிக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் ஆண்டவனால் சுவன லோகத்துப் பசுமையான ஆடையால் உடுக்கப்படுவான்.

'ஓர் அநாதையை நல்லவிதமாக நடத்தும் வீடே எல்லா வீடுகளையும்விட ஆண்டவனுக்கு மிகப் பிரியமானது.

'உயிருள்ள பிராணியின் மீது இரக்கம் காட்டப்படுமானால், நன்மையான பயனுண்டு.

'மனிதருக்கோ, அல்லது மிருகத்திற்கோ உணவுக்கு ஆகக்கூடிய விதையை எந்த முஸ்லிமாவது விதைத்தால், அதுவும் தருமமே யாகும்.

'கூலி வேலை செய்தவனுடைய வியர்வை ஆறுவதற்கு முன்னால் அவனுடைய கூலியைக் கொடுத்துவிடுங்கள்.'

* * * *

---

* மூமின் — ஈமானுள்ளவன், ஆண்டவனிடம் விசுவாசமுள்ளவன்.

'அளப்பதாயிருந்தால், நிறைய அளந்து கொடுங்கள் எதையும் நிறுப்பதாயிருந்தால், தராசு முனை நேராக இருக்கும்படி வைத்து நிறுங்கள்.

'ஒரு பொருளின் குற்றங் குறைகளை ஒருவன் அறிந்திருந்தும், அக் குற்றங்களைத் தெரிவிக்காமல் விற்பனை செய்தல் கூடாது.

'ஒருவன் தானியத்தை நாற்பது நாள் வரை சேகரித்து வைத்திருந்தால், அவன் ஆண்டவனை விட்டு விலகி விட்டான். ஆண்டவன் அவனை விட்டும் நீங்கி விட்டான்.

'செல்வ மென்பது பொருள் சேர்ந்திருப்பதன்று; தேவையற்றிருத்தலே செல்வம்.'

* * * *

'பேராசையும் ஈமானும் (தெய்வ விசுவாசம்) ஒரே இதயத்தில் ஒன்று சேர்ந்து இருக்க மாட்டா.

'தான் செய்த உபகாரத்தைச் சொல்லிக் காட்டுபவனும், தாய் தந்தையரின் கட்டளைக்குக் கீழ்ப் படியாதவனும், எந்நேரமும் குடிப்பவனும் சுவர்க்கம் புகமாட்டார்கள்.'

* * * *

'யுத்தம் என்பது ஏமாற்று.'

* * * *

'சுவர்க்கம் தாயின் பாதங்களின் அடியில் இருக்கிறது.'

14680
UNIVERSITY EXTENSION LIBRARY
30 APR 1961
MADURAI

அச்சிட்டோர்: அசோ[illegible] [illegible]ண்டர்ஸ், மதுரை